Koviloor Digital Library

பி.ஸ்ரீ.

ஆழ்வார்கள் வரலாறு

5

Acc No 26735
Q 22

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஆழ்வார்கள் வரலாறு

(ஐந்தாம் பாகம்)

பெரியாழ்வார்

பி.ஸ்ரீ

KOVILOOR ANDAVAR
A. No. 26735
LIBRARY, KOVILOOR

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
ப. எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை
மயிலாப்பூர், சென்னை - 600 004

Koviloor Digital Library

உரிமைப் பதிவு
முதற் பதிப்பு - 2002
இரண்டாம் பதிப்பு - 2010
மூன்றாம் பதிப்பு - 2013

© பதிப்பாளர்

விலை: ரூ. 75-00

Typesetting : Amaravathi Graphics, Chennai-33
Printed by : Logha offset Printers, Chennai-14

Koviloor Digital Library

4-2

முகவுரை

'பகவானை வளர்த்த பக்தர்' பெரியாழ்வார். ஆண்டவனிடம் பொங்கும் பரிவாலே இவர் தமக்குரிய பெயரைப் பெற்றார் என்று மணவாளமாமுனிகள் கூறுவர். இந்த ஆழ்வாரின் திருப்பல்லாண்டு திருவாராதனக் கிரமத்தில் சேர்ந்துவிட்டது. அதாவது, வைணவர் வழிபாட்டின் பகுதியாகிவிட்டது. 'பெருநான்மறை ஓதிய கீதம் எல்லாம் பாவளரும் தமிழ்ப் பல்லாண்டிசையுடன்' இவர் பாடியுள்ளார் என்பது வேதாந்த தேசிகன் வழங்கிய புகழுரை.

பூமாலை தொடுத்துச் சேர்த்துப் பகவானின் திருமேனி யழகை அநுபவித்த ஆழ்வார் பாமாலை தொடுத்து உள்ளும் புறமுமாக அழகனது அநந்த கல்யாண குணங்களை அநுபவித்துப் பாடி வையகம் வாழ்வதற்குச் செய்த பேருபகாரம் வேறு எந்தப் பக்தனுக்கும் கிட்டாத ஒரு ரஸாநுபவம். உண்மையில் பகவானை வளர்த்தார் பெரியாழ்வார்; தாயன்புடன் வளர்த்த அந்த அழகை இவரது திருமொழிகள் உணர்த்துகின்றன.

'பகவான்' என்ற பெயர் திருமாலின் திருஅவதாரங்களில் கிருஷ்ணனுக்கே உரியது. 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்ற அஞ்சலி தனிப்பொருள் உடையது. அந்த அழகனைத் தான் இவர் எல்லா மூர்த்திகளிடமும் கண்டு ஆனந்தித்தார். இவரால் பாடப்பெற்ற திவ்யதேசங்கள் இருபது. ஆனால் பாட்டில் உறைவதெல்லாம் கண்ணபிரானும் அவனது லீலாவிபூதிகளுந்தான்.

இத்தகைய ஈடுபாட்டின் வரலாற்றைத்தான் பி.ஸ்ரீ. இந்த அரிய நூலில் அழகுபெற அமைத்து இன்றைய தமிழகத்துக்கு வழங்கியுள்ளார். குருபரம்பரைக் கதைகள், வடிவழகிய நம்பி தாஸரின் 'பெரியாழ்வார் வைபவம்', வியாக்கியானங்கள்

Koviloor Digital Library

முதலியனவும் பெரியாழ்வார் பாசுரங்களுடன் இந்த நூலாசிரியருக்கு ஆதார நூல்களாக அமைந்திருக்கின்றன.

மலர்வனம் அமைத்து வடபெருங்கோயிலுடையானுக்கு மாலை சமர்ப்பித்துப் பணி புரிந்து வந்த விஷ்ணுசித்தர் பாண்டியனுக்கு மெய்ப்பொருள் உணர்த்திக் கிழியறுத்துக் கொணர்ந்து அப்பொன்னைக் கொண்டு ஆலயத்தைப் புதுப்பித்துத் தமிழர்களின் பக்திமதத்தை என்றும் புதுமையாக்கி வைத்த கதையை மெய்சிலிர்க்கத் தொகுத்துத் தந்திருக்கிறார் பி.ஸ்ரீ.

இயற்கையின் எழிலும் தெய்விக அழகும் ஒருங்கே காட்சி தரும் சிறப்பு நிறைந்தவை பெரியாழ்வாரின் பாசுர நந்தவனம். இதில் காணும் இரண்டு அம்சங்களையும் இணைத்தும் பிரித்தும் சுவைத்துத் தாம் கண்ட இன்பத்தைப் பிறரும் நுகருமாறு பெரியாழ்வாரின் வாக்கினுக்கும் வாழ்க்கைக்கும் பி.ஸ்ரீ. விளக்கம் தந்திருப்பதைக் காணக்காண, பக்தியும் ரஸாநுபவமும் கூடி வளரும் உணர்ச்சி நமக்கும் ஏற்படுகிறது.

வேதம் அனைத்தின் வித்தகப் பொருளைத் தன் சபையிலே காட்டிக் கிழியறுத்த பட்டர்பிரானை உலாக் கொணர்ந்தான் பாண்டியமன்னன். அச்சமயம் கருடன்மீது பரமன் அளித்த திவ்யதரிசனம் ஆழ்வாரையும் மன்னனையும் ஒருங்கே ஆட்கொண்டது என்பது கதை. அக்காட்சி அதிசயத்திலே இறைவனது திருமேனி எழில் கண்ணெச்சிலுக்கு உட்படுமோ என்று தாயன்பு சுரக்கிறது ஆழ்வாரிடம். திருஷ்டி கழிக்கும் வகையில் பல்லாண்டு பாடி மங்களாசாஸனம் செய்கிறார். இந்தக் கதைப்பகுதியும், பல்லாண்டுப் பாசுரங்களின் புற அகப் பொருள்களின் விளக்கமும், ஆண்டவனை ஆழ்வார் உண்மையில் இப்படியும் வளர்த்தார் என்பதை மெய்ப்பிக்கின்றன.

பொதுவாகத் திருமாலின் எல்லா அவதாரங்களையும் அநுபவித்துள்ளார் பெரியாழ்வார். ராமகதையிலும் இவருள்ளம் ஊறிக்கிடத்தலை அநுமன் சீதையிடம் அடை

யாளம் கூறும் தேனினும் இனிய பாசுரங்களில் கண்டு வியக்கிறோம். ஆனால் இவரது தாயன்பு பகவான் கிருஷ்ணனது இன்பத்தில்தான் திளைக்கின்றது. நாற்பத்து நான்கு திருமொழிகளின் நாயகன் அவனே. யசோதையாக இவர் இருந்து அவனை அநுபவிக்கும் அழகு சொல் லொணாதது. ஸ்ரீஜயந்தி, தாலாட்டு, நீராட்டு, அம்புலி காட்டுதல், புழுதி அளைதல், ஆடுதல், கை கொட்டுதல், தளர் நடை, பால லீலைகள், வேய்ங்குழலின் விசித்திரம், பாண்டவமித்திரம், ஆலிலை மேல் பாலன் நிலை - இப்படிப் பல நிலைகளில் பகவானை வளர்த்து வளர்த்து நம் அகக்கண்ணுக்குமுன் காட்டி அவனது சாந்நித்யத்தில் மெய்ம்மறக்கச் செய்வது பெரியாழ்வாரின் திருமொழி. இப்பாடலமுதத்தைத் திரட்டி இசைந்த விளக்கத்துடன் பி.ஸ்ரீ. வழங்கியிருக்கும் பகுதி நூலுக்கு முத்தாய்ப்பாக அமைந்திருக்கிறது.

தான்வேறு, தான் வளர்க்கும் கண்ணன் வேறு - அடிமை வேறு, ஆண்டவன் வேறு என்று பெரியாழ்வாரின் மனம் என்றுமே பேதித்ததில்லை. 'உன்தன் விக்கிரமம் ஒன்றொழியா மல் எல்லாம் என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்!' என்று இரண்டறப் பேசுகின்றார் ஆழ்வார். இது மட்டும் அல்ல. 'உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன். என்னையும் உன்னில் இட்டேன்!' என்கிறார். இந்த விசிஷ்ட அத்வைத தத்துவப் பிரகாசமும் இந்த நூலில் தெளிவாகக் காட்டப்பெற்றுள்ளது.

ஆழ்வாரது கொள்கைகளை நன்கு விளக்கும் பாசுரங்களைத் தேர்ந்தெடுத்து, முன்னோர் அடிச்சுவட்டில் பி.ஸ்ரீ. விளக்கம் தரும்போது, வாழ்க்கையே கைங்கர்ய ரூபம், ஆண்டவனது கைங்கரியமே சிறந்த சேவை, இதைச் செய்யும் தொண்டர்குலமே பண்டைக்குலத்தினும் உயர்ந்தது என்ற பக்தி மதப் பெருங்கொள்கை நன்கு நிலைநிறுத்தப் பெறுகின்றது.

ஏ.ஜி. வேங்கடாச்சாரி.

Koviloor Digital Library

பொருளடக்கம்

1.	வில்லிபுத்தூரர்	...	7
2.	குழந்தை, மனிதனின் தந்தை	...	16
3.	நந்தவன நிழலிலே	...	26
4.	முத்துக்குடை நிழலில்	...	42
5.	பகவானை வாழ்த்தினார்	...	58
6.	பாண்டிய சக்கரவர்த்தி	...	68
7.	வாழ்க்கையும் வாழ்க்கைத் தத்துவமும்	...	76
8.	பெரியாழ்வாரும் செல்வநம்பியும்	...	89
9.	தேசயாத்திரையும் ஜீவயாத்திரையும்	...	103
10.	கதையுலகில் இவர் செய்த யாத்திரை	...	111
11.	கண்ணன் கதைத் தோப்பிலே	...	121
12.	இவர் கண்ட கண்ணன்	...	131
13.	இவர் வளர்க்கும் கண்ணன்	...	140
14.	கைவரிசையும் கண்ணாம்பூச்சியும்	...	155
15.	இவர் காட்டும் வேணுகோபாலன்	...	160

Koviloor Digital Library

பெரியாழ்வார்

1

வில்லிபுத்தூரார்

ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஒரு காலத்தில் புதுவை என்று பெயர் பெற்றிருந்தது. இந்நாளில் புதுவை என்று புதுச்சேரியைக் குறிப்பிடுகிறோம். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஒரு புதிய நகரமாகப் பிரசித்திபெற்று வந்ததென்று ஊகிக்கலாம். இதன் பெருமைக்கும் வளர்ச்சிக்கும் அதிமுக்கியமான காரணம் இவ்வூரில் பெரியாழ்வாரும் ஆண்டாளும் தோன்றித் திகழ்ந்ததாகும்.

தந்தையும் மகளும்

ஆழ்வார் திருக்கூட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் ஒரு தனிப் பெருஞ் சிறப்பு உண்டு. பகவான் பக்தர்களையெல்லாம் பேணி வளர்த்து வருகிறாரல்லவா? பெரியாழ்வாருக்கோ, தமது பக்திப் பெருக்காலும் கவித்வ சக்தியாலும் தாமே தாயாகிக் கண்ணனை வளர்க்கலுற்றார் என்ற பெருமையும் உண்டு.

மானஸிகமாக இவர் வளர்த்த பிள்ளை கண்ணன்; ஸ்தூல உலகில் இவர் வளர்த்த அருமை மகள் ஆண்டாள். இந்தத் திருமகள் இவர் வளர்த்த புருஷோத்தமனையே மாலையிட்டு

Koviloor Digital Library

மணந்துகொள்ள விரும்பினாள். அப்படியே மனம் கலந்து மணம்புரியும் பெரும்பேறு பெற்றாள் என்பது பக்தசரித்திர உலகிலே ஓர் அதிசயப் பெருநிகழ்ச்சியாகும். தந்தையும் மகளும் ஆழ்வார்களின் திருக்கூட்டத்தில் சிறப்பாக இடம் பிடித்திருப்பதே அதிசயந்தானே!

கண்ணனைக் குழந்தையாகவும் தெய்வமாகவும் கண்டுகொண்ட இப்பெரியாரின் பக்திக்காதல் பெரும்பாலும் தூய தாயன்பாக இவர் பாடல்களில் பிரதிபலிக்கின்றது. ஆண்டாளின் காதலோ காதலியின் காதல்; எனவே, கொந்தளிக்கும் கடல்; பெரியாழ்வாரின் அன்புக்கடலிலோ அபூர்வ அமைதி தவழக் காண்கிறோம்.

'தாயிலானைத் தழுவும் என் ஆவியே!' என்ற பக்திப் பெருங்காதல் நெறியிலே, காதலியாகத் தழுவ விழைந்தது ஆண்டாள் காதல்; அந்தக் காதலுணர்ச்சியென்ற பெரும் புயலில் ஆண்டாள் உள்ளம் அலைபட்டது; சுழிபட்டது. ஆனால் தாயிலானுக்கும் தாயாகிய பெருமிதத்தையும் சாந்தியையும் பார்க்கிறோம் பெரியாழ்வாரின் பேரன்பிலே.

வில்லிபுத்தூரரின் கதை

இவர்கள் தோன்றிய வில்லிபுத்தூர் என்ற புதுவை முன்னாளில் காடாக இருந்ததென்றும் இப்புதிய ஊரை அமைத்தவன் வில்லி என்ற பெயருடைய வேடன் என்றும் சொல்லுகிறார்கள். இந்தக் கதைக்கு இப்பெயரிலேயே சான்று கிடைக்கிறது.

இக்காட்டிலே முனிவர்கள் தவம் கிடந்து இறைவனை ஆராதித்து வந்தனராம். பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பெருமானை அந்தத் திருஉருவத்தின் அறிகுறியான ஒரு சிலைவடிவில் அம்முனிவர்கள் வழிபட்டு வந்தார்களாம்.

இந்த இறைவனுக்கு 'வடவேச்வரன்' என்றும், 'வடபத்ர சாயி' என்றும், 'வடபெருங் கோயிலுடையான்' என்றும்

Koviloor Digital Library

பெயர் சூட்டியிருந்தார்கள். இப்பெருமான் கோயில் கொண்டிருந்த தலத்தை 'வடவேச்சுரபுரம்' என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரதேசம் நாளடைவில் சிங்கம், கரடி, புலி, மதயானை முதலிய விலங்குகள் வாழ்ந்த ஒரு கானகமாகிவிட்டதாம். இக்காட்டிலே தோன்றியது வில்லிபுத்தூர் என்பர்.

இப்பிரதேசத்தை வேடர்களே வேந்தர்களாக ஆண்டு வந்தனர். இக்குலத்திலே மல்லி என்ற வேட்டுவ அரசி தோன்றி, இப்பிரதேசத்தை ஆண்டு வந்ததால் இதற்கு 'மல்லி நாடு' என்ற பெயர் ஏற்பட்டது.

இந்த மல்லிக்கு 'வில்லி' என்றும், 'கண்டன்' என்றும், இரு புதல்வர்கள் பிறந்தார்கள். இவர்கள் பாலப்பருவம் நீங்கி அரசாளத் தொடங்கியதும், ஒருநாள் வேட்டையாடப் போனார்கள்.

தம்பியான கண்டன் தன் கைவேலுடன் ஒரு புலியைத் தொடர்ந்து ஓடினான். அது விரைந்தோடி மறைந்ததும், இவன் சுவடு எடுத்து அதன் ஒளிப்பிடம் தேடித் திரிந்தான். திடீரென்று அந்தப் புலி ஒரு புதரிலிருந்து வெளிப்பட்டு எதிரே பாய்ந்து வந்து இவனைக் கொன்றுவிட்டது.

தம்பியைத் தேடித் தடம் பிடித்துவந்த வில்லி, புலியால் கொல்லப்பட்டுக் கிடந்தவனைக் கண்டு இரங்கி ஏங்கி, அப்படியே சோர்ந்து விழுந்து மூர்ச்சித்துப் போனான். இந்த நிலையில் இந்த வில்லி ஒரு கனவுகண்டு, அதன் பயனாக இந்தத் தலத்தைப் புதுப்பித்து ஒரு புத்தூர் அமைக்க வேண்டுமென்று தீர்மானித்தானாம்.

கனவிலே வடபத்திரசாயி காட்சி கொடுத்து இறந்த கண்டனையும் எழுப்பிக் கொடுக்க, வில்லி அதிசயமடைந்து தம்பியைத் தழுவிக்கொண்டு கனவையும் தெரிவித்தான். பிறகு இருவரும் புலி செத்துக் கிடப்பதையும், அந்தப் புதரில் பெரும் பொருள் கிடப்பதையும் கண்டுகொண்டார்கள். அப்பால்

Koviloor Digital Library

அவர்கள், 'கனவில் உருவாகி வந்த கருணாகரன் எங்கே, எங்கே?' என்று காடெல்லாம் தேடிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

கடைசியாக வில்லி ஒரு பெரிய ஆலமரத்தை அடைந்து அங்கே சோதித்துப் பார்த்துப் புதர் மண்டிக்கிடந்த ஒரு பழைய கோயிலைக் கண்டுபிடித்தானாம். இக்கோயிலில் சர்ப்ப சயனமூர்த்தியைக் கண்டு பணிந்து இம்மூர்த்திக்கு இசைந்த தொரு புதுக்கோயில் அமைப்பதற்கு, ஏற்கனவே கிடைத் திருந்த பொருளையெல்லாம் செலவிட்டான். இப்புதுக் கோயிலைச் சுற்றி வளர்ந்த புத்தூரே வில்லிபுத்தூர் என்பர்.

இப்புத்தூரில் குடியேறிய அறிஞர்கள் 'வேதவாய்த் தொழிலாளர்கள்' என்று பிரசித்திபெற்று விளங்கினார்கள். இவ்வூரைத் தலைமைப் பதியாகக் கொண்ட நாட்டுக்கு 'மல்லி நாடு' என்று தன்னைப் பெற்றவள் பெயரிட்டு மகிழ்ந்தவனும் வில்லி என்ற வேடர் தலைவனே என்பர். பழைய ஊரைப் புதுமை செய்துவைத்ததால் இப்புத்தூரைப் புதுவை என்றும் வழங்கலாயினர்.

வில்லிபுத்தூரை வில்லி ஒருசோலை சூழ்ந்த அழகு நிலையமாக்கினான். இத்தலத்திலே தம்பியான கண்ட னோடும் வாழ்ந்து வில்லி, 'வேதவாய்த் தொழிலாளர்'களின் கூட்டுறவால் சாதுவாகிப் பாகவதனாகிப் பேறு பெற்றான்.

பெரியாழ்வார் பிறந்தார்

இவ்வில்லிபுத்தூரில் தோன்றிய வேதநூல் வல்லவர் களில் முகுந்த பட்டர் என்பவர் ஒருவர். இவரை முகுந்தா சாரியார் என்றும் கூறுவதுண்டு. இவர் தம் மனைவியான பத்மவல்லியம்மையுடன் இல்லறம் நடத்திவந்தார். இவர் வடபெருங் கோயிலுடையானை அடிபணிந்து ஒரு நல்ல பாகவதராக விளங்கினார்.

இப்பெருமானது திருமுற்றத்திலே பல பிரதேசங்களி லிருந்தும் அறிஞர்களும் அன்பர்களும் வந்துகூடி வேத

Koviloor Digital Library

வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள்; பகவானுடைய திருப்பெயர்களை ஓதுவார்கள்; ஆடுவார்கள், பாடுவார்கள். இவர்களுடன் முகுந்த பட்டரும் கலந்துகொள்வார்.

பகவானைப் பணிந்த பக்தி செய்ததற்குப் பரிசே இந்த அடியார்களுக்கு ஆட்படுவதுதான் என்று துணிந்தார் முகுந்தபட்டர். அன்பர் பணி செய்யத் தம்மை ஆளாக்கிவிட்ட திருவருளை வாழ்த்தி, மேலும் மேலும் கைங்கரியத்தில் ஈடுபடலானார்.

இப்பெரியாருக்கும் பதுமையார் என்ற பத்மவல்லி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றியவரே பெரியாழ்வார் என்று பேரும் புகழும் பெற்றிருக்கிறார். இவர் ஆனிமாதத்துச் சுவாதி நட்சத்திரத்தில் தோன்றினார்.

ஆனியெனும் திங்களினில்,
வளர்பிறையில் அருஞ்சோதி
மேனியனார், சோதியினில்,-

(திங்களினில் - மாதத்தில். சோதியினில் - சுவாதி நட்சத்திரத்தில்.)

தோன்றியதாக வடிவழகிய நம்பி தாஸர் தமது 'பெரியாழ்வார் பிரபந்தத்'தில் கூறியுள்ளார்.

குரோதன வருஷம் ஆனி மாதம் சுக்கில பட்சம் ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் பெரியாழ்வார் அவதரித்து, வடபெருங் கோயிலுடையானது திருவருளால், 'மயர்வற மதிநலம்' அருளப்பெற்றதாகக் குருபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இவரை வேத சொரூபமான கருடனுடைய அம்சம் என்றும் இக்கதைகள் சிறப்பித்துப் பேசுகின்றன.

இறைவன் தன் வாகனமாகிய பெரிய திருவடி என்று சொல்லப்பெறும் கருடனை நோக்கி, ''நம்முடைய லீலா விபூதியில் (விளையாட்டுக் களமாகிய உலகத்திலே) மக்கள்

Koviloor Digital Library

அஞ்ஞானம் என்னும் கொடிய நாகத்தால் கடியுண்டு விஷம் ஏறி மடியப் பார்க்கிறார்கள். அந்த விஷத்தைப் போக்கி மாந்தர்களைத் தெளிவுபெறச் செய்யக் கருடனாகிய உனக்கே தகுதி உண்டு. நீ போய் முகுந்த பட்டரின் புதல்வனாகப் பிறந்து, உலகை வாழ்வித்து வரவேணும்'' என்று நியமித்தானாம். வேதம் என்ற ஞானத்தின் சொரூபமே விஷ்ணுவின் வாகனம் என்பர்.

இந்தப் புதல்வருக்கு முகுந்த பட்டர் **'விஷ்ணுசித்தன்'** என்று பெயரிட்டார். இவரும் பிரகலாதனைப்போல் இளமையிலேயே எங்கும் நிறைந்த விஷ்ணுவின் சித்தத்தைக் கல்லாக் கலையாகக் கற்றுணர்ந்து கொண்டாராம். பிரகலாதன், வேதம் கற்பதற்கு முன்பே வேதமுதல்வனை உணர்ந்து கொண்டானல்லவா? அத்தகைய ஞானசம்பத்து விஷ்ணு சித்தருக்கும் கருவிலே திருவாக அமைந்துவிட்டது என்பர்.

இவரது தோற்றத்தைப் பேசும்போதே தெய்வகுதூகலம் பொங்குகிறது வடிவழகிய நம்பி தாஸருக்கு,

வானில்வரும் முகில்ஒலியும்
மறைஒலியும் மாறுசெய
பால்நிலா முகத்தியர்கள்
பல்லாண்டின் இசைபாட

(முகில் ஒலி - மேக கர்ஜனை. மறை ஒலி - வேத கோஷம். மாறுசெய - போட்டியிட.)

தோன்றினாராம், பகவானுக்கே பல்லாண்டு பாடும் பேறு பெற்ற பட்டர்பிரான்.

மேலும் பாடுகிறார் வடிவழகிய நம்பிதாஸர்:

அறம்தழைப்ப, மெய்ஞ்ஞானம்
யாவர்களும் அறிந்(து) உய்ய,
மறம்தீய வேரோடு
மடியவஞ்சம் பாழாக,

Koviloor Digital Library

திறம்திறம்பா(து) உயர்ந்தோங்க
தீவினைகால் குலைந்(து) ஓட,-

(தீயவேரோடு - கெட்ட ஆணிவேருடன். திறம் திறம் பாது - திறமை, தவறான வழியில் செல்லாமல். கால் குலைந்து - நிலை குலைந்து.)

அவதரித்தார் இப்பெரியார் என்று.

விஷ்ணு சித்தர்: சித்தமும் சிறப்பும்

இளமையிலேயே பகவானது சித்தத்தை உணர்ந்து கொண்டு பணிபுரியத் தொடங்கியவருக்கு ஏதோ ஒரு தீர்க்க தரிசனமாக இட்ட பெயரே விஷ்ணுசித்தர் என்றுகூடத் தோன்றுகிறது வடிவழகிய நம்பிதாஸருக்கு:

பூதமுதல் நாயகன்சீர்ப்
பூங்கழற்கீழ்ப் பசுந்துளவால்
ஏதமிலாப் பூமாலை,
பாமாலை யெனும்இரண்டும்
ஆதரவி னால்கட்டி
அருளவல்ல ஆழ்வார்க்கு,
வேதநெறி விஷ்ணுசித்தன்
எனும்நாமம் வியந்துரைத்தார்

(பூதமுதல் நாயகன் - பூதங்களுக்கெல்லாம் காரணமாகிய தலைவன். சீர்ப்பூங்கழல் - சிறந்த அழகிய திருவடிகள். பூங்கழற் கீழ் - பூங்கழலின் கீழ். பசுந்துளவால் - (இங்கே) பசுமையான துளசி முதலியவற்றால். ஏதம் இலா - குற்றம் இல்லாத. ஆதரவினால் - அன்பினால்.)

தம் உள்ளத்திலிருந்து இறைவன் இவருக்கு உணர்த்திய பணி, பூமாலை கட்டுவதும் பாமாலை கட்டுவதுமாகும். 'வேதவாய்த் தொழில்' போதாதென்று இவர் நந்தவனத் தொழிலிலும் ஈடுபட்டார். ஏடும் எழுத்தாணியுமாக இருந்தவர் மண்வெட்டியும் கையுமாகிக் காட்டு நிலத்தையும்

Koviloor Digital Library

பூஞ்சோலையாக்கினார், ''பூமகளின் புன்னகையோ!'' என்று சொல்லும்படி.

கைங்கரியம் இல்லாத பக்தி பாழ்நிலந்தான் என்று கருதியதுபோல் விஷ்ணு சித்தர் தமக்கு உரிமையாகக் கிடைத்த உடைமைகளையெல்லாம் நந்தவன கைங்கரியத்திலே செலவிடத் தொடங்கினார். பூமாலை கட்டிப் பகவானை அழகு செய்து பார்த்தவருக்குப் பாமாலை புனைந்து அதே இஷ்ட மூர்த்தியை அழகு செய்து பார்ப்பதிலும் ஆசை அதிகரித்தது.

அழகான பூக்களைத் தொடுத்து மாலை கட்டுவதுபோல், அழகான தமிழ்ச் சொற்களைத் தொடுத்து வாடாத மாலைகள் கட்டி, என்றும் வாடாத தெய்வ அழகிற்கு உரிமையாக்கி மகிழ்ந்தது விஷ்ணுசித்தரின் சித்தம்.

பாமாலை கட்ட இன்சொல்
 பாவாணர் தேடுதல்போல்,
பூமாலை கட்டமலர்
 போய்எடுக்கும் பாங்கியர்கள்

(பாங்கியர்கள் - தோழிமார்.)

என்று ஒரு பிற்காலப் புலவர் பூமாலையையும் பாமாலையை யும் ஒப்பிட்டுப் பாடியிருக்கிறார்.

ஆனால் விஷ்ணு சித்தரோ பாமாலை கட்ட இனிய தமிழ்ச் சொற்களைத் தேடிச் செல்லவில்லை. அந்தச் சொற்களே இவரைத் தேடி, 'நான் முன்னே, நீ முன்னே' என்று குதித்தோடி வந்தன.

இவர் கட்டிய பூமாலைகளை இவரைப் பற்றி வழங்கும் கதைகளிலும் கற்பனைகளிலுமே இன்று பார்க்க முடிகிறது. இவரது பாமாலைகளோ, 'நாலாயிரம்' என்ற திவ்யப் பிரபந்தத்திலே வாடாத மணிமாலைகளாகத் திகழ்கின்றன. இவை முதலாயிரத்தின் முதற்பெரும் பகுதியாகும்.

Koviloor Digital Library

இப்பாடல்களிலே விஷ்ணு சித்தரின் ஆகிருதியை உள்ளவாறு காண்கிறோம். இவர் பொதுவாகச் சமய உலகிற்கும், சிறப்பாகத் தமிழுலகிற்கும் ஒரு பெரியார் என்பதைப் 'பெரியாழ்வார் திருமொழி' நன்குணர்த்துகின்றது, வாசகர்களுக்கெல்லாம்.

இவர் வைணவர்களுக்கு மட்டுமா உரியவர்? - எல்லாருக்கும் உரிய பெரியார் என்பதையும் இவர் பாடல்கள் அறிவிக்கின்றன. வில்லிபுத்தூரிலே தோன்றியதால் வில்லிபுத்தூரர் என்று கூறப்படும் இப்பெரியார் சமய உலகத்திற்கும் இலக்கிய உலகத்திற்கும் குழந்தை - உலகத்திற்கும் ஒருங்கே பெருந்தொண்டு புரிந்திருக்கிறார்.

எல்லாருக்கும் உரிய பெரியாரைத் தமிழகத்திலாவது எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டாமா? இதற்கு ஒரு சாதனம் இம்முயற்சி.

இவர் பாடிய பாடல்களிலும், இவர் சொல்லும் கதை களிலும், இவரது சிந்தனைக் காடுகளிலும் இப்பெரியாரைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு முன், இவரைப் பற்றி வழங்கும் குருபரம்பரைக் கதைகளிலே இவரை முதல் முதல் கண்டு கொள்ள முயல்வோம். வியாக்கியானங்களையும் வேறு ஆதாரங்களையும் இவர் பாடல்களையும் ஆராய்வதற்கு முன் வடிவழகிய நம்பிதாஸர் என்ற பக்தமணியின் 'பெரியாழ்வார் பிரபந்த'த்தை ஒரு முக்கிய சாதனமாகக் கொண்டு, வேறு குருபரம்பரை வரலாறுகளையும் துணைக்கருவியாகக் கொண்டு, இப்பெரியார் சரிதத்தைக் கண்டுகொள்ள முயல் வோம்.

அப்பால், ஆராய்ச்சி முறையிலும் சரித்திரப் பின்னணி யிலே இவரைக் கண்டுகொள்ள முயன்று, கடைசியாகப் பாசுரங்களிடையே சஞ்சாரம் செய்து இவரைத் தரிசித்துப் பேறுபெறவும் முயல்வோம்.

Koviloor Digital Library

2

குழந்தை, மனிதனின் தந்தை

'சோதி மேனியனார் சோதியினில் (சுவாதியில்)' பிறந்தார் என்பர் வடிவழகிய நம்பிதாஸர். அசாதாரண அழகுடன் விஷ்ணுசித்தர் குழந்தைப் பருவத்திலேயே காணப்பட்டார் என்பது குறிப்பு. பகவானுக்குப் பல்லாண்டு பாடப் பிறந்த குழந்தையைக் கண்டு பல்லாண்டு பாடி வாழ்த்திய பெண்களும் இந்த அழகின் மகிமையால் தாங்களும் 'பால்நிலா முகத்தினரா'க விளங்கினர் என்ற குறிப்பையும் வடிவழகிய நம்பிதாஸரின் வாக்கிலே காணலாம்.

அழகனைப் பாடிய அழகர்

கண்ணனுடைய அழகைப் பாடப்பிறந்தவர், குழந்தைக் கண்ணனின் தெய்விக அழகைப் பாடிப் பாடிப் பரவச மானவர், தாமும் அழகுள்ளவராகப் பிறந்தாராம். கண்ணனது திருமேனியழகை அநுபவித்து,

பவள வாயீர்!
வந்து காணீரே!

என்றெல்லாம் பாடப்போகிறவரின் குழந்தைத் திருமேனி யழகையும் பெண்களும் அன்பர்களும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து உரையாடலுற்றார் என்கிறது பெரியாழ்வார் பிரபந்தம்.

குழந்தைக் கண்ணனுடைய திருவடியழகை,

Koviloor Digital Library

பாதக் கமலங்கள்
காணீரே!
பவள வாயீர்
வந்து காணீரே!

என்று பெரியாழ்வார் பாடுகிறாரல்லவா? வடிவழகிய நம்பிதாஸரும்,

'பாதக் கமலம் காணீர்' என்றார்
பாதக் கமலம் கண்டார் பலரும்

(என்றார் பாதம் - என்றவரின் பாதங்கள்.)

என்கிறார்.

குழந்தைக் கண்ணனின் பாதங்களிலுள்ள பத்து விரல்களையும் அதிசயமாகப் பாடியிருக்கிறார் பெரியாழ்வார்.

முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல், எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட்(டு) இருந்தவா காணீரே!
ஒண்ணுத லீர்!வந்து காணீரே!

(ஒத்திட்டு இருந்தவா - ஒத்திருக்கும் விதத்தை. ஒண்ணுதலீர் - ஒளியுள்ள நெற்றியையுடைய பெண்களே.)

இப்படிக் குழந்தையழகை அநுபவிக்கக்கூடிய ரஸிகர் குழந்தைப் பருவத்திலும் ஒப்பற்ற அழகு வாய்ந்தவராக இருந்தார் என்பது கவிச்சுவை நிறைந்த பக்தியுள்ளத்தின் கற்பனை.

குழந்தைக் கண்ணனின் மார்பழகைப் பெரியாழ்வார் தாயாகி, அநுபவித்து மற்றைப் பெண்களுக்கும் காட்டும் போது,

குருமா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார்(வு) இருந்தவா காணீரே!
சேயிழை யீர்!வந்து காணீரே!

Koviloor Digital Library

(குரு மாமணிப் பூண் - மிகச் சிறந்த ரத்தினங்களால் இயன்ற ஆபரணம். சேயிழையீர் - செம்மையான ஆபரணங் களை அணிந்த பெண்களே.)

குழந்தை விஷ்ணுசித்தரின் மார்பழகையும் வடிவழகிய நம்பிதாஸர்,

'செங்கமலை தங்கும்
திருமார்பு காண்மின்!' என்றான்
பங்கமில்லா மார்பழகு
கண்டார் பரிவோடே

(செங்கமலை - மகாலட்சுமி, காண்மின் - காணுங்கள். பங்கம் இல்லா - குற்றம் இல்லாத. பரிவோடே - அன்போடே.) என்று ஈடுபட்டுப் பாடுவதைப் பாருங்கள்.

'நீல நிறத்துச் சிறு பிள்ளையின் மழலைச் சொல்லின் பத்தையும்' கண்ணழகையும் வாயழகையும் இளநகை இன்பத்தையும் அந்த முகமலரழகையும் பருகிப் பருகிப் பேரின்பமுற்றவர் பெரியாழ்வார். அப்படியே விஷ்ணு சித்தரின் பிள்ளையின்பத்தை அநுபவித்துப் பரவசமாகிறார் வடிவழகிய நம்பிதாஸர்.

கண்ணனின் கண்ணழகில் பெரியாழ்வார் ஈடுபட்டுப் பேறு பெற்றார்.

கண்கள் இருந்தவா
காணீரே!
கனவளை யீர், வந்து
காணீரே!

என்று பிறருக்கும் காட்டுகிறார்.

இத்தொண்டரின் குழந்தைக் கண்ணழகில் ஈடுபட்ட வடிவழகிய நம்பிதாஸரின் கற்பனைப் பெருமிதத்தைத்தான் பாருங்கள்:

Koviloor Digital Library

திங்கள் வதனத்
திருஅனைய தேவகிபால்
தங்கிப் பிறந்(து), ஆயர்
தம்பால் .வளர்ந்தபிரான்
செங்கமலக் கண்காண்மின்,
சேயிழையீர்! என்றவர்தம்
அங்கமலக் கண்கண்(டு)
அனைவர்களும் வாழ்த்தினார்.

(திங்கள் - சந்திரன். திருஅனைய - மகாலட்சுமியை ஒத்த. தேவகிபால் - தேவகியிடம். ஆயர் தம்பால் - ஆயர் களுடன். செங்கமலக் கண் - செந்தாமரை போன்ற கண். அங்கமலக் கண் - அழகிய தாமரை போன்ற கண்.)

பெண்களும் அன்பர்களும் கண்ணனது மேனியழகைப் பாதாதிகேசமாக அநுபவித்ததுபோல், குழந்தை விஷ்ணு சித்தரின் அழகையும் வில்லிபுத்தூரில் உள்ளவர்கள் அனைவரும் கண்டு இன்புற்றார்களாம்.

முகுந்தபட்டர் தம் குழந்தையை, நந்தகோபர் கண்ணனைப் போற்றி வளர்த்ததுபோல் வளர்த்திருக்க வேண்டும். தாயான பத்மவல்லியும் யசோதைத் தாய்போல் குழந்தையை வளர்த்தாள் என்று கருதலாம்.

குழந்தையும் தெய்வமும்

வடபத்திரசாயிபால் பக்திபூண்டு ஒழுகிய முகுந்த பட்டரின் இல்லமும் ஒரு பக்திக் கோயிலாகத் திகழ்ந்தது எனலாம். இங்கே கதைகள் காலட்சேபங்கள் நடந்த வண்ணமாயிருக்கும். இந்தக் கதைகளில் கண்ணன் கதைகள் விஷ்ணுசித்தரைப் பெரிதும் வசீகரித்துவிட்டன.

'பகவானும் குழந்தையாக இருந்தவன்தான்' என்ற நினைவு விஷ்ணுசித்தரின் உள்ளத்திற்குள்ளே ஒரு ஜீவநாதமாக ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

Koviloor Digital Library

குழந்தைக் கண்ணனையும், 'அழாதே, அழாதே!' என்று தாய் தாலாட்டியிருக்க வேண்டுமே! அந்தத் தெய்வக் குழந்தையையும் இடுப்பில் வைத்துக்கொண்டு அம்புலி காட்டியிருக்கவேண்டுமே! அவனும் தளர்நடை நடந்திருப்பானே! பின்புறமாக வந்து தாயின் முதுகைக் கட்டிக் கொண்டிருப்பானே! அவனுக்கும் தாய் பாலூட்டியிருப்பாளே; நீராட்டியிருப்பாளே! பூச்சூட்டியிருப்பாளே; எப்படி எப்படியெல்லாம் சீராட்டி வளர்த்திருப்பாள்! இத்தகைய நினைவுகளும் கனவுகளும் பிள்ளைப் பிராயத்தில் விஷ்ணு சித்தருக்கு அமுதமாக இருந்தன என்பதில் ஐயமில்லை.

விளையாட்டுப் பிள்ளையாகக் கண்ணனைத் தம் பிள்ளைப் பிராயத்திலே நேசித்தவர் ஆண்டிலும் அறிவிலும் முதிர்ச்சி பெற்றதும், உலகமே கண்ணனின் தீராத விளையாட்டு என்று கருதுவாராயினர்.

விளையாட்டுப் பிள்ளை எவ்வளவோ துஷ்டத்தனமும் செய்திருப்பானே! கண்ணனுடைய பால லீலைகளில் துஷ்டத்தனத்திற்கும் துணிந்து ஒரு முக்கிய ஸ்தானம் அளித்து விட்டது, நமது சமயஞானிகளின் மேதை. துஷ்டநிக்கிரகம் செய்யப் பிறந்தவனைத் துஷ்டப் பிள்ளையாகச் சித்தரிக்கும் மனோபாவத்தையும் கவித்திறனையும் அடிப்படைத் தத்துவத்தையும் கண்டு கொள்வதற்குத் பெரியாழ்வாரின் பாடல்களை ஓதி ஓதி இன்புற வேண்டும்.

பாராளும் நூற்றுவரைப்
பாழாக்கிப் பாண்டவர்க்(கு)
ஆராத இன்பம்
அருளப் பிறந்தபிரான்,

(பாராளும் - உலகத்தைக் கட்டி ஆண்ட. நூற்றுவர் - துரியோதனாதியர். ஆராத - தெவிட்டாத.)

குழந்தையாகத் துஷ்டத்தனம் செய்தானென்றால் அந்தத் துஷ்ட லீலைகளுக்கும் உட்பொருளும் நற்பயனும் இருக்க வேண்டுமல்லவா?

Koviloor Digital Library

வெண்ணெய் கவர்ந்த கள்வன், உள்ளம் கவர்ந்த கள்வனும்தான். கண்ணனுடைய அற்புத ஆற்றல் கண்டு ஆய்ச்சி,

அன்பா! உன்னை
அறிந்து கொண்டேன்

என்றும்,

ஐயா! உன்னை
அறிந்து கொண்டேன்

என்றும்,

அப்பா! உன்னை
அறிந்துகொண்டேன்

என்றும்,

அம்மா! உன்னை
அறிந்துகொண்டேன்

என்றும் சொன்னதாக இவர் பாடியிருக்கிறார். அந்தத் தாயுள்ளத்துடன் இவர் கண்ணன் கதைகளின் உட பொருளையும் உணர்ந்துகொண்டு சிறந்த நற்பயன் பெற்றார்.

கண்ணனுடைய துஷ்டத்தனம் கண்டு ஆய்ச்சி கட்டி வைத்தாளல்லவா? அந்தக் கதை குழந்தைப் பருவத்திலேயே இவர் நெஞ்சில் ஆழ்ந்து பதிந்திருக்க வேண்டும். வயது அதிகரிக்க, அறிவும் பக்தியும் பெருக, 'ஆஹா, என்ன அதிசய உண்மை! வேதங்களுக்கும் கட்டுப்படாத பெருமான் ஆய்ச்சி கயிற்றால் கட்டுண்டானாம். இதுவன்றோ ஆண்டவனின் எளிமை!' என்று இவர் சிந்தித்திருக்க வேண்டும்.

பால் கறக்கும்போது பசுவின் காலில் கன்றைக் கட்டி வைக்கிற கயிற்றை, 'அணைகயிறு' என்று குறிப்பிடுவதுண்டு. அந்த அணைகயிற்றால் கட்டுப்பட்டானாம், ஆராய்ச்சியறி விற்கும் வேதஞானத்திற்கும் எட்டாத பெருமான்.

Koviloor Digital Library

ஆராயும் வேதம்
அயர்(வு)எய்த, அண்டர்கையில்
ஏரார் அணைகயிற்றால்
கட்டுண்ட எம்பெருமான்.

(அயர்வு எய்த - தேடித்தேடி அயர்ந்துபோக. அண்டர் (இங்கே) மாடுமேய்க்கும் ஆயர்கள். ஏர் ஆர் - அழகு நிறைந்த.) என்று பெரியாழ்வார் கண்ட ஒரு கிருஷ்ண சித்திரத்தை எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகிறார் வடிவழகிய நம்பி தாஸர்!

ஆராய்ச்சியறிவும் வேதஞானமும் தேடிக் காணாது தவித்துக்கொண்டிருக்க, அந்த மெய்ப்பொருள் மாடு மேய்த்தவர்களின் பேரன்பிற்குக் கட்டுண்டு கிடந்த அந்த அழகையும் எளிமையையும் கண்டு காட்டுகிறது பெரியாழ் வாரின் கவிதை. கண் கொட்டாமல் கண்டு, 'காணீர், காணீர்!' என்று நமக்கும் காட்டுகிறது.

பாசபந்தங்களிலிருந்த விடுதலை பெறுவதற்குக் கடுந்துறவு நெறி வேண்டியதில்லை; அன்பு என்ற தெய்விக பாசபந்தத்திற்குக் கட்டுப்படுவதே போதும்; பரம்பொருளான சத்தியமும் கருணையால் அழகுருவம் கொண்டு அன்பு என்ற அணைகயிற்றுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும். இது பெரியாழ்வார் கண்டு காட்டும் பெருநெறி.

குழந்தைப் பருவத்திலேயே இவர் கேட்ட கதைகள், பிள்ளைப் பிராயம் தொட்டு இவர் கண்ட பகற்கனவுகள், இவர் நினைத்த நினைவுகள், உணர்ந்த உணர்ச்சிகள் எல்லாம் இவர் கவிதையையும் வாழ்க்கையையும் உருவாக்கியிருக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் ஒன்றாகக் கட்டிய கயிறு தான், வேதம் திணறித் தடுமாற அதற்கு முன்னே ஓடி மறைந்து கன்றுக்குப்பின் போய்க் கொண்டிருந்த கண்ணன் விளையாட்டு என்று கருதுவது பொருந்துவதே.

Koviloor Digital Library

கிருஷ்ண லீலைகளில் ஊறிய உள்ளம்

ஆய்ப்பாடியின் செல்வமாகிய கோபியருக்கும் கண்ணனுக்கும் உள்ள உறவிலே ஆத்மாவுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள உறவை விஷ்ணுசித்தர் கண்டுகொள்வதற்குமுன், இத்தகைய கதைகள் குழந்தைப் பருவம் தொட்டு இவரது உள்ளத்தில் ஊறிக் கனிந்திருக்கவேண்டும் என்பது திண்ணம். கதைகளில் ஊறிக்கிடந்த உள்ளந்தான், கதைகளைக் கவிதையில் இட்டுப் புதைபொருளும் காட்டக்கூடும்.

ஓர் உதாரணமாக, குன்றைக் குடையாகப் பிடித்துக் கல்மழை தடுத்த கண்ணன் கதையை உற்று நோக்கலாம். கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த கதையிலே விஷ்ணு சித்தரின் பிள்ளையுள்ளம் முதல் முதல் பகவானது அற்புத சக்தியை உணர்ந்திருக்கவேண்டும்.

பிறகு கண்ணனுடைய லோகோபகாரமான அந்த லீலையின் பொருள், உள்ளத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். அப்பால் சரணாகதியின் பொருளும் புலனாகியிருக்கும்.

அம்மைத் தடங்கண் மடஆய்ச் சியரும்
ஆனாயரும்ஆ நிரையும் அலறி
'எம்மைச் சரண்என்று கொள்' என்(று) இரப்ப
இலங்(கு) ஆழிக்கை எந்தை எடுத்தமலை.

(மைத்தடங்கண் - மை தீட்டிய விசாலமான கண்கள். மட ஆய்ச்சியர் - இளம் பருவத்தினரான ஆய்ச்சியர். ஆனாயர் - ஆடு மேய்க்கும் ஆயர்கள். ஆநிரை - பசுமந்தை. இரப்ப - இரந்து வேண்டிக்கொள்ள. இலங்கு ஆழிக்கை எந்தை - விளங்குகிற சக்கராயுதத்தைக் கையில் ஏந்திய மகா விஷ்ணுவின் அவதாரமாகிய என் அன்பன்.)

என்று கோவர்த்தன கிரியை இவர் பாடியிருப்பது கவனிக்கத்தக்கது.

இப்படியே கண்ணன் குழல் ஊதிய கதையையும் இவர் இளமையிலேயே கேட்டு அநுபவித்திருக்கவேண்டும். இந்த அநுபவம் உள்ளத்திற்குள்ளே நெடுங்காலம் ஊறிக் கனிந்து

Koviloor Digital Library

தான் 'கண்ணன் குழலூதல்' என்ற அதிசயக் கவிதையாக வெளிப்பட்டிருக்க வேண்டும்.

இக்குழலிசையில் விண்ணும் மண்ணும் சந்திப்பதாக இவர் காட்டியிருக்கும் மனோபாவம் கவிதையின் சிகரம் ஒன்றைச் சுட்டிக் காட்டுவதுடன், பக்தியநுபவத்தின் சிகரம் ஒன்றையும் காட்டுகிறது.

இப்பாடல்களை ஓதி ஓதி அநுபவிக்கும்போது இவரே இளமையில் புல்லாங்குழல் ஊதிப் பழக்கமும் தேர்ச்சியும் பெற்றிருக்கலாமோ என்றுகூடத் தோன்றுகிறது. இந்த இசைத்திறனையும் இவர், தம் உள்ளம் கவர்ந்த கண்ணனுக்கே உரிமையாக்கிவிட்டார் என்று ஊகிக்கலாம்.

ராமகதையும் இவர் இளமையில் கேட்டறிந்ததுதான். ராமாயணத்திலே சுந்தரகாண்டம் இவரை வசீகரித்திருக்க வேண்டும் என்பதற்கு, 'அநுமன் சீதைக்குக் கூறிய அடையாளம்' என்பது குறித்து இவர் பாடியிருக்கும் பாடல்களே சான்றாகும். எனினும் கண்ணன்கதைகள்போல் ராமகதை இவரை வசீகரித்து விடவில்லை.

விஷ்ணுசித்தர் இளமையிலேயே திருமாலிருஞ் சோலையில் சஞ்சரித்து, அந்த அழகர் மலையின் அழகுகளைக் கண்ணாரக் கண்டு அநுபவித்திருப்பார். இயற்கையழகுகளும் கண்ணனது தெய்விக சௌந்தரியங்களின் சாயைகளாக இவரை வசீகரித்திருக்கவேண்டும்.

திருக்கோட்டியூர், திருவரங்கம் முதலான தலங்களுக்கு இவரைத் தந்தையாரே அழைத்துச் சென்றிருக்கலாம். அங்குள்ள தொண்டர்களுடன் இவருக்கு இளமைப் பழக்கம் ஏற்பட்டிருக்கவும் கூடும். இந்தப் பழக்கமும் இவரைக் கிருஷ்ணலீலைகளைப் பற்றிப் பகற்கனவுகள் காணத் தூண்டியிருக்கலாம்.

தொண்டரின் தந்தை

இப்படிப் பலவகைகளிலும் இளமையிலேயே கிருஷ்ண பக்தியைப் பெருக்கிக்கொண்டு நாளடைவில்

Koviloor Digital Library

பெரும் பக்தமணியாகப் பரிணமித்துவிட்டவரின் குழந்தை - முகத்திலும் நெற்றியிலும் தெய்வ ஒளியும் தெய்வமதியும் திகழ்ந்தன என்கிறார் வடிவழகிய நம்பிதாஸர்.

'சிற்றிடைத் தேவகியார்
சீரார் வயிற்றுதித்தான்
நெற்றி இருந்தவா
நேரிழையீர், காண்மின்!' என்றான்
ஒற்றைப் பிறைநுதல்கண்(டு)
உத்தமர்கள் வாழ்த்தினார்.

(சீர் ஆர் - சிறந்த. நேரிழையீர் - பெண்களே. ஒற்றைப் பிறைநுதல் - ஒரு பிறைச்சந்திரன் போன்ற நெற்றி.)

உலகம் அனைத்தும் பிறப்பித்தவன், தேவகியார் வயிற்றிலே பிறந்தருளியது குழந்தை - விஷ்ணுசித்தரின் உள்ளத்திலேயே கதையாய்ப் பதிவாகியிருக்க வேண்டும். வயது முதிர்ந்ததும்,

உற்ற புவனம் அனைத்தும்
உதிப்பித்(து), அதனுள்
சிற்றிடைத் தேவகியார்
சீரார் வயிற்றுதித்த

அவதார ரகசியம் பக்தி அநுபவமாய் இவருக்குப் புலனாகியிருக்க வேண்டும். இந்த ரகசியம் நமக்கும் இவரது கவிதாநுபவத்திலே ஒருவாறு புலனாகக்கூடும்.

குழந்தைக் கண்ணனை இவர் குழந்தையாகப் பார்த்து இன்புறுவது போல் தெய்வமாகவும் கண்டு கொண்டாடுகிறார். அகில லோகத்தை ஆளுகின்ற தெய்வமதி ஒளிரும் அந்த நெற்றியழகைக்கண்டு காட்டுகிறார். இத்தகைய விஷ்ணு சித்தரின் குழந்தை நெற்றியிலே பிற்கால மதியழகைக் கண்டு வாழ்த்திய உத்தமர்கள், குழந்தை விஷ்ணுசித்தரைக் குழந்தையாக மட்டும் காணாமல் தொண்டரின் தந்தையாகவே கண்டுகொண்டார்கள் எனலாம்.

Koviloor Digital Library

3

நந்தவன நிழலிலே

இயற்கையழகுகளில் நெஞ்சைப் பறிகொடுத்தவர் அந்த அழகுகளையெல்லாம் தெய்வ சௌந்தரியத்தின் சின்னஞ்சிறு துணுக்குகளாகக் கண்டு அநுபவித்தவர், தமது 'நீலநிறத்துச் சிறுபிள்ளை'யை நீலமலையிலும் கண்டார்; நீலப் பெருங்கடலிலும் கண்டார்; நீல நெடுவானிலும் கண்டார்: நீல மேகங்களிலும் கண்டார்; சின்னஞ்சிறு நீல மலர்களிலும் கண்டார்; மயில்கள் கூட்டமாக நின்று ஆடிக்கொண்டிருக்கும் அந்தக் காட்சியிலும் கண்ணனது வசீகர அழகைக் கண்டு பேரின்பமுற்றார்.

'நான்' என்ற ஆணவத்திரை விலகியதும், இயற்கை யழகுகளும் தமக்கு இயற்கையான திரையை விலக்கிக் கொண்டு இறையழகை இவருக்குக் காட்டலாயின.

குன்றாடு கொழுமுகில்போல்
குரைகடல்போல், குவளைகள்போல்,
நின்றாடு கணமயில்போல்
நிறமுடைய நெடுமால்

(குன்று ஆடு கொழுமுகில் - குன்றின் உச்சிகளில் அசைந்தாடும் நீருண்ட மேகங்கள். குரைகடல் - ஒலிக்கின்ற கடல். குவளை - ஒருவகை நீலமலர். கணமயில் - மயில்களின் கூட்டம்.) என்று இவர் பாடுவதைக் கேளுங்கள்.

நந்தவனப் பணி - ஏன்?

நீலமலர்கள் மட்டுமா? - பொதுவாக மலர்களெல்லாம் கண்ணனை நினைவூட்டி இவருள்ளத்தை மலரச் செய்தன.

Koviloor Digital Library

மலர்களைக் கண்டதும், 'சூட்டி மகிழ்வோம்' என்ற ஆசை உண்டாகக்கூடும்; சிறப்பாகப் பெண்களுக்கு இந்த ஆசைஉண்டாகும்.

முருகில் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல்மடவீர்!

(முருகு - மணம், அழகு, தேன். சிவந்த கழுநீர் - செங்கழுநீர்ப்பூ, செவ்வாம்பல். குழல் மடவீர் - கூந்தலை யுடைய இளம் பெண்களே.)

என்ற பாட்டிலே பெண்களுக்குப் பூவின் மேலுள்ள மோகம் இனிது புலனாகின்றது.

காதலன், பூவைக் கண்டதும், 'காதலிக்குச் சூட்டி மகிழ்வோம்' என்று கருதுவது இயல்பு. இந்த ஆசைக்குச் சற்றும் குறையாத ஆசையுடன் பக்தன் பூவை இறைவன் அடிகளில் இட்டு மகிழவேண்டுமென்று எண்ணமிடுகிறான்.

போதெலாம் போது கொண்(டு)உன்
பொன்னடி புனைய மாட்டேன்!

(போது - பூ.)

என்ற தொண்டரடிப்பொடிகளின் வாக்கை உற்று நோக்குங்கள்.

இந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்வதற்காகத் தொண்டர்கள் நந்தவனப் பணியை ஒரு நற்பணியாக மதிக்கிறார்கள். முதலாழ்வார் மூவருள் பேயாழ்வாரும், பிறகு தொண்டரடிப் பொடியாழ்வாரும் நந்தவன கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். அந்த நந்தவனத் திருப்பணி ஆசை பெரியாழ்வாரையும் பற்றிக் கொண்டது.

'புண்ணியக் கொழுந்தோ! நான்மறைக் கொழுந்தோ!' என்று மக்கள் அதிசயிக்க, 'வேதவாய்த் தொழில' ராக

Koviloor Digital Library

விளங்கிய விஷ்ணுசித்தர் வழக்கம்போல் ஒருநாள் கண்ணன் கதைகளில் ஒன்றைச் சிந்தித்துக் கொண்டிருந்தார். 'திருவின் வடிவொக்கும் தேவகி' பெற்ற பிள்ளை, 'மைத்தடங்கண்ணி அசோதை'யின் பிள்ளையாக வளர்ந்தான். இந்த நீலச் சிறுபிள்ளையின் மேனி ஒரு நீலமலர் மாலைப்போலப் பொலிந்தது, இவர் மனக்கண்முன்.

கண்ணன் அவதரிப்பதற்கு முன்பு பரமபத ராஜ்யத்திலே விண்ணோர்கள் தூயநன்மலர் மாலைகளை ஏந்திப்போய் அவற்றை அப்பெருமானுக்குச் சூட்டி மகிழ்ந்தது போலவும், கண்ணனாகப் பிறந்த பின்பும் நீலமேனி அழகுக்கு ஏற்ற கோலமா மலர்மாலைகளை அன்பர்கள் சூட்டிச் சூட்டி மகிழ்ந்ததுபோலவும் காட்சிகள் இவர் மனக்கண்முன் தோன்றிய வண்ணமாயிருந்தன.

மாடு மேய்க்கும்போதும் காட்டுப் பூக்களால் தன்னை அணிசெய்து கொள்கிறான் கண்ணன். தோழர்களும் அம்மலர்களால் இவனை அணிசெய்து மகிழ்கிறார்கள்.

வீட்டிலே தாய் சூட்டும் பூ, மேய்ச்சல் காட்டிலே தோழர்கள் சூட்டும் பூ, விண்ணாட்டிலே விண்ணவர் சூட்டிய தெய்வீக மாமலர், அன்பர் தூவிய அன்புமலர் எல்லாம் அழகு செய்கின்றன பெரியாழ்வாரின் பெருமானை.

ஒருசமயம் கஞ்சனார் வஞ்சத்தைத் தோற்பித்துச் சாதுஉலகை ரட்சிக்க எழுந்தருளுகிறான் கண்ணன். கம்ஸனுக்குப் பணி செய்துகொண்டிருந்த மாலாகாரரின் மாளிகைக்குள் வலியப் புகுந்து, 'எனக்கு இல்லையா இந்த அழகான பூ மாலை?' என்று இரண்டு கேட்கிறானாம். அண்ணனான பலராமனும் கண்ணனுடன் வந்திருக்கிறான்.

மாலாகாரர் இந்தச் சேர்த்தியழகில் ஈடுபட்டு, 'இருவராய் வந்து என் முன்னே நின்றீர்! என்னை ஆட் கொள்ளவும் இசைந்தீர்! இந்தக் கருணைக்குக் கைம்மாறும் உண்டோ?' என்று தோத்திரம் செய்கிறார். உடனே கொடிய

Koviloor Digital Library

கம்ஸ பயத்தை உதறித் தள்ளிவிட்டு அவனுக்குக் கட்டி வைத்திருந்த பூமாலையைக் கண்ணனுக்குச் சூட்டி மகிழ் கின்றார். கண்ணனும் சூடி மகிழ்கின்றான்.

வடபத்திரசாயி கோயிலுக்கு முன் நின்றுகொண்டே சிந்தனையில் மூழ்கியிருந்த விஷ்ணுசித்தர் கண்களை மலர விழித்துக்கொண்டு பெருமாளை நோக்கிய வண்ணம், 'இனி உனக்கும் புஷ்பத் தொண்டு புரிவது என் கடமை' என்று சொல்லுகிறார். உடனே தமது செல்வங்களையெல்லாம் ஒரு நீர்ப்பாங்கான நிலத்தில் இட்டு, அதை ஒரு பூம்பொழிலாக்கு கிறார்.

ஒரு குளம் தோண்டுகிறார்; வேறு வசதிகளையும் செய்துகொள்கிறார். பூஞ்செடிகளையும் துளசிச் செடிகளையும் பயிரிடுகிறார். செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், செவ்வந்தி, நீலோற்பலம், மல்லிகை, முல்லை, மாதவி, சண்பகம், பிச்சி முதலான மலர்களெல்லாம் மலிந்து பொலியும் நந்தவனம் ஒன்று இந்திரஜாலம்போல் எழுகின்றது, இவரது பக்தி நிறைந்த பேருழைப்பின் பலனாக.

பூமாலையும் பாமாலையும்

அதிகாலையிலெழுந்து நீராடி நிர்மலராய்ப் பூக்களைப் பக்குவமாய்க் கொய்து பூக்கூடையில் சேர்த்துக் கொண்டுவந்து பிணையல், கண்ணி, கோவை முதலிய பலவித மாலைகளாகக் கட்டுவார். அம்மாலைகளை வடபத்திரசாயிக்குச் சாத்தி, 'என் கண்ணன் இவற்றை அங்கீகரித்து அருள் செய்கிறான்' என்று கருதி ஆனந்தக் கண்ணீர் வடிப்பார்.

இவர் மாலை தொடுப்பதற்காகத் தம்முன் குவித்துக் கொண்டிருந்த பல நிறமலர்களும் இவருக்குக் கிளிமுதலிய அழகிய பறவைகளின் நிறங்களை நினைவூட்டின. இவை யெல்லாம் இறைவனைச் சேர்ந்து தூய நல்லழகு பெறுவது போல், ஆத்மாக்களும் அவன் அடிகளை அடைந்து இன்புற

Koviloor Digital Library

வேண்டும் என்ற எண்ணமும் மாலை தொடுக்கும்போது இவர் உள்ளத்தில் இடம்பெறுவதாயிற்று.

மலர்களை மாலையாகத் தொடுத்து இறைவனிடம் சேர்ப்பிக்கும்போது, 'இவையெல்லாம் அவனுடைய அருள்வேண்டி, அழகு வேண்டித் தவிக்கின்றன!' என்று கருதுவார். இம்மலர்களும் மாலைகளும், அருளிற்கும் இறையழகிற்கும் தாகமாகித் தவித்துக்கொண்டிருக்கும் மக்கள் இதயங்களையும் ஞாபகப்படுத்தின.

அப்படித் தவிக்கும் மக்களைத் தம் காலத்தில் இவர் கண்டதுபோல் பிற்காலத்திலும் நீள நோக்கிக் கண்டு கொண்டவர்போல், 'எல்லார்க்கும் பயன்படுவதற்கு உரிய வாடாத மாலைகளையும் தொடுப்போம்!' என்று தீர்மானித்தார். இந்த விதமாகப் பூமாலைத் தொண்டு இவரைப் பாமாலைத் தொண்டிலும் செலுத்துவதாயிற்று.

இவர் பாடல்களை ஒரு ஞானப் பூங்கா என்றும், ஓர் இலக்கிய நந்தவனம் என்றும் சொல்லலாம். இதில் நாம் காணும் பெரியாழ்வார் ஒரு துறவியல்ல; மனித நீர்மைக்குப் புறம்பான நியமங்களை மேற்கொண்ட ஒரு முரட்டுப் பக்தரும் அல்ல. மனைவியுடன் இல்லறம் நடத்திவந்தவர் என்று ஊகஞ் செய்வது தவறாகாது.

இவரது ஞானபக்தி நெறிக்குச் சரீர உழைப்பும் புறம்பானதன்று. மண்வெட்டி பிடித்து நிலம் திருத்திப் பயிர் செய்வதும், நீர் பாய்ச்சி மடைமாற்றிப் பணி புரிவதும், மலர் கொய்து மாலைகள் தொடுப்பதும் எல்லாம் இவருக்குப் பேரின்பம்தான். இவர் தமது கைங்கரியத்திலே உடல்பொருள் ஆவி என்ற மூன்றையும் ஈடுபடச் செய்தார் என்பது திண்ணம்.

பூக்களுக்கிடையே உடம்பு உலாவிக்கொண்டிருக்க, இறைவனைப் பற்றிய அழகிய நினைவுகளுக்கிடையே இவர் உள்ளம் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. எத்தனை அழகிய நினைவு மலர்கள் இவரது திருமொழியை அணிசெய்கின்றன!

Koviloor Digital Library

'பூச்சூட்டடல்' என்ற பதிகத்தையே பாருங்கள்.

தேனில் இனிய பிரானே!
செண்பகப் பூச்சூட்ட வாராய்!

என்று யசோதையாகிப் பேசும் வாக்கிலே கண்ணனுடைய அழகின் இனிமை எப்படி நமக்கு நினைவூட்டப் பெறுகிறது பாருங்கள்!

மல்லிகைப்பூச் சூட்டிக்கொள்ள வேண்டுமென்று கண்ணனை அழைக்கின்ற ஆய்ச்சி வாக்கிலே, மல்லிகைப்பூ மாலை தொடுத்த அநுபவம் நன்கு புலனாகிறது:

மருவிமணம் கமழ்கின்ற
மல்லிகைப்பூச் சூட்ட வாராய்!

பாதிரிப்பூவுடனும் மருக்கொழுந்துடனும் நந்தவனத்திலே பழகிய கைத்திறனைப் பார்க்கிறோம்,

பச்சைத் தமனகத் தோடு
பாதிரிப்பூச் சூட்ட வாராய்!

என்ற வாக்கிலே.

செங்கழுநீர்ப்பூவைப் பார்த்துப் பார்த்து மலர்ந்த உள்ளம்தான்,

தெள்ளிய நீரில் எழுந்த
செங்கழுநீர் சூட்ட வாராய்!

என்ற வாக்காக மலர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

பெரியாழ்வாரின் நந்தவனத்திலே ஒவ்வொரு மலரும், 'கண்ணன் என்னைச் சூட்டிக்கொள்ள வேணும், என்னைச் சூட்டிக்கொள்ள வேணும்! அவனுக்காகவே நாங்கள் அழகும் மணமும் பெற்றிருக்கிறோம்! அவனுடைய அழகுடன் சேர்ந்து நாங்கள் மேலும் அழகுபெற்று, மணம்பெற ஆசைப் படுகிறோம்' என்று பேசுவதைக் கேட்கிறோம். இப்படி ஆசைப்படும் மலர், ஆத்மாவுக்கு ஒரு மங்கல அறிகுறி.

Koviloor Digital Library

மரத்திலே முல்லைக்கொடி தழுவிப் படரும் அழகையும் இவர் தமது நந்தவனத்திலே கண்டிருக்க வேண்டும். ஆத்மா இறைவனைத் தழுவிப்படரவேண்டும் என்பதற்கு இக்காட்சியை ஒரு நினைவுக் குறியாக இவர் கருதியிருக்கக் கூடும். தமது நந்தவனத்தில் கண்ட இக்காட்சியைத்தான்,

குரவில் கொடி முல்லைகள்
நின்(று)உறங்கும் கோவர்த்தனம்

(குரவில் - குரவ மரத்திலே.)

என்று கோவர்த்தன கிரிக் காட்சியாகக் காட்டுகிறார்.

மலர்களும் கண்ணனது வேய்ங்குழல் இன்பம் பருகி மக்களைப்போல் உருகி, மெய்ம்மறந்து கிடந்தன என்றும், மரங்களும் உருகி மதுதாரைகள் பாய நின்றன என்றும் இவர் பாடுகிறார்.

மரங்கள் நின்று மதுதாரை கள்பாயும்,
மலர்கள் வீழும், வளர்கொம்பு கள்தாழும்

(கொம்புகள் - பூங்கிளைகள்.)

என்று குழலூதல் சிறப்பை வெளியிடும் காட்சியும் இவர் தமது நந்தவனத்திலே கண்டிருக்கக் கூடியதுதான்.

ஒரு பாட்டிலே இவர் சீதாபிராட்டியை,

அல்லியம்பூ மலர்க்கோதாய்!

(அல்லியம் பூ - உள் இதழ்களையுடைய அழகிய பூக்கள்.)

என்று ராமனால் தூதுவிடப்பெற்ற அநுமன் அழைப்பதாகக் கூறியுள்ளார்.

சீதையின் மென்மையும் பொலிவும் மட்டுமா? சிறையிருந்த அச்செல்வியின உடலிளைப்பும் புலனாகிறதல்லவா? பூக்களால் அழகுபெறத் தொடுத்த மாலையிடம்

Koviloor Digital Library

இந்த ஆழ்வாருக்குள்ள பக்திமயமான பிரியமும் பிரதிபலிக்கக் காண்கிறோம், சீதையை அநுமன் அழைக்கும் இந்த அழைப்பிலே.

'துணைமலர்க்கண் மடமானே!' என்று சீதையை அநுமன் குறிப்பிடுவதிலும் பூவின்மேல் இப்பெரியாருக்குள்ள பிரியத்தைக் காணலாம். மலர்களையெல்லாம் கண்களாகக் கொண்டு அவன் அருளையும் அழகையும் நந்தவனத்திலே பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போன உள்ளம், அசோகவனத்தி லிருந்து ராமன் இருந்த திசையை நோக்கிக் கொண்டிருந்த கண்களையும் துணைமலர்க்கண்களாகப் பேசியது பொருத் தந்தான்.

ராமதூதன் பிராட்டி முன் நின்று பல அடையாளங் களைச் சொல்லுகிறான். இந்த அடையாளங்களில் மிகவும் அந்தரங்கமாக நிகழ்ந்த ஒரு காரியத்தையும் குறிப்பிட்டுச் சீதை உள்ளத்திலே நம்பிக்கை ஊட்டியதாக இந்தப் பக்தர் பாடியிருக்கிறார். இந்த அநுமன் செய்தியிலும் இப்பெரி யாருக்குப் பூமாலைகளில் உள்ள ஆசை புலனாகிறது:

எல்லியம் போ(து) இனிதிருத்தல்
இருந்ததோர் இடவகையில்,
மல்லிகைமா மாலைகொண்(டு) அங்(கு)
ஆர்த்ததும்ஓர் அடையாளம்!

(எல்லியம்போது - ஓர் அழகிய இரவு வேளையில். இருந்ததோர் இடவகையில் - ஏகாந்தமாக இருந்த ஓரிடத்திலே. மல்லிகை மாமாலை - ஒரு பெரிய அழகிய மல்லிகைப் பூமாலை. ஆர்த்ததும் - கட்டியதும்.)

மகாவீரனாகிய ராமனைச் சீதை அழகிய மல்லிகைப் பூமாலையால் ஓர் இரவில் கட்டிவைத்தாள் என்று அந்தக் காதற் காட்சியை எவ்வளவு துணிச்சலுடன் வெளியிடுகிறார்! இவரும் பக்திக் காதலரல்லவா? - தெரிந்து சொல்ல உரிமை உண்டு.

Koviloor Digital Library

நந்தவனத்திலே பெருமாளுக்குப் பூமாலைகள் தொடுத்துக் கொண்டிருக்கிறார். ஓர் அழகான மல்லிகை மாலையைத் தொடுக்கும்போதே, 'அநுமன் சீதைக்குக் கூறிய அடையாளம்' என்ற பாமாலையையும் தொடுத்துக் கொண்டிருந்தார் என்று கருதலாம்.

பரசுராமர் கர்வபங்கத்தை முதலாவது அடையாளமாக விண்ணப்பம் செய்தாகிவிட்டது. சீதையோடு அயோத்திக்கு வரும்போது இவள் கண்முன்பு நடைபெற்ற காரியம் அது.

எனவே, அதைச் சீதை காதலின் ஒரு வெற்றியாகக் குறிப்பிட்டபின், பளிச்சென்று, 'பரமரகசியமான ஒரு காரியத்தையும் சீதையின் காதல் வெற்றியாகக் காட்டி, எடுத்த எடுப்பிலேயே இவளை மகிழ்வித்து, நம்பிக்கையை நிலைபெறச் செய்ய வேண்டும்' என்று தீர்மானிக்கிறான் அநுமன். பெரியாழ்வாரின் உள்ளத்திலே நடைபெற்ற சுந்தர ராமாயணம் இது!

கைகளோ வடபத்திரசாயிக்கு மல்லிகை மாமாலை கட்டிக் கொண்டிருக்கின்றன. பூமாலையா கட்டுகிறார் பெருமாளுக்கு? - அன்பு என்ற மாலையால் ஸர்வ சக்தியைக் கட்டிவிடப் பார்க்கிறது பக்தியுள்ளம். பெரியாழ்வார் இளநகை யரும்பிய வண்ணம்,

அல்லியம்பூ மலர்க்கோதாய்!
அடிபணிந்தேன் விண்ணப்பம்

என்று தொடங்கிய அந்த 'அடையாள'ப் பாட்டை,

மல்லிகைமா மாலைகொண்(டு) அங்(கு)
ஆர்த்ததும்ஓர் அடையாளம்

என்று முடித்துக்கொள்கிறார். தமது மல்லிகை மாலையையும் கட்டி முடிக்கிறார்.

இப்படியெல்லாம் பூமாலை பாமாலைக்கும், பாமாலை பூமாலைக்கும் துணைபுரிவதுண்டு. இவரது பூமாலைகளைப்

Koviloor Digital Library

போல் சில பாமாலைகளையும் பூந்தோட்டத்தின் விளைவாகக் கருதலாம். இவரது நந்தவனம் இவரது உள்ளத்தையும் ஒரு ஞானப் பூங்காவாக விளைவித்திருக்க வேண்டும்.

எங்கும் நந்தவனம்!

திருமாலிருஞ்சோலையில் கொன்றை மரங்கள் பூக்களைச் சொரியும் காட்சியைக் கண்டதும் இவருக்குத் தமது நந்தவனத்தின் நினைவு வந்திருக்கக்கூடும்:

பொருப்பிடைக் கொன்றைநின்(று)
முறியாழியும் காசும் கொண்டு
விருப்பொடு பொன்வழங்கும்
வியன்மாலிருஞ் சோலையதே!

(பொருப்பிடை - மலையிலே. முறியாழி - முறிந்து கிடக்கும் பொன்மோதிரம். காசு - பொற்காசு. விருப்பு - விருப்பம். வியன்மாலிருஞ்சோலை - சிறந்த திருமாலிருஞ் சோலை.)

பொன்மோதிரங்கள் முறிந்து கிடப்பதுபோலக் கிடக்கின்றனவாம் கொன்றைப்பூவின் நரம்புகள். பூவின் இதழ்களோ பொற்காசு போலக் கிடக்கின்றனவாம். இப்படிக் கொன்றை பூச்சொரியும் காட்சி, வள்ளல்கள் பொன் மோதிரங்களையும் பொற்காசுகளையும் புலவர்களுக்கு வாரி வழங்குவதை நினைவூட்டுகிறது.

பகவானும் கற்பகமாக உள்ளத்திலே நின்று தன் அருட் பிரசாதங்களை வாரி வழங்குகிறான். உண்மையான வள்ளல் அவன்தானே? அந்த வள்ளலின் சந்நிதியில், 'ஒன்றுமே வேண்டாது' நின்று அவனையே குழந்தையாக வளர்த்துவிடும் பாக்கியத்தையும் பெற்றிருப்பவர் இவர்!

திருமாலிருஞ்சோலையிலுள்ள இயற்கைப் பூஞ்சோலை களும், திருவரங்கம் முதலான திவ்யஸ்தலங்களில் இவர் கண்ட சோலைகளும் ஸ்ரீவில்லிபுத்தூரில் இவர் செயற்கையாக

Koviloor Digital Library

அமைந்திருந்த நந்தவனத்தை நினைவூட்டியிருக்கவேண்டும். அந்த ஸ்தல யாத்திரைகளுக்குப்பின் இவர் தமது நந்தவனத்தை மேலும் மேலும் அழகுசெய்தார் என்று கருதலாம்.

இந்த நந்தவனத்திலே திருக்குளத்தை அழகு செய்த செந்தாமரை மலர்கள் பகவானுடைய திருமுகத்தை நினைவூட்டின. கருநீலப்பூக்கள் இறைவனுடைய திருநிறத்தை நினைவூட்டின.

இதே மலர்களைத் திருவரங்கத்தில் கண்ணுற்றதும்,

திருமுகமாய்ச் செங்கமலம்
திருநிறமாய்க் கருங்குவளை,
பொருமுகமாய் நின்றலரும்
புனலரங்கம் என்பதுவே

(செங்கமலம் - செந்தாமரை. பொருமுகமாய் - ஒன்றுக்கொன்று போட்டி போடும் நிலையில். அலரும் - மலரும். புனல் அரங்கம் - நீர்வளமுள்ள திருவரங்கம்.)

என்று பாடினார்.

செங்கமலமும் கருங்குவளையும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டு இஷ்டமூர்த்தியின் திருமுகத்தையும் திருநிறத்தையும் காட்டிய 'தேன் தொடுத்த மலர்ச்சோலை'யை இவர் திருவரங்கத்திலே கண்டபின், அத்தகைய சோலையாகத் தமது நந்தவனத்தையும் அமைத்துக் கொண்டார் எனலாம்.

திருமுகத்தை மட்டுமா செந்தாமரை நினைவூட்டியது? உலகளந்த சேவடியையும் நினைவூட்டுகிறது. இந்தத் திருவடியை நோக்கிச் சரணாகதி செய்யும் தொண்டர்களைத் திருவரங்கத்தில் பார்த்ததும், அதே ஸ்தலத்தில் தாள் சாய்த்துத் தலைவணங்கிக் கிடந்த செந்நெற்கதிர்களையும் உயர்ந்து தோன்றிய தாமரை மலர்களையும் இவர் பார்க்க நேர்ந்தது.

இந்தக் காட்சியை நம் கண்முன் நிறுத்திச் சரணாகதி தர்மத்தை எவ்வளவு தெளிவாக உபதேசிக்கிறார் பாருங்கள்:

Koviloor Digital Library

உரம்பெற்ற மலர்க்கமலம்
உலகளந்த சேவடிபோல் உயர்ந்து காட்ட
வரம்புற்ற கதிர்ச்செந்நெல்
தாள்சாய்த்துத் தலைவ ணக்கும் தண்அரங்கமே.

(தலைவணக்கும் - தலையை வணங்கச் செய்யும். தண்அரங்கம் - குளிர்ந்த திருவரங்கம்.)

இத்தகைய காட்சிகளை ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே தம் நந்தவனத்தை ஒட்டி இவர் பார்த்திருக்கக்கூடும்.

குரவரும்பக் கோங்கலரக்
குயில்கூவும் குளிர்பொழில்சூழ்
திருவரங்கம் என்பதுவே
என்திருமால் சேர்விடமே.

(குரவு - குரவ மரங்கள். கோங்கு - கோங்கு மரங்கள். அலர - மலர. சேர்விடம் - சேர்ந்திருக்கும் இடம்.)

என்ற வாக்கிலே காணும் குளிர்பொழிலை இவர் தமது நந்த வனத்திலும்கண்டு அதையும் ஒரு 'குட்டித் திருவரங்க'மாகக் கருதியிருக்க வேண்டும்.

பூவின்சோகம் – வண்டின் பக்தி

தாமரைப் பொய்கையில் இவருக்குள்ள காதலைத்தான் என்னென்பது! ஒரு பனிக்காலத்திலே தமது நந்தவனத்தைப் பார்வையிடுகிறார். பனி அதிகமாகப் பெய்திருக்கிறது. இப்போது தாமரைப் பொய்கைதான் எப்படி அழகிழந்து காண்கிறது!

'அந்தோ அந்தத் தாமரை இதழ்கள் - உள் இதழ்களும் புறஇதழ்களும் - உதிர்ந்து போய்விட்டனவே!' என்கிறார். இந்தக் காட்சியை இவரால் மறக்க முடியவில்லை.

மகளைப் பிரிந்த தாய் ஒருத்தி கதறியதாய்ப் பாடும் போது இவர் அந்த இல்லம் அழகழிந்திருந்த நிலையைப்

Koviloor Digital Library

பாடுகிறார். அப்போது தாம் நந்தவனத்திலே கண்டிருந்த அந்தப் பரிதாபக் காட்சி நினைவிற்கு வருகிறது.

நல்லதோர் தாமரைப்பொய்கை
நாள்மலர்மேல் பனிசோர,
அல்லியும்தா தும்உதிர்ந்திட்டு
அழகழிந்தால் ஒத்ததாலோ!

(நாள் மலர் - அப்போது மலர்ந்த பூ. சோர - சொரிய. அல்லி - பூவின் உள் இதழ். தாது - புற இதழ். ஆலோ - இரக்கத்தைக் குறிப்பது.)

என்று கண்பனிசோர நிற்கிறார். இந்தக் காட்சியும் இவருக்கு ஒரு பக்தியநுபவந்தான்!

பூக்களுக்கிடையே இப்படிச் சோகம், உவகை, காதல், அமைதி முதலான உணர்ச்சிகளை அநுபவித்தவர், விடியற் காலத்திலே வண்டுகள் பண்பாடுவதையும் தமது நந்த வனத்திலே பார்த்திருக்கிறார். மலர்ந்த பூக்களில் தேனைப் பருக ரீங்காரம் செய்துவரும் வண்டுகளும் பக்தியையும் பாகவதர்களையுமே இவருக்கு நினைவூட்டியிருக்க வேண்டும்.

பண்பாடும் வண்டுகள் பகவானைப் பண்பாடிப் புகழும் தொண்டர்களை இவருக்கு நினைவூட்டுவது இயல்புதான். உள்ளத்தில் ஊறிக்கொண்டிருக்கும் பகவத்விஷயம் என்ற தேனைப் பருகுவதும் பண்பாடுவதும் தொண்டர்குலத் தொழில்தானே?

திருமாலிருஞ்சோலை, சோலைகளை அணிகளாகக் கொண்டமலையல்லவா? அம்மலையில் ஒருநாள் விடியற் காலத்திலே வண்டுகள் பகவானுடைய ஆயிரம் நாமங் களையும் பண்ணில் அமைத்துப் பாடுவதுபோலத் தோன்றியது இவருக்கு.

Koviloor Digital Library

அறுகால் வரிவண்டுகள்
ஆயிர நாமம்சொல்லி
சிறுகாலைப் பாடும்தென்
திருமாலிருஞ் சோலையே!

(அறுகால் வரிவண்டுகள் - ஆறு கால்களையும் வரிகளையும் உடைய வண்டுகள். சிறுகாலை - விடியற் காலத்தில்.)

என்று பாடிப் பரவசமாகிறார்.

சிற்றஞ்சிறு காலையில் தொண்டர்கள் பகவானுடைய திருநாமங்களை அநுஸந்தித்துக்கொண்டு செல்வதை ஸ்ரீவில்லிபுத்தூரிலும் வேறு திவ்ய ஸ்தலங்களிலும் பார்த்திருக்கிறார்; திருமாலிருஞ்சோலையிலும் பார்த்திருக்கிறார். தாமும் அவர்களோடு கலந்துகொண்டு எத்தனையோ தடவை பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்திருக்கிறார்.

ஒருநாள் விடியற்காலத்தில் தனியாகக் கோயிலுக்கு அருகிலுள்ள சோலைக்குச் சென்றதும் வண்டுகளின் ஒலி கேட்டு, ''ஒஹோ! நீங்களும் உங்கள் ரீங்கார பாஷையில், பகவந் நாம ஸங்கீர்த்தனம் செய்கிறீர்களா?'' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொள்கிறார். இக்கருத்தை அமைத்துப் பாடிப் பக்தி மயமான அந்த ஸ்தல மகிமையை எடுத்துக் காட்டுகிறார்.

தெய்வ நிழலும் சோலை நிழலும்

இப்படிப் பூக்களையும் வண்டுகளையும் இயற்கையழகுகளையும் இவர் பாடல்களில் பார்க்கும்போது, 'ஓர் அதிசயமான நந்தவனத்தின் குளிர்ந்த நிழலை அநுபவிக்கிறோம்!' என்ற உணர்ச்சி பக்தர்களோடு ரஸிகர்களுக்கும் ஏற்படுகிறது.

மாசில் வீணையும்
மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்

Koviloor Digital Library

மூசு வண்(டு)அறை
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை
இணையடி நீழலே!

(மதியம் - சந்திரன். மூசுவண்டு அறை பொய்கை - மொய்த்திருக்கும் வண்டுகள் ரீங்காரம் செய்கின்ற நீர்நிலை.)

என்று அப்பர் பாடியிருக்கும் பக்தியநுபவத்தைப் பெரியாழ்வார் பாடல்களிலும் நன்றாக அநுபவிக்கிறோம்.

பகவானுடைய திருவடி நிழலைத் தமது நந்தவனத்தின் குளிர்ந்த நிழலில் இவர் அநுபவித்தார் என்பதில் ஐயமில்லை. 'நாட்டு மானிடத்தோடு எனக்கு அரிது' என்று கூறியிருக்கும் இப்பெரியார் கவலைகளிலும் அற்ப விஷயங்களிலும் விழுந்து சாகும் மக்களின் கூட்டங்களிலிருந்து விலகித் தம் நந்தவனத்தில் கைங்கரியமே கண்ணாக இருந்து அமைதியும் ஆறுதலும் பெற்றாரென்றும், பிறகு அந்த 'இணையடி நீழலே' பிறருக்கும் ஆறுதலளிக்க வல்லது என்று பாசுரமிட்டுப் பேசினாரென்றும் ஊகிக்கலாம்.

திருப்பல்லாண்டைப் பிரவேசமாக உடைய பெரியாழ்வார் திருமொழி உண்மையிலேயே ஒரு பாசுர நந்தவனமாகும். இந்த நந்தவனத்திலே எத்தனை வாடாத கருத்து மலர்களைப் பார்க்கிறோம்! இவர் அன்று கட்டிவைத்த பூமாலைகள் போல் அழகும் மணமும் வாய்ந்து என்றும் வாடாதிருக்கும் பாமாலைகளையும் இங்கே காண்கிறோம்.

இந்த நந்தவனத்திலே பக்திவண்டு பண்பாடுவதுடன், கண்ணனது புல்லாங்குழலிலிருந்தே பொங்கிவரும் தெய்வ கீதத்தையும் கேட்கலாம். கேட்கும் காதுதான் வேண்டும். இங்கே வீசும் தமிழ்த் தென்றலுடன் இறைவனது அருட் பூந்தென்றலும் கலந்துவீசுவதை அநுபவிக்கும் பேறு பெறுகின்றோம்.

Koviloor Digital Library

இங்கே குழந்தைக் கண்ணன் தவழ்ந்து விளையாடு வதையும், தளர்நடை யிடுவதையும் காண்கிறோம். அக் குழந்தையை இப்பெரியார் தாயாகி நின்று தாலாட்டு வதையும், குழந்தையுடன் கொஞ்சி விளையாடுவதையும், தமது பக்திப்பாலை ஊட்டி அக்குழந்தையை வளர்த்து வருவதையும் காண்கிறோம்.

இந்த ஞானபக்தரின் அகத்தோடு முகத்தையும் இப்பாசுர நந்தவனத்திலே கண்டுகொள்ளலாம். தெய்வ ஒளி வீசும் கண்கள், பரந்த நெற்றி, மலர்ந்த மார்பு, தோளிலே பூக்குடலை, நாவிலே பண்சுமந்த பாசுரங்கள், கழுத்திலே முத்து மாலையைக் காட்டிலும் அழகு செய்யும் துளசிமணி மாலைகள், காதிலே குண்டலங்கள், கூடும் மனமுடைய தொண்டக்குலத்தினர் அனைவரையும் வேற்றுமையின்றி அணைத்துக்கொள்ளும் அன்புக் கரங்கள் - விசால இருதயம்!

கண்ணன் அழகைப் பார்த்துப் பார்த்து யசோதை கண்களுக்கும் ஒரு தெய்விக அழகு வந்துவிட்டதாகக் கூறுவதுண்டு. கண்ணன் திருமேனியின் அழகை அநுபவித்து அநுபவித்து இந்த ஞானபக்தருக்கும் தெய்வீகப் பேரழகு வாய்த்திருக்க வேண்டும்.

இந்த ஞானபக்தரின் அழகிய உள்ளம் அமைத்திருக்கும் 'திருமொழி' என்ற நந்தவன நிழலிலே எத்தனை மக்கள் எவ்வளவு காலமாகக் கண்ணன் இணையடி நிழல் கண்டு, ஆறுதலும் மன அமைதியும் பெற்றிருக்கிறார்கள்!

★

Koviloor Digital Library

4

முத்துக்குடை நிழலில்

பெரியாழ்வாரின் ஸ்ரீவில்லிபுத்தூர் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகும். பாண்டியர்களின் தலைநகரம் மதுரை. இம்மாநகரம் தமிழுக்கும் கலைகளுக்கும் ஒரு வளர்ப்புப் பண்ணையாகிப் பழைய உலகத்தின் சிறந்த நகரங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது.

மதுரையில் ஆட்சி செலுத்திவந்த பாண்டியர்கள் மகாபாரத காலத்திலேயே பிரசித்திபெற்றிருந்தவர்கள். பழைய கிரேக்க தேசத்துடனும் ரோமாபுரி ஏகாதிபத்தியத்துடனும் வாணிப உறவு கொண்டிருந்தவர்கள். சிங்களம், ஜாவா, சுமத்ரா முதலிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பும் கலைத்தொடர்பும் கொண்டிருந்தவர்கள்.

கண்ணன் பிறந்த வடமதுரைபோல் தமிழ்வளர்ந்த தென்மதுரையும் பாண்டியர் ஆட்சியில் அகில இந்தியப் பிரசித்தி பெற்றிருந்தது; பழைய உலகப் பெரும்புகழும் பெற்றிருந்தது. இம்மாநகருக்குத் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் தமிழ்ப் புலவர்களை வரவழைத்துப் பாண்டியர்கள் தமிழை வளம்பெற வளர்த்திருக்கிறார்கள்.

நிழல் எங்கே? - பொருள் எங்கே?

இப்பாண்டியர்களில் ஒருவன் விஷ்ணுசித்தரையும் வில்லிபுத்தூரிலிருந்து மதுரைக்கு வரவழைத்துப் பக்தி மதத்தை வளம்பெற வளர்க்க விரும்பினான். இவனை ஸ்ரீவல்லபதேவன் என்று குறிப்பிடுகின்றன ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைக் கதைகள்.

Koviloor Digital Library

சமயவாதிகள் பலர் தங்கள் சமயங்களைப் பரப்புவதற்கு மதுரைக்கு வந்து போனது உண்டு. திருஞானசம்பந்தரின் மதுரை விஜயத்தால் சைவசமயம் மறுமலர்ச்சி பெற்றது. வில்லிபுத்தூரரான விஷ்ணுசித்தரின் வருகை மதுரையில் ஸ்ரீவைணவம் என்ற பக்தி மதத்திற்குப் புத்துயிர் அளித்தது.

காவேரி, வைகை, தாமிரபருணி முதலான ஆற்றங்கரைகளில் ஆழ்வார்கள் தோன்றி, நாடெங்கும் பக்தி வெள்ளம் பெருகச் செய்ததை ஒரு தீர்க்கதரிசனம்போல் குறிப்பிடுகிறது ஸ்ரீபாகவத புராணம். விஷ்ணுசித்தரின் பக்திவெள்ளம் வைகையாற்றங்கரையிலுள்ள மதுரைமாநகரி லிருந்து, தமிழகம் எங்கும் பெருகி அப்பாலும் பரவிப் பக்திச் செழிப்பை உண்டாக்கியிருக்கிறது.

இதற்குக் காரணமாக உதவிய வல்லபதேவனைக் 'கோநெடு மாறவர்மன்' என்று பிரசித்தி பெற்றிருந்த பாண்டிய சக்கரவர்த்தியாகக் காட்டுகிறது சரித்திர ஆராய்ச்சி. இவனைக் குறித்துப் பெரியாழ்வார் தமது திருமாலிருஞ் சோலைப் பாசுரம் ஒன்றில் பிரஸ்தாபிக்கிறார்.

இந்த மன்னன் ஒரு நாள் இரவில் மாறுவேடம் பூண்டு, 'நகர்ச்சோதனை செய்துவருவோம்' என்று மதுரை மாநகரின் ராஜ வீதிகளிலும் பிற வீதிகளிலும் திரிந்துகொண்டிருந்தான். உள்ளத்திற்குள்ளே பல நினைவுகள் ஊசலாடிக் கொண்டிருந்தன.

'பகையரசர்களை வென்றேன்; உள்நாட்டுப் பகைவர் களான கலகக்காரர்களையும் திருடர் கூட்டங்களையும் அடக்கிவிட்டேன். எனினும் என் உள்ளத்தில் அமைதி பிறக்கவில்லை' என்று ஒருசமயம் எண்ணினான். 'பாண்டிய ராஜ்யத்தை மகாராஜ்யமாக்கி வைத்தேன்; எனினும் உள்ளம் அராஜகமான நிலையில் இருப்பதாகவே தோன்றுகிறது' என்று ஒருசமயம் நினைத்துப் பார்த்தான். 'இந்த உள்ளம் இளைப்பாற நிழல் எங்கே?' என்று தவித்தான்.

Koviloor Digital Library

தெருந்தெருவாகக் கடந்து சென்றன கால்கள். அலையலையாகப் பின்னி எழுந்த நினைவுகளுக்கிடையே ஊர்ந்தது உள்ளம். 'மகாவீரன் என்கிறார்கள்; என்னைத் தர்மவீரன் என்றுகூடச் சொல்லுகிறார்கள். ஆனால் சத்திய வீரனாக விளங்குவதற்கு வழிஎன்ன என்று தெரியவில்லை' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டான்.

வீரத்தாலும் போர்க்களத்து வெற்றிகளாலும் அடைய முடியாத மனச் சமாதானத்தைக் காதலாலும் அடைய முடியவில்லையே என்று ஏங்கியதும் உள்ளம். ஆம்; அந் நாளில் 'அழகு ராணி' என்று புகழப்பெற்றிருந்த சுந்தரியைக் காதலித்து அவள் காதலையும் பெற்று, அவளையே பட்டமகிஷியாக்கிக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறான்.

பல வழிகளில் நடந்துபோய் நகர்ச்சோதனை செய்தாகிவிட்டது. கடைசியாக, ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு தெருத் திண்ணையையும் பார்த்துவிட்டுப் போகலாமென்று நோக்கும் போதே, 'யார் வழிவிடப் போகிறாரோ? எப்படித் தான் நான் தேடித் தவிக்கும்பொருள் கிடைக்கப்போகிறதோ?' என்று தனக்குத் தானே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டான்.

இந்த வார்த்தை அந்தத் திண்ணையில் படுத்திருந்த ஒரு யாத்திரிகன் காதில் விழுந்தது. அப்போதுதான் அவன் உறக்கத்திலிருந்து விழிப்படைந்தான். 'யார் இவன்? திருடனோ?' என்று அந்த யாத்திரிகனும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

அரசன் யாத்திரிகனை நோக்கி, ''தாங்கள் யார்? எங்கேயிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''கங்கையாடி வருகிறேன். தாங்கள் யாரோ?''

''என்னைப்பற்றி அவசியமானால் பிறகு தெரிவிப்பேன். நான் திருடன் அல்ல என்பதை மட்டும் இப்போது சொல்லுகிறேன். தாங்கள் எங்கே போகிறீர்களோ?''

Koviloor Digital Library

''காசி யாத்திரிகன் வேறு எங்கே போவான்? சேது தரிசனம் செய்யத்தான் போகிறேன். நான் ஏதோ தவறாக நினைத்துவிட்டதற்காகத் தாங்கள் மன்னிக்கவேண்டும்.''

சந்திரோதயம் ஆயிற்று. அந்தச் சந்திரிகையில் இருவரும் ஒருவரையொருவர் உற்றுநோக்கினர். ''ஸ்ரீவல்லபதேவ மகாராஜாவின் ஆட்சியில் மதுரைமாநகரம் அடைந்திருக்கும் அழகையும் மாட்சியையும் பார்த்துவிட்டு, இங்கே திருடர் பயம் இருக்கக்கூடுமென்று நான் நினைத்தது தவறுதான்'' என்றான் யாத்திரிகன்.

யாத்திரிகனுடைய முகப்பொலிவு, 'தேசசஞ்சாரத்தோடு சாஸ்திர சஞ்சாரங்களும் செய்திருப்பவர் இவர்!' என்பதை அரசனுக்கு அறிவித்தது. அரசன் முகமோ யாத்திரிகனை, 'என்ன மாட்சி, என்ன களை!' என்று வியக்கச் செய்தது.

அரசன் சொன்னான்: 'தாங்கள், ''திருடனோ இவன்?'' என்று என்னைச் சந்தேகித்ததிலும் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பகவானுக்கு உரிய ஆத்மாவை எனது என்று அபிமானித்திருக்கும் நானோ அரசன்? நானே கள்வன்?'

தனது மாறுவேடத்தையும் மறந்து தனக்குத்தானே பேசிக் கொள்வதுபோல் அரசன் சொன்னது முதல்முதல் யாத்திரிகனைப் பெரு வியப்பில் ஆழ்த்தியது.

உடனே அவன் சமாளித்துக்கொண்டு எழுந்து கைகூப்பி நின்றான். அரசனோ சிரித்துக்கொண்டு தானும் கைகூப்பிய வண்ணம், ''எவ்வளவோ ஜாக்கிரதையாக நடந்துகொள்ளும் பழக்கம் எனக்கு நீண்ட காலம் உண்டு. எனினும் இப்போது தங்கள்முன் வெளிப்பட்ட கள்வன்போல் விழிக்க நேர்ந்து விட்டது. இது இருக்கட்டும். யாத்திரிகரே! தாங்கள் ஜீவ யாத்திரைக்கும் ஒரு நல்ல நிழல் வழி கண்டு பிடித்திருந்தால் காட்டவேணும்'' என்று வேண்டிக் கொண்டான்.

Koviloor Digital Library

யாத்திரிகன் பதில் சொன்னான்: ''அரசே! இராக் காலத்தில் வேண்டியதற்காகப் பகலில் முயற்சி செய்கிறார்கள்; மழைக்காலத்தில் வேண்டியவற்றிற்காக மற்ற மாதங்களில் முயற்சி செய்கிறார்கள்; முதுமையில் வேண்டியவற்றிற்காக இளமையில்சம்பாதித்துக்கொள்கிறார்கள். இப்படியே மறுமைக்கு வேண்டிய செல்வத்தை இம்மையிலேயே தேடி வைத்துக்கொள்ள வேண்டும். அந்தச் செல்வம் இம்மைக்கும் பயன்படுவதுதான்!''

எத்தனையோ செல்வங்களைத் தேடிக் குவித்தும், முத்தும் முத்தமிழும் பெற்றிருந்தும், அந்த ஒரு செல்வத் திற்கு வழிகாணாமல் மன அமைதியின்றி வருந்துவதாகத் தன் நிலையை அரசன் நன்கு உணர்ந்துகொண்டான். தேசாந்திரியை அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போனான்.

தனக்கு நல்ல காலம் நெருங்கிவிட்டதென்றே எண்ணிய அரசன். யாத்திரிகனை நோக்கி, ''எனக்கு வழி காட்டப் போகும் அந்த ஞானகுரு யாரோ?'' என்று பணிவுடன் கேட்டான். அதற்கு யாத்திரிகன், ''பகவானுக்குத்தான் வெளிச்சம்! அவன் அருளே கண்ணாகக் காணும்போதுதான் வழி தென்படுகிறது. அதற்கும் ஒரு வழிகாட்டி தேவைதான். என் யாத்திரையும் ஸ்தூலமாகக் கங்கையையும் சேதுவையும் எல்லையாகக் கொண்டிருந்தபோதிலும், உண்மையில் அந்த வழியையும் வழிகாட்டியையும் தேடுவதுதான்!'' என்று பதில் சொன்னான்.

''சேது தரிசனம் செய்தபின் தாங்கள் எங்கே போவீர்களோ?''

''ஸ்ரீவில்லிபுத்தூருக்கு.''

''ஆனால் நான் எங்கே போவது?'' என்று அரசன் பெருமூச்சுவிட்டான். பொழுது புலரும் நேரமாகிவிட்டது. யாத்திரிகன் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு புறப் பட்டான்.

Koviloor Digital Library

அவன் போனதுமே பள்ளியெழுச்சி பாடுகிறவர்கள் வந்து புகழ் பாடினார்கள். வல்லபதேவன் நீராடிக் காலை நியமங்களைச் செய்யத் தொடங்கினான்.

அன்று கொலு மண்டபத்திலே, சிற்றரசர்களும் சேனைத் தலைவர்களும் வணங்கப் புலவர்களும் அறிஞர்களும் ஆசிகூற, முத்துப் பந்தலின்கீழ் அமைந்த ஒரு சிங்காதனத்திலே முத்துக்குடை நிழலில் முத்தாரம் மார்பிலே ஒளிரக் கொலுவீற்றிருந்தான் முத்தமிழ் வேந்தன். இரவில் நிகழ்ந்தது நினைவை விட்டுப் போகவில்லை. 'இனி, முத்துக்குடை நிழலில் அமைதி காண்பதற்கில்லை' என்றே உள்ளம் உரைத்தது.

இந்த முகக்குறியைக் கூர்ந்து கவனித்தார் புரோகிதரான செல்வநம்பி. வேதாகம சாஸ்திரங்களைக் கரைகண்டு உணர்ந்த பேரறிஞர் இவர். விஷ்ணுசித்தரைக் கல்லாக் கலைஞ ரென்றும், வேதத்திற்கும் வரம்பான மெய்ஞ்ஞானத்தை எப்படியோ உணர்ந்துகொண்ட மகா மேதாவியென்றும் போற்றி நட்புரிமை பூண்டிருந்தவர்.

இந்தப் புரோகிதர் அரசனை நோக்கி, ''மகாராஜாவே, உமக்கு உடம்பில் நோயொன்றுமில்லை; ஆத்ம ஆரோக்கியம் அடைய நீர் வைத்தியம் செய்துகொள்ளவேண்டியதுதான்!'' என்றார்.

''அந்த வைத்தியர் யார்? எங்கே இருக்கிறார்? எப்படி மருந்து செய்யப்போகிறாரோ? ஆத்ம ஆரோக்கியம் என்ற அப்பொருள் எப்படிக் கிடைக்குமோ?'' என்று கேட்டான் அரசன்.

''ஒரு சபை கூட்டவேண்டும்; ஞானிகளான பெரியோர் களை வரவழைக்கவேண்டும். அந்தச் சபைக்கு அந்த வைத்தியரும் வருவார் என்று நம்புகிறேன்'' என்று செல்வநம்பி பதில் சொன்னார்.

Koviloor Digital Library

''அவர் எங்கே இருக்கிறாரோ? அவரை வரவழைக்க முடியுமா?' ''நாம் ஆர்க்கும் குடி அல்லோம்!'' என்று இருப்பவர்களை நாம் எப்படி வரச் செய்வது?'' என்று அரசன் மறுபடியும் கேட்டான்.

அதற்குச் செல்வநம்பி, ''அரசே! உம்முடைய பக்தியும் சிரத்தையுமே அவரை வெளிப்படுத்தி வரவழைக்கவும் கூடும்! மஹான்கள் சேற்றிலே செந்தாமரைபோல் இருப்பார்கள்! நீறுபூத்த நெருப்பைப்போல் இருப்பார்கள்!'' என்று பதில் சொன்னார்.

''அவர் இருக்கும் இடம் தெரிந்தால் தூதர்களை அனுப்புவதற்கு வசதியாக இருக்குமே'' என்று அரசன் சொல்ல, ''வில்லிபுத்தூர் அவர் இருப்பிடம்'' என்றார் செல்வநம்பி. உடனே அரசன், ''அங்கேதான் அந்த யாத்திரிகரும் போவதாகச் சொன்னார்'' என்று, இரவில் நடந்த நிகழ்ச்சியையும் புரோகிதருக்குத் தெரிவித்தான்.

கடைசியாக அரசனும் புரோகிதரும் அமைச்சர்களும் கலந்து ஆலோசனை செய்தார்கள். சபாமண்டபத்தின் தோரணவாசலிலே விலைமதித்தற்கு அரிய திரவியத்தைத் கிழிச்சீரையில் முடித்துக் கட்டிவைக்கவேண்டுமென்றும், அந்தக் கிழியைச் சமய உண்மைகளின் ஸாரத்தை உள்ளபடி உணர்த்துவோருக்கு உரிமையாக்கவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

அந்தத் தீர்மானத்தைத் தமிழ் நாட்டிலும் வேறு இடங்களிலும் பறையறைந்து அறிவிக்குமாறு அரசன் ஏற்பாடு செய்தான். தூதர்களும் முக்கியமான பெரியோர்களை நேரில் போய் அழைத்துவர வேண்டுமென்று அனுப்பப் பட்டார்கள்.

* * * *

Koviloor Digital Library

ஸ்ரீவில்லிபுத்தூரில்

''எழுந்திரும்; மதுரைக்குப் போகவேண்டாமா? பொற்கிழியை அறுத்துக்கொண்டு வரவேண்டாமா?'' என்று யாரோ தட்டியெழுப்பியதுபோலத் தோன்றியது உறங்கிக் கொண்டிருந்த விஷ்ணுசித்தருக்கு.

''அந்தப் பரிசு வேதசாஸ்திரங்களைக் கரை கண்டவருக்கல்லவா?''

''இல்லை; உண்மை கண்டவருக்குத்தான்!''

''வேதக்கடலைக் கரைகாணாது உண்மை காண முடியுமா?''

''முடியும் என்பதற்கு நீரே சாட்சி; நீரே அந்தக் கிழியை அறுக்கவல்லவர்.''

''மண்வெட்டியைக் காட்டிக் கிழி அறுக்க முடியுமோ?''

''என்னைக் காட்டி, நீயே கிழி அறுப்பாய்!''

''நீ யார்?''

''நான்தான் உண்மை!''

பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தார் விஷ்ணுசித்தர். ''உண்மையைக் கண்டு காட்ட, உம்மால் முடியாதென்று நினைக்கிறீரே; அந்த உண்மை நான்தானே; என்னை நானே காட்டுவேன்! மதுரைக்குப் போய்க் கிழியறுத்து வாரும்'' என்று சொல்லி, அந்த உருவம் மறைந்துவிட்டது. ''இந்த நந்தவன நிழலைவிட்டு, அந்த முத்துக்குடை நிழலில்...'' என்று சொல்லிக்கொண்டே, கண்ணைத் துடைத்துக் கொண்டார் விஷ்ணுசித்தர்.

''இப்படியும் ஒரு கனவா?'' என்று விஷ்ணுசித்தர் தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். அதற்கு விடைபோல், ''நான் நித்திரை காட்டிய நிழலா? இல்லை, இல்லை'' என்ற குரல் காதில் ஒலித்தது.

Koviloor Digital Library

''இப்படியும், ஒரு கற்பனை செய்கிறதா என் மனோபாவம்?'' என்றார் விஷ்ணுசித்தர் மறுபடியும். ''நானா வீண் கற்பனை?'' என்று கேட்டது குரல் உள்ளுக்குள்ளே.

'ஆஹா, என்ன அழகு! கண் நிறைந்து அகம் நிறைந் திருக்கிறதே! உளம் உருக்கி உடம்பையும் உருக்கிவிடுமோ என்று தோன்றுகிறதே!' என்று அதிசயித்தார் விஷ்ணுசித்தர். கண்ணுக்குள்ளே ஊடுருவிப்போய்க் கருத்துக்குள்ளே பாய்ந்து சாய்ந்துகொண்டது தெய்வ அழகு!

'அப்பா, உன் அடிமை நான்; உடைமை நான்! மாயக் கூத்தனாகிய நீ, ''கூத்தாடு'' என்றால், கூத்தாடுகிறேன். நீயே உன் உண்மையைப் பாண்டிய ராஜ சபையில் வெளியிட்டு வெற்றி பெறுவாய்!' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார் விஷ்ணுசித்தர். பிறகு நீராடி, நந்தவனத்திற்குப் போய், மலர் கொய்து, மாலைகள் கட்டிக்கொண்டு வடபத்திரசாயி கோயிலுக்குப் போனார்.

மாலைகளை அர்ச்சகர் வாங்கிப் பெருமாளுக்கு அணிந்ததும், விஷ்ணுசித்தர் வணங்கி, ''கண்ணா! நீ உகந்த பணியே எனக்கும் புருஷார்த்தம்'' என்று விண்ணப்பம் செய்துகொண்டார். பிறகு வில்லிபுத்தூர் வாசிகளும் கோயிலில் கூடியிருந்த பக்தர்களும் ஒரு முகமாய் வேண்டிக் கொள்ள, பாண்டியன் அனுப்பியிருந்த முத்துச் சிவிகையில் ஏறிக்கொண்டார் விஷ்ணுசித்தர்.

★ ★ ★ ★

வாதப்போர்

பாண்டிய ராஜசபையிலே மறைவாணர்களும் புலவர் களும் - பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வந்திருந்தவர்கள் - குழுமியிருந்தனர். தர்க்க சாஸ்திரிகளும் பல்வேறு கலைகளில் பயிற்சி பெற்றிருந்தவர்களும் வந்திருந்தனர். பல்வேறு சமயவாதிகளும் திரள் திரளாக வந்திருந்தனர்.

Koviloor Digital Library

ஜைனம் பௌத்தம் முதலான சமயக் கொள்கைகளை ஆராய்ந்து கற்றிருந்த புலவர் பெருமக்களும் கூடியிருந்தனர். ஆஸ்திகர்களோடு நாஸ்திகர்களும் தோளோடு தோளிடித்து நின்றனர்.

பொதுமக்களும், 'ஒரு வாதப் பெரும்போர் நடக்கப் போகிறதே; அதில் புலவர்கள் தொண்டை கிழியச் சொல்லம்பு போடுவதைப் பார்க்கலாமே' என்ற ஆவலுடன் வந்திருந் தார்கள். பண்டிதர்களோ அறிவை வாள்போல் கூர்மையாகத் தீட்டிக்கொண்டு, எதிரிகளின் கொள்கைகளை வெட்டி வீழ்த்திவிட வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தார்கள்.

மன்னன் அமைச்சர்களுடனும் மற்ற அதிகாரிகளுடனும் விருந்தினர்களை உபசரித்துக்கொண்டிருந்தான். எப்படியாவது தன் இதயத்திற்கு ஆறுதல் அளிக்கக்கூடிய உண்மையைக் கண்டுகொள்ள வேண்டும் என்ற ஆசை அரசன் உள்ளத்தில் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்தது.

அவன் தன் புரோகிதரான செல்வநம்பியை நோக்கி, "அவர் வருவாரோ, மாட்டாரோ?" என்று சந்தேகமாய்க் கேட்டான். அவரோ ஒன்றும் பதில் சொல்லாமல் வில்லிபுத்தூரின் திசை நோக்கித் தொழுதார்.

மதவாதிகளெல்லாம் வாதம் செய்யத் தொடங்கி விட்டார்கள். 'எம்மதமும் எங்களுக்குச் சம்மதம் இல்லை; வாழ்க்கையில் கிடைக்கும் சிற்றின்பமே எங்களுக்குப் பேரின்பம்!' என்று லோகாயதவாதிகள் வாதித்தார்கள்.

சிலர் வேதசாஸ்திர வாக்கியங்களைச் சரமாரியாகப் பொழிய, வேறு சிலர் யுக்திவாதங்களாலும், சாதாரண அநுபவங்களை ஒட்டிய வாதங்களாலும் வேதசாஸ்திரக் கொள்கைகளை மறுக்க முயன்றார்கள். 'பகுத்தறிவே பேரறிவு, இதற்கு அப்பாலும் இல்லை; இப்பாலும் இல்லை!' என்று வாதித்தவர்களும் உண்டு.

Koviloor Digital Library

'கொல்லா விரதமே அதிமுக்கியமானது' என்று சொல்லிச் சிலர், அந்த விரதத்துடன் ஊன்வாடத் தவங்கிடத்தல் முதலான விரதங்களையும் மோட்சமார்க்கமாகக் காட்டினார்கள். வேறு சிலர், 'ஒழுக்கமே போதும்; பக்தி வேண்டாம்; வேதாந்த ஞானமும் வேண்டாம்' என்று சித்தாந்தம் செய்ய முயன்றனர்.

வேதாகமங்களைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டவர்களிலும் தங்கள் மனம் போன போக்கெல்லாம் பொருள் கொண்டு வாதஞ்செய்தவர்கள் உண்டு. 'எங்கள் வாமதந்திர மார்க்கமே வேதசாஸ்திரத்தின் உட்பொருளாவது' என்று சொல்லிச் சிலர், மதுபானம் முதலான கெட்ட பழக்கங்களையும் வழிபாட்டின் இன்றியமையாத அம்சமாகக் குறிப்பிட்டனர்.

சில சித்தர்கள், 'முத்திநெறியைக் குறித்து நாம் ஒன்றும் அறியோம்; சித்தி நெறியே அநுபவநெறி' என்று சாதித்தார்கள். சிலர் மந்திர தந்திரங்களையே சமயநெறியாகப் போதித்தனர்.

அரசன் சோர்ந்து பெருமூச்சுவிட்டான், 'ஐயோ, அவர் இன்னும் வரவில்லையே?' என்று. மன்னவனுக்கு உற்றவராய் உயிர்த் துணையாயிருந்த செல்வநம்பியோ மறுபடியும் வில்லிபுத்தூரரைத் திசை நோக்கித் தொழுதார். வாதப்போரோ உக்கிரமாக நடந்துகொண்டிருந்தது.

வில்லிபுத்தூரர் விஜயம்

திடீரென்று, 'வில்லிபுத்தூரர் வருகிறார், விஷ்ணுசித்தர் வருகிறார்!' என்ற கோஷம் எழுந்தது. முகப்பொலிவையும் அவரது வசீகரமான தேஜஸையும் பார்த்த சபையினரெல்லாம் எழுந்து நின்று அஞ்சலி செய்தார்கள்.

செல்வநம்பி விரைந்து போய் வணங்கினார். அரசனும் அடிகளில் முடிபட விழுந்து, பணிந்து, குதூகலத்துடன் எழுந்து நின்றான்.

Koviloor Digital Library

பரிவு பொங்கிய கண்கள் மன்னனைக் குளிர நோக்கின. பிறகு விஷ்ணுசித்தர், செல்வநம்பியை நோக்கி, யோகக்ஷேமம் விசாரித்தார். அப்பால் அனைவரும் வழிபட்டு வழிவிடத் தமக்கென்று அமைக்கப் பெற்றிருந்த ஆசனம் பொலிய வீற்றிருந்தார்.

சபையில் பொறாமைக்குக் குறைவில்லை. 'பெரும் புலமைத் திறன் பெற்றிராத இந்தப் பக்தருக்கோ இவ்வளவு மரியாதை?' என்று ஆத்திரங்கொண்டு முணுமுணுத்தவர் பலர்.

'வேதங்களில் விசேஷமான அப்பியாசம் இன்றி ஏற்கனவே செய்துவந்த அப்பியாசத்தையும் நந்தவனத் தொழிலில் மறந்திருப்பவருக்கு இப்படி ஒரு விசேஷ ஸ்தானம் கொடுக்கலாமா?' என்று வெளிப்படையாகச் சொல்லாமல், உள்ளுக்குள்ளே எண்ணியிருந்தவர்களும் உண்டு.

வாதம் தொடர்ந்து நடந்தது; மும்முரமாகவே நடந்தது. வேதாகமங்களும் சாஸ்திரங்களும் கொலைக் கருவிகளைப் போல் பிரயோகிக்கப்பட்டன. தமக்கிடையே கருத்து வேற்றுமை உள்ளவர்களும் விஷ்ணுசித்தரின் பாகவத தருமத்தையும் கைங்கரிய நெறியையும் மறுப்பதில் கருத்தொருமித்துக் கலந்து கொண்டனர்.

பல்வேறு கொள்கையினரும் பல்வேறு கேள்விகளை அம்புகள் போடுவதுபோல் விஷ்ணுசித்தர்மீது தொடுத்து விட்டனர். ''பக்தியெல்லாம் மூடபக்திதான்!'' என்றார்கள் சார்வாகக் கொள்கையினரான நாஸ்திகர்கள். ஆஸ்திகர்களிலும் இவரது கைங்கரிய நெறியைப் பழித்தவர்கள் உண்டு.

அரசன் கவலையுடன் செல்வ நம்பியை நோக்கி, ''எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு ஒன்றும் அறியாதவர் போல் இருக்கிறாரே!'' என்று மெள்ளச் சொன்னான். அதற்குச் செல்வ நம்பி, ''அவர் அறம் அன்றி மற்று அறியார்; பகையோ வெறுப்போ கோபமோ சிறிதும் இல்லாத மதத்தினர்'' என்று பதில் சொன்னார்.

புலவர்களும் தார்க்கிகர்களும் பல்வேறு சமயவாதி களும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அமைதியாகவும்

Koviloor Digital Library

பொறுமையயாகவும் அன்புடனும் பதில் சொல்லத் தொடங்கினார் விஷ்ணு சித்தர். முரட்டுத்தனமாக வாதம் செய்தவர்களையும் இரக்கத்துடன் நோக்கினார். அவ நம்பிக்கையுடன் இருந்த இதயங்களில் நம்பிக்கை தழைக்கச் செய்தார்.

காரணமின்றிக் காரியம் இல்லை என்று சொல்லி, ஆதிமூலமாகிய காரணவஸ்து ஒன்று உண்டு என்பதைத் தர்க்கரீதியாக வற்புறுத்தினார். அந்த ஆதிப் பரம்பொருள் பரம ஸாத்விகமான திருமால் என்றார்.

பகவான் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பரம் பொருளாக இருப்பதுடன் எங்கும் நிறைந்திருக்கும் மெய்ப்பொருளாகவும் இருப்பதாகச் சொல்லி, அவதார தத்துவத்தையும் எல்லாருக்கும் விளங்கும்படி எடுத்துரைத் தார். அவதாரமூர்த்திகளில் தம் உள்ளம் கவர்ந்த கண்ணனது வழிபாடு குறித்தும், ஸ்ரீகிருஷ்ண லீலைகளின் உட்பொருள் குறித்தும் பேசினார்.

கண்ணனது திருமேனியழகு குறித்துப் பேசப்பேச, நீறுபூத்த நெருப்பைப்போல் இருந்த இவர் தோற்றமும் நெய்பொழிந்த அக்கினிபோல் ஜொலிக்கத் தொடங்கியது. 'கண்ணனுடைய இந்த அழகைக் காணீர்! அந்த அழகைக் காணீர்!' என்று ஆய்ச்சி, பெண்களுக்கெல்லாம் காட்டியதாக இவர்பாடியிருக்கிறாரல்லவா? அப்படியே இறைவனது அருளழகையும் சபையினர்க்கெல்லாம், ''இதோ காணீர்! அதோ காணீர்!'' என்று காட்டத் தொடங்கினார்.

மெள்ளப் பேசத் தொடங்கிய வாக்கு, கணீர் கணீரென்று மணியடிப்பதுபோல் முழங்கியது. எல்லாரும் அந்த முகத்தையே பார்த்துக்கொண்டு இவர் சொல்வதையே கேட்டுக்கொண்டிருந்தனர். காதுகள் மட்டுமா கேட்டுக் கொண்டிருந்தன? ஊனெல்லாம், உளமெல்லாம், உணர்வெல்லாம், உயிரெல்லாம் கேட்டுப் பரவசமாயின.

திருமாமகளோடு பிரிவின்றியிருக்கும் பரமபதநாதன், சங்கு சக்கரங்களுடன் தேவாதிதேவனாய், ராஜதிராஜனாய்

Koviloor Digital Library

அண்ட கோடிகளை ஆண்டுவருகிறவன், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்து, உலகத்தை அறநெறியிலும் அன்பு நெறியிலும் செலுத்துவதற்காக யுகந்தோறும் யுகந்தோறும் அவதரித்து வரும் ரகசியத்தை அந்தச் சபையிலிருந்த ஒவ்வொருவர் உள்ளமும் ஒருவாறு உணர்ந்துகொண்டது. அவதாரங்களிலெல்லாம் பரிபூர்ண அவதாரம் என்று அன்பர் கொண்டாடும் கண்ணன், தங்கள் கண் முன்பு அப்போதுதான் அவதரிப்பது போலத் தோன்றியது.

குழந்தைக் கண்ணனின் மேனியழகு விண்ணகத்தை மண்ணகத்திலேயே தென்படச் செய்தது. அந்த அடிமலர்கள், 'உடனே சரணாகதி செய்து பேறுபெறுவீர்!' என்று ஒவ்வொருவரையும் தூண்டின.

கண்ணன் பிறந்ததும் வளர்ந்ததும் ஏதோ ஒருகாலத்தில் நடந்து முடிந்துவிட்டதுபோலத் தோன்றவில்லை; என்றும் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் தெய்வலீலையாகத் தோன்றியது.

அந்தத் தொட்டிலை விஷ்ணுசித்தர் ஒருகணம் தொட்டு ஆட்டுவதுபோலவும், மறுகணம் தொட்டிலுக்குள்ளே, 'ஓங்கி உலகம் அளந்த புருஷோத்தமன் இவன்!' என்று சுட்டிக் காட்டுவதுபோலவும் தோன்றியது.

தெய்வக் குழந்தையைப் பெரியாழ்வார் ஒருசமயம் ஒக்கலில் வைத்துக்கொண்டு அம்புலி காட்டி, 'இதோ உங்கள் குழந்தைப் பெருமாள்!' என்று காட்டுவதுபோலத் தோன்றியது. 'ஓஹோ! இவரே தாயாகி வளர்த்த குழந்தையா இவன்? தாய்க்குத் தெரியாதா சேயின் அருமை?' என்ற உணர்ச்சி சபையெங்கும் ஊடுருவிப் பாய்ந்தது.

கண்ணனுடைய பாலலீலைகளில் இறைவனுடைய முத்தொழில் விளையாட்டும் பிரதிபலித்தன. ஆயர் மங்கையர் முறையீட்டிலும் துன்பங்களிலும் இன்பங்களிலும் காதலிலும் வேறு உணர்ச்சிகளிலும் ஆத்மதாகமும் ஆத்மதாபங்களும் எவ்வளவு தெளிவாகப் பிரதிபலித்தன.

Koviloor Digital Library

உலகம், கோன் இல்லாத மந்தை அன்று என்பது தெளிவாயிற்று. ஒவ்வொரு கன்றையும் பின்தொடர்ந்து காப்பாற்றும் ஆயன், ஒருவரையும் கைவிடமாட்டான் என்ற நம்பிக்கை உறுதிப்பட்டது. தெளிவாகிய பாற்கடலில் தொல்லறிவு என்னும் ஆயிரவாய்ப் பாம்பணைமீது அறிதுயில் அமர்ந்த பேராயனே வெண்ணெய் திருடி உள்ளம் திருடும் கள்வனுமாயினான் என்பதுதான் எவ்வளவு நன்றாகப் புலனாகிவிட்டது!

ஒரு சமயம் பகுத்தறிவு பரிசீலனை செய்து ஒப்புக் கொள்ளும் நிலையில் பேசுவார்; ஒருசமயம் பகுத்தறிவைக் கடந்த பரவச நிலையில் உள்ளொளியிலே தாம் காணும் உண்மையொளியைப் புலப்படுத்திவிடுவார்.

ஒருசமயம் சீதைக்கு அநுமன் அடையாளங்கள் காட்டியதுபோல் சில அடையாளங்களை நினைவூட்டி, உள்ளத்திலே நம்பிக்கை தழைக்கச் செய்வார்; ஒருசமயம் தாம் கண்ட சுவடு உரைத்து, 'நாடுங்கள்; சிக்கென நாடிப் பற்றிக்கொள்ளுங்கள்!'' என்பார்.

பக்தராவார் பெறும் பேறுகளைப் பிரஸ்தாபிப்பார்; யமபயம் நீங்கும் நிலையை வெளியிடுவார்; தாம் பெற்ற நன்மைகளை எல்லாரும் பெறவேண்டும் என்ற கருணையுடன், %'விருப்பமுள்ளவர்கள், துவேஷம் இல்லாதவர்கள் எல்லாரும் வாருங்கள்! விரைந்து வாருங்கள்!'' என்பார்.

''பண்டைக் குலத்தைவிட்டுத் தொண்டக் குலம் பெற்றுப் புதுவாழ்வு வாழ்வீர்!'' என்று கல்லும் புல்லும் உருக, சொல்லும் பொருளும் குழைய விஷ்ணுசித்தர் கூறிமுடித்ததும், எழுது சித்திரங்கள் போல்இருந்து கேட்டுக்கொண்டிருந்த சபை, ஏதோ ஒரு புத்துயிர் பெற்றுப் பொலிவது போலத் திகழ்ந்தது. அரசன் அந்த ஞானானந்த மழையில் சொட்டச் சொட்ட நனைந்தவன்போல் மெய்சிலிர்த்து நின்றான்.

அப்போது வித்யாசுல்கமாகக் கட்டிவைத்திருந்த பொற்கிழி அப்படியே விஷ்ணுசித்தரை நோக்கித் தாழ்ந்து

Koviloor Digital Library

வளைந்தது போலக் காணப்பட்டதாம் அரசனுக்கு. உடனே அவன் துண்ணென எழுந்து ஓடி, அக்கிழியை அறுத்துக் கொண்டு, விஷ்ணுசித்தரின் அடிகளில் வைத்து வணங்கி நின்றான்.

சபையிலிருந்த புலவர்களும் சமயவாதிகளும் பிறரும் தங்கள் புலமைச் செருக்கு முதலியவற்றை மறந்து, விஷ்ணு சித்தர் அடிகளில் விழுந்து வணங்கினார்கள். விஷ்ணுசித்தரோ கண்களை மூடிக்கொண்டு வில்லிபுத்தூரில் தாம் கண்ட கனவை நினைத்துப் பார்த்துக் கண்பனி சோர, ''உண்மைப் பொருளாகிய நீ உன் உண்மையை வெளியிட்டுக் கொண்டாய்!'' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார்.

பிறகு தம்மை வணங்கிய செல்வநம்பியை விஷ்ணு சித்தரும் வணங்கி, இளநகையரும்பி, ''உம்முடைய மெய்யன்பும் இறைவன் திருவருளுமே இன்று துணை புரிந்தன'' என்றார். செல்வநம்பி அரசனை நோக்கி, ''வேதாந்த விழுப்பொருளின் மீதிருந்த விளக்கை இன்று விஷ்ணுசித்தர் காட்ட, நாமெல்லாம் கண்டுபேறு பெற்றோம்!'' என்று சொன்னார்.

பாண்டியன் ஞானச்சுடராக விளங்கிய விஷ்ணுசித்தரின் திருமேனியைப் பேரன்புடன் நோக்கி,

அடியனேற்(கு) அருள்நல்கி
ஆளவந்த திருவுருவோ!

என்று வியந்துரைத்து, அகம் குழைந்து, மறுபடியும் அடிகளில் விழுந்தான்.

விஷ்ணுசித்தர் அவனை விரைந்தெடுத்து ஆசி கூறினார். அந்த ஸ்பரிசத்தால் அரசன் புதுவாழ்வு பெற்றவன்போல் உள்ளமும் உடம்பும் ஒருங்கே பூரிக்கப் பெற்றான்.

முத்துக்குடை நிழலிலேயே விஷ்ணுசித்தர் என்ற பக்திப் பூங்காவின் குளிர்நிழலும் பாண்டிய சக்கரவர்த்திக்குக் கிடைத்துவிட்டது.

Koviloor Digital Library

5

பகவானை வாழ்த்தினார்

விஷ்ணுசித்தரின் வெற்றியை முரசுகள் இடிக்குரலில் முழக்கின. எத்தனையோ போர்க்களங்களில் வெற்றி கண்டிருந்த பாண்டியனுக்கு, ஒரு துளி ரத்தமும் சிந்தாது விஷ்ணுசித்தர் பெற்றுவிட்ட வெற்றி ஓர் அதிசய வெற்றியாகவே தோன்றியது. இந்த வெற்றி விழாவைத் தலைநகரம் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று அரசன் விரும்பினான்.

நகர் வலம்

பகவானுடைய திருவருளை நினைத்தவண்ணம் விஷ்ணுசித்தர் தியானத்தில் இருந்தார். அரசன், செல்வ நம்பியைக் கலந்து ஆலோசித்தபின் விஷ்ணு சித்தரை அணுகி விநயமாக,

'அடியேன் அல்லல்
தீர ஆளவந்
தவரே! இன்(று)இக்
கடிநகர் வலமாய்
நண்ணிக் காட்சிதந்
தருள்வீர்'

என்றான்.

(கடிநகர் - காவலோடு கூடிய நகர். நண்ணி - அடைந்து.)

நகர்வலம் வரவேண்டும் என்ற அரசனது பிரார்த் தனைக்கு விஷ்ணுசித்தர், 'ஆம்' என்றும் பதில் சொல்ல

Koviloor Digital Library

வில்லை; 'ஆகாது' என்றும் சொல்லவில்லை. உள்ளம் ஒடுங்கி அருள்வசமாக லயித்து நின்றவரை மன்னன் தூக்கியெடுத்துத் தன் யானைமேல் ஏற்றி வைத்தான்.

அது அரசனது பட்டத்து யானை. 'ஒரு கருங்குன்றோ!' என்று சொல்லுமாறு கம்பீரமாக வந்து நின்ற யானைமீது அம்பாரி மிகவும் அழகாய் அமைக்கப்பெற்றிருந்தது. அதில் விஷ்ணுசித்தர் வீற்றிருந்தார், அழகுக்கு அழகு செய்வதுபோல.

மன்னனும் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் கைகூப்பி வணங்க, அந்தணர் குழாங்களும் பக்தகணங்களும் தொழுது வாழ்த்த, மங்கள வாத்தியங்கள் அதிர்ந்தன.

வட்ட வெண்குடை நிழற்ற, இருமருங்கும் சாமரை வீச, 'வில்லிபுத்தூர் வேதக்கோன் வந்தார்! வேதப்பயன் கொள்ளவல்ல விஷ்ணுசித்தர் வந்தார்! பாண்டியன் கொண்டாடப்பட்டர்பிரான் வந்தார்!' என்று விருது ஊதிச் சின்னம் பரிமாறிக் கட்டியம் எடுத்திசைத்துச் சங்குகளையும் கம்பீரமாக ஊதிமுழக்கினார்கள்.

பூதம்ஓர் ஐந்தும் ஏத்த,
புரைஅறும் அறங்கள் ஏத்த
வேதம்ஓர் நான்கும் ஏத்த
விண்ணவர் குழாங்கள் ஏத்த

(புரை அறும் - குற்றமற்ற. விண்ணவர் குழாங்கள் - தேவர் கூட்டங்கள்.)

விஷ்ணுசித்தர் வருகின்றார் என்று பலரும் பேசிக்கொண்டார்கள்.

மதுரைவாசிகள் இந்த வெற்றி விழாவைத் தங்கள் சக்கரவர்த்தியின் வெற்றி விழாக்களுக்கெல்லாம் மேலான விழாவாகக் கொண்டாடினார்கள். பெண்களுக்கெல்லாம் ஒரே உத்ஸாகம்! அவர்கள் சந்தனக் குழம்பையும் வாசனைப்

Koviloor Digital Library

பொடிகளையும் பூக்களையும் வீதிகளில் வாரியிறைத்தார்கள். கூட்டத்திலே பொன்னும் மணியும் சிந்தியவர்களும் உண்டு.

வீட்டு வாசல்களிலும் சாளரங்களிலும் வீதிகளிலும் மொய்த்துக்கொண்டிருந்த மக்கள், ''விஷ்ணுசித்தர் வாழ்க! வல்லபதேவர் வெல்க!'' என்று கூவினார்கள். இந்த வைபவத்தை வானவீதியிலிருந்தும் தேவ கணங்கள் கண்டு, விஷ்ணு சித்தரை வாயார வாழ்த்தத் தொடங்கினார்களாம்.

இந்த வைபவத்திலே தானும் கலந்துகொண்டு - விஷ்ணு சித்தர் கண்காண வந்து கலந்துகொண்டு - இவரது வெற்றியை அநுபவிக்கவேண்டும், தானும் வாழ்த்துப் பெறவேண்டும் என்று பகவானும் மகாலட்சுமியுடன் வந்து தோன்றினானாம், வானவீதியிலே. மகனுடைய வெற்றியைக் கண்டு மகிழும் பெற்றோர் போலத் திருவுடன் இறைவன் தோன்றியது விஷ்ணுசித்தரின் கட்புலனுக்கு இலக்காகிவிட்டதாம்.

சக்தியும் சௌந்தரியமும்

உடனே விஷ்ணுசித்தர் யானைக் கழுத்தின்மேல் கிடந்த மணிகளையே தாளமாகக் கொண்டு பாடத் தொடங்கினார்:

பல்லாண்டு, பல்லாண்டு
பல்லா யிரத்தாண்டு.

இந்தத் தெய்வ அழகு வாழவேண்டும் என்று.

'ஸர்வசக்திக்கும் தீங்கு நேரக்கூடுமா?' என்பதை எண்ணாமல், தமது நிலையையும் மறந்து, பரமபக்தி, பாட்டாகப் பொங்க, விஷ்ணுசித்தர் கருடன்மீது தாம் கண்ட திவ்யமங்கள ஜோதியைத் தேவியுடன் வாழ்த்திப் பல்லாண்டு பாடுகிறார்.

தேவாதிதேவனுடைய ஸர்வசக்தி நீலம் உண்ட மின்னல்போல் இருந்த திருமேனியின் சௌந்தரியத்தில்

Koviloor Digital Library

மறைந்து காண்கிறது. 'அந்த அழகிற்கு என்ன தீங்கு வருமோ?' என்று அஞ்சுகிறது அன்பு.

அந்த அழகிற்கு, அந்த இளமைக்கு வரம்பு உண்டா? கால வரம்புதான் உண்டா, எனினும்,

பல்லாண்டு பல்லாண்டு, பல்லா யிரத்தாண்டு
பல்கோடி நூறா யிரமும்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா; உன்
சேவடி செவ்விதிருக் காப்பு.

(சேவடி செவ்வி - சிவந்த திருவடிகளின் அழகு. திருக்காப்பு - காவல் அல்லது ரட்சை ஏற்படுவதாக.)

என்று பாடுகிறார்.

'காலம் நடையாடாத பரமபதத்திலே இருக்கும் பரம சௌந்தரியம் இந்த உலகத்திலே கண்செலுத்திப் பார்க்கும்படி வந்து நிற்கிறதே!' என்பது விஷ்ணுசித்தரின் அற்புத பக்தியநுபவங்களில் ஒன்று. 'அந்த அழகிற்குக் காலமும் அசுரசக்திகளும் நடையாடுகிற உலகம் என்ன தீங்கு செய்துவிடுமோ?' என்ற சங்கையைப் பொங்கும் பேரன்பால் ஏற்படுகின்ற அதிசங்கை என்றே சொல்லவேண்டும்.

இப்படி அதிசங்கையாலே ஸர்வ ரட்சகனாகிய தனக்கே ரட்சை கட்டி வாழ்த்தப் போகிறார் என்று தெரிந்துகொண்ட பகவான், தமது அழகிலே புதைந்திருந்த சக்தியை ஜொலிக்கச் செய்து காட்டுகிறானாம். இவர் விசேஷமாய் உகந்த கிருஷ்ணாவதார காலத்திலே தன்னைக் கொல்லுமாறு கம்ஸன் ஏவிய மல்லர்களை வென்றொழித்த திண்மைவாய்ந்த திருத்தோள்களைக் காட்டியருள்கிறான். இத்தோள்களைத் தான்,

மல்ஆண்ட திண்தோள்

என்று பாடுகிறார் விஷ்ணுசித்தர்.

Koviloor Digital Library

இவர் அச்சம் தணியக் காட்டிய, 'மல் ஆண்ட திண் தோளி'ன் அழகும் இவரது பரிவை மேலும் தூண்டி அச்சத்தை அதிகரிக்கவே காரணமாகிறதாம். பிள்ளை சூரப்பிள்ளை யானாலும் தாய், 'இந்தச் சூரப்பிள்ளை யாரையும் லட்சியம் செய்யாமல் போர்செய்யப் பாய்ந்துவிடுமே! எந்தத் துஷ்ட சக்தியால் எப்படிக் கேடு வந்துவிடுமோ?' என்று அஞ்சுவ துண்டு.

பெரியாழ்வாரின் தாயன்பும் தன் 'மல்லாண்ட திண்தோள்' களைக் காட்டி நின்ற நீல மணிவண்ணனைக் கூவியழைத்து,

> மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
> சேவடி செவ்விதிருக் காப்பு.

என்று ரட்சை கட்டிப் பல்லாண்டு பாடி வாழ்த்துகிறது.

'பல்லாண்டு' என்று ஒரு தடவை சொல்லுகிறாரா? 'பல்லாண்டு பல்லாண்டு' என்று சொல்லித்தான் நிறுத்து கிறாரா? 'பல் ஆயிரத்து ஆண்டு' என்றும், 'பல் கோடி நூறாயிரமும்' என்றும் அடுக்கிக்கொண்டு போகிறாரே! - ஏன் இப்படி? தாகம் அதிகரித்தவன், 'தண்ணீர், தண்ணீர்...' என்று துடித்துக்கொண்டிருப்பானல்லவா, கூவிக்கொண்டிருப் பானல்லவா? இவர் சௌந்தர்யதாகம் இப்படி! ஆத்ம தாகம் இப்படி!

'திவ்ய சௌந்தர்யமே! நீ க்ஷேமமாக இருக்கவேணும்; உனக்கு ஜயம் உண்டாக வேணும்! உனக்கு மங்களம் உண்டாக வேணும்; இல்லாவிட்டால் அன்பர்களாகிய எங்களுக்கு என்ன பிழைப்பு! என்ன இருப்பு!' என்பது இந்தப் பேரன்பரின் இதயகானம்.

ஸர்வ ரட்சகனைக் காணும்போது, அவனுக்கா ரட்சை யிடுவது? அடியவரல்லவா தமக்கு ரட்சை தேடிக்கொள்ள வேணும்? தமக்கு வேண்டிய மங்களங்களைப் பிரார்த்தித்துக்

Koviloor Digital Library

கொள்ளவேணும்? விஷ்ணுசித்தரோ, ''மணிவண்ணா! உனக்கு மங்களம் உண்டாவதாக; ஜயமங்களம் சித்திப்பதாக! ஜயவிஜயீபவ!'' என்று மனமார வாயார வாழ்த்துகிறார்.

இப்படி, ஸர்வசக்தியாகிய பகவானுக்கு மங்களம் உண்டாகும்படி வாழ்த்துவதை, 'மங்களா சாஸனம்' என்பது ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயம். பெரியாழ்வார் பாடிய 'திருப்பல்லாண்டு' என்ற தலைப்பிலுள்ள பாசுரங்களை, 'மங்களாசஸனப் பிரபந்தம்' என்று கூறுவது உண்டு.

பல்லாண்டு பாடிய விஷ்ணுசித்தரைப் 'பல்லாண்டு பாடிய பட்டர்பிரான்' என்று பிரசித்தமாய்க் கூறுவதுண்டு. 'பட்டர் பிரான்' என்ற பட்டத்தைப் பாண்டிய மன்னனே இவருக்கு அளித்தான் என்பர்.

ராஜசபையில் பல பண்டிதர்களையும் சமய வாதிகளை யும் வென்று, அவர்களெல்லாம் நகர் வலத்திலே குடை, சாமரம், மகர தோரணம் முதலியவற்றைப் பணிமாறி, 'ஜயவிஜயீபவ!' என்று வாழ்த்திக்கொண்டு வர, அவர்களுக் கெல்லாம் ஒரு தனி நாயகமாக விளங்கினமையால் வல்லபதேவ மன்னன் இவருக்குப் 'பட்டர்பிரான்' என்று பட்டம் சூட்டினான் என்றும், பண்டிதர்கள் எல்லாரும் மகிழ்ந்து அங்கீகரித்துக் கரகோஷம் செய்தார்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

கிழி அறுத்துப் பல்லாண்டு பாடிய கதை

பாண்டியபட்டர் என்ற ஓர் ஆசாரியர், கிழியறுத்துப் பட்டர்பிரான் வெற்றி சூடிய கதையை இரண்டு வெண் பாக்களில் குறிப்பிடுகிறார்:

'பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான்'என்(று)
ஈண்டிய சங்கம் எடுத்தூத, - வேண்டிய
வேதங்கள் ஓதி விரைந்து கிழிஅறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

Koviloor Digital Library

(ஈண்டிய சங்கம் - திரள் திரளான சங்குகளை. யாமுடைய - எமக்கு முழு உரிமையாகிய. பற்று - புகலிடம். யாமுடைய பற்று - நம்முடைய பூர்ண ரட்சை. பற்று - (இங்கே) பற்றுக்கோடு.)

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூர் என்(று) ஒருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம். - முன்னாள்
கிழிஅறுத்தான் என்றுரைத்தோம்; கீழ்மையினில் சேரும்
வழிஅறுத்தோம் நெஞ்சமே! வந்து.

(மின்ஆர் - ஒளி நிறைந்த. தடமதில்சூழ் - பெரிய மதில்சூழ்ந்த. ஒருகால் - ஒருதரம். சொன்னார் கழல் கமலம் - சொன்னவர்களுடைய அடித்தாமரையை. சூடினோம் - தலைமேல் கொண்டோம். கீழ்மையினில் சேரும் வழி - கீழான வழி.)

பல நூற்றாண்டுகளாக எண்ணிறந்த பக்தர்களுக்குக் கீழ்மை சேராத நன்னெறி காட்டி வந்திருக்கிறது பட்டர்பிரான் கிழியறுத்துப் பல்லாண்டு பாடிய இக்கதை. இக்கதைக்கு வைஷ்ணவ குரு பரம்பரைக் கதைகளில் ஒரு விசேஷ ஸ்தானம் உண்டு. இந்தப் பட்டர்பிரானைப் 'பெரியாழ்வார்' என்னும் பெயருடன் பன்னிரண்டு ஞான ஜோதிகளில் ஒருவராகப் போற்றுகிறது வைஷ்ணவ உலகம்.

பொதுவாக ஆழ்வார்கள், தங்கள் பேரன்பினால் பகவானுக்கு மங்களாசாஸனம் செய்திருக்கிறார்கள். அதாவது, தங்கள் இறைவனுக்கு மங்களம் உண்டாகவேண்டும் என்று வாழ்த்தியிருக்கிறார்கள். அவனுக்கு மங்களம், தங்களுக்கும் மங்களம் என்பது இவர்கள் கண்ட அன்புப் பெருநெறி. இந்த ஆழ்வார்களில் எல்லாம் விஷ்ணுசித்தருக்கு ஒரு தனி ஸ்தானம் உரியது என்பர்.

பகவானுடைய வாழ்வையே தமது வாழ்வாக நினைத்துப் பொங்கிய பரிவு விஷ்ணு சித்தர் என்ற

Koviloor Digital Library

பெரியாழ்வாரிடம் மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் அதிக அளவில் காணப்படுகிறது எனலாம். ஸர்வரட்சகனையும் ரட்சிக்க ஆசைப்பட்டு அதற்குவழி தேடவேணுமென்று பரமப்பிரீதியால் தடுமாறுவதுபோல் பாடப் பெற்றிருக்கிறது திருப்பல்லாண்டுப் பிரபந்தம்.

இந்தப் பரமப் பிரீதியை - பொங்கும் பரிவைத் - திருப்பல்லாண்டுக் கவிதையில் குமிழியிடக் காணலாம் என்ற குறிப்பைப் பிற்கால ஆசாரியரான மணவாள மாமுனிகளின் வாக்கிலும் காணலாம்:

மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள்ஆர் வத்தளவு தான்அன்றிப், - பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்.

(ஆர்வத்து அளவு - நிறைந்த அன்பின் அளவு. பரிவாலே - இரக்கத்தோடு கூடிய பேரன்பினாலே.)

ஆழ்வார்களுக்கு உரிய ஆர்வத்தையும் மிஞ்சிப் பொங்கிய பரிவு இந்த ஆழ்வாரைப் பெரியாழ்வாராக்கியது என்பது மணவாள மாமுனிகளின் கருத்து. இதனால் வாதப் போராட்டத்தில் குதர்க்கவாதிகளையும் குயுக்திவாதிகளையும் நேர்மையாலும் அன்பாலும் வென்று, பட்டர்பிரானாகத் திகழ்ந்த விஷ்ணுசித்தர் 'திருப்பல்லாண்டு' பாடிப் 'பெரியாழ்வார்' என்ற பேரும் புகழும் பெற்றார் என்று ஊகிக்கலாம்.

உண்டோ திருப்பல்லாண்டுக்(கு)
ஒப்பதோர் கலைதான்?
உண்டோ பெரியாழ்வார்க்(கு)
ஒப்பொருவர்?

என்று மணவாளமாமுனிகள் வியந்துரைப்பதும் கூர்ந்து நோக்கத் தக்கது.

Koviloor Digital Library

வல்லபதேவ பாண்டியன் கூட்டிய பண்டித சங்கத்தை வியாஜமாகக் கொண்டு பகவான், தான் மெய்ப்பொருள் என்பதை வெளியிட்டுக் கொண்டதுடன், 'திருப்பல்லாண்டு வாயிலாக மெய்ப்பொருளை அழகுப் பொருளாகக் காண்பது நலம் என்பதையும் வெளியிட்டருளுகிறான் என்று பக்தர்கள் கருதுவார்கள். இப்படி உண்மையை அழகாய்க் காண்பதற்குப் 'பண்டைக் குலத்தைத் தவிர்ந்து' - அதாவது, பழைய சாதி முதலான குறுக்குச் சுவர்களைத் தகர்த்தெறிந்துவிட்டுத் தொண்டக் குலத்தினராக வேண்டும் என்பர்.

ஊருக்குத் திரும்பினார்

மதுரைமாநகரில் 'திருப்பல்லாண்டு' பாடி, 'கூடும் மனமுடையவர்களெல்லாம், ''வயிற்றுப் பெருமானே பெருமான்!'' என்ற கொள்கையை விட்டு எங்கள் தொண்டக் குழாம் புகுந்து கைங்கரியம் புரிந்து பேறு பெறலாம்' என்று அறைகூவிப் பறை சாற்றியபின் விஷ்ணுசித்தர், 'பகவானுக்குப் பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் வந்தார்! பாண்டியனை ஆட்கொண்டு பொங்கும் பரிவால், பகவானுக்கு மங்களா சாஸனம் செய்த பெரியாழ்வார் வந்தார்!'' என்ற விருதுகளுடன் வில்லிபுத்தூருக்குத் திரும்பினார். வில்லிபுத்தூர் வாசிகள் மங்கள வாத்திய கோஷங்களுடன் வரவேற்றனர்.

ஆழ்வார் வடபத்திரசாயி கோயிலுக்கு நேரே போய்த் தண்டமென விழுந்து வணங்கி, கிழிச்சிரையிலுள்ள பொருளை யும் அரசன் அளித்த வேறு பொருள்களையும் பெருமான் திருவடிகளில் அர்ப்பணம் செய்தார். இந்தப் பொருள்களைக் கொண்டு, பகவானது நந்தவனத்தை முன்னிலும் அழகு செய்தார் என்றும், வேறு பல கைங்கரியங்களில் ஈடுபட்டார் என்றும் கருதலாம்.

இப்பெரியாரை ஞானாசாரியராகக் கொள்ளும் பேறுபெற்ற ஸ்ரீவல்லவதேவ பாண்டிய மன்னன் என்ற

Koviloor Digital Library

வீரமன்னன் அதிவீரனான ஞானபக்தனாகப் பரிணமித்து, இம்மையிலேயே மறுமைச் செல்வமும் பெற்று வாழ்ந்தான். இம்மன்னனது புரோகிதரான செல்வநம்பிக்கும் பெரியாழ் வாருக்கும் நட்புநாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மேன்மேலும் வளர்ந்து வந்ததென்று ஊகிக்கலாம்.

பெரியாழ்வார் வழக்கம்போல் பூமாலையும் பாமாலையும் கட்டுவதில் பொழுது போக்கி வந்தார். இந்த வாழ்க்கையின் விளைவுதான், வளர்ச்சிதான், பெரியாழ்வார் திருமொழி என்ற திவ்யப்பிரபந்தம்.

முத்துக்குடை நிழலில், 'பல்கோடி நூறாயிரம்' ஆண்டு வாழவேணுமென்று தாம் வாழ்த்திய பகவானைத் தமது நந்தவன நிழலில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கத் தொடங்கினார்.

★

Koviloor Digital Library

6

பாண்டிய சக்கரவர்த்தி

(ஆழ்வாரின் அருமைச் சீடன்)

பெரியாழ்வாரை ஞானகுருவாகக் கொண்ட ஸ்ரீவல்லபதேவ பாண்டியன் என்ற கோநெடுமாறனை, கி.பி. எட்டாம் நூற்றாண்டினன் என்பர் சரித ஆராய்ச்சியாளர். இந்தப் பாண்டியன் காலம் உத்தேசம் கி.பி. 740 - 767 ஆகும் என்பர் ஸ்ரீ.மு. இராகவையங்கார்.

இவனை இந்த ஆழ்வார் தமது திருவாய்மொழிப் பதிகத்தில் சிறப்பித்துப் பேசுகிறார்:

கொன்னவில் கூர்வேல்
கோநெடு மாறன்தென்
கூடற்கோன்
தென்னன் கொண்டாடும்
தென்திரு மாலிருஞ்
சோலையே

(கொன்னவில் - கொலையே தொழிலாக உடைய. தென்கூடற்கோன் - தென்மதுரைக்குத் தலைவன். தென்னன் - பாண்டியன்.)

வீரன் ஞானவீரன் ஆனான்

'மாறன் என்பது பாண்டியர்க்குரிய பொதுப் பெயரேயாயினும், '7,8 - ஆம் நூற்றாண்டிலிருந்த, அவ்வரசர் சிலர் இதனைத் தம் இயற்பெயராகச் சூட்டிக்கொண்டிருந்தனர் என்று சாஸனங்களால் தெரியவருகிறது. பெரியாழ்வார்

Koviloor Digital Library

பாண்டியனது பிரசித்தமான பெயரையே 'நெடுமாறன்' என்று குறிப்பிடுவதாக ஸ்ரீ.மு. இராகவையங்கார் கருதுவது பொருந்துவதே.

'கோமாறன்', 'கோவரகுணன்' என்று மன்னர்களை விசேஷித்துப் பேசுவதுபோல் பெரியாழ்வாரும் தமது சீடனைக் 'கோநெடுமாறன்' என்பர். இவன் ஞானவீரனாவதற்குமுன் சிறந்த போர்வீரனாகத் திகழ்ந்தான் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது,

கொன்னவில் கூர்வேல்
கோநெடு மாறன்

என்ற ஆழ்வார் வாக்கு.

கோநெடுமாறன் பெருவீரன் என்பதற்குச் சாஸன ஆராய்ச்சியும் சான்று தருகிறது. இந்த வீரமன்னன் கங்கராஜன் மகள் பூசுந்தரியை மணந்துகொண்டவனென்றும் சாஸனம் தெரிவிக்கிறது. போர் வெற்றிகளாலும் காதலாலும் அடைய முடியாத மன அமைதியையும் ஆறுதலையும் பெரியாழ்வாரின் உபதேசத்தால் இந்த மன்னன் அடைந்து, ஒருங்கே பக்திக் காதலனாகவும் ஞான வீரனாகவும் திகழ்ந்து, ஆழ்வாரின் பணிகளுக்கு உதவி புரிந்துவந்தானென்று குருபரம்பரைக் கதைகளிலிருந்து ஊகிக்கலாம்.

இவன் பாட்டனும் மகனும் (சைவமும் வைஷ்ணவமும்)

கோநெடுமாறனின் பாட்டன்தான் திருஞானசம்பந்தர் திருத்திப் பணிகொண்ட 'நின்றசீர் நெடுமாறன்' ஆவன். இவனைச் சிவனடியாருள் ஒருவனாகத் திருத்தொண்டத் தொகை குறிப்பிடுகிறது.

இந்தப் பாட்டனுக்கும் திருமாலடியாருள் ஒருவனாகத் திகழ்ந்த பேரனுக்கும் இடையே சுமார் முப்பது ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

Koviloor Digital Library

பெரியாழ்வாரால் திருத்திப் பணிகொள்ளப் பெற்ற கோநெடுமாறனைச் சாஸனங்கள் 'மாறவர்மன்' என்றும், 'இராஜசிம்மன்' என்றும் குறிப்பிடுகின்றன. திருஞான சம்பந்தர் காலத்தவனான நின்றசீர் நெடுமாறனைச் சாஸனம் 'அரிகேசரி மாறவர்மன்' என்று குறிப்பிடுகிறது.

கோநெடுமாறன் சைவசமயத்தில் இருந்தவன் என்பதற்கும் சாஸன ஆதாரம் உண்டு:

பாண்டிக் கொடுமுடி சென்றெய்திப் பசுபதியது
பதும பாதம் பணிந்தேத்திக்
கனகராசியும் கதிர்மணியும்
மனமகிழக் கொடுத்திட்டும்... ...

(பசுபதியது - சிவபெருமானின். பதும பாதம் - தாமரை மலர் போன்ற திருவடிகள். கனகராசி - தங்கக் குவியல். கதிர்மணி - ஒளிவிடும் இரத்தினங்கள்.)

என்ற சாஸனப் பகுதியைப் பாருங்கள். பாட்டனாகிய நின்ற சீர்நெடுமாறன் சமண மதத்தினின்று சைவனானதுபோல், பேரனாகிய கோநெடுமாறன் பெரியாழ்வாரின் சீடனாகி வைஷ்ணவனாகிவிட்டான் எனலாம்.

இப்பாண்டியனின் மகன் பராந்தகன் நெடுஞ்சடையன். இவன் கோநெடுமாறனுக்குப் பூசுந்தரிதேவி வயிற்றில் பிறந்தவன். இவனை மாறஞ்சடையன் என்றும் கூறுவர். இந்த அரசனைச் சாஸனம் 'பரம வைஷ்ணவன்' என்று குறிப்பிடுகிறது.

பராந்தகன் பரமவைஷ்ணவன் தானாகி
நின்றிலங்கு மணிநீள்முடி
நிலமன்னவன் நெடுஞ்சடையற்கு

என்பது, குறித்த சாஸனப் பகுதி.

இந்தப் பராந்தகன் நெடுஞ்சடையனின் ஆட்சித் தொடக்கத்திலே தலைமை அமைச்சனாக (மகாசாமந்தனாக)

Koviloor Digital Library

இருந்த மாறங்காரியும் ஒரு சிறந்த வைஷ்ணவனாக விளங்கினான். இம்மந்திரி கோநெடுமாறன் காலத்திலும் மந்திரி ஸ்தானத்தை வகித்து வந்தவன்தான்.

இவனே கோநெடுமாறனுக்குக் கங்கராஜனோடு சம்பந்தம் செய்து, பூசுந்தரியை மணஞ்செய்து வைத்தவன். வடவேந்தருடன் பெரும்போர் புரிந்து அந்த மணத்தை நிறைவேறச் செய்தவன் இவனே என்பது சாஸனச் செய்தி.

மாறங்காரி காலஞ் சென்றபின், இவன் தம்பி, பராந்தகன் நெடுஞ்சடையனுக்குத் தலைமையமைச்சனானான். இந்தச் சகோதரர் இருவரும் நெடுஞ்சடையனைப்போல் பரம வைஷ்ணவர்கள். இவர்கள் நரசிங்கப்பெருமாள் கோயில் ஒன்றை மதுரைக்குப் பக்கத்திலுள்ள யானைமலை அடிவாரத்தில் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

மாறங்காரி போன்ற பரமவைஷ்ணவன் ஒருவனை அமைச்சனாகப் பெற்றிருந்ததும், மாறவர்மன் என்ற கோநெடுமாறன் பெரியாழ்வாரின் சீடனாகி வைஷ்ண வனாவதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இம்மந்திரி பிறந்த ஊராகிய களக்குடி, பெரியாழ்வார் தோன்றிய ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, மாறங்காரியும் பெரியாழ்வாரை ஞானகுரு வாகக் கொண்டிருக்கலாம் என்று திரு.மு. இராகவையங்கார் ஊகஞ் செய்கிறார்.

பாண்டிய மன்னர்களில் பெரும்பாலார் பரம்பரைச் சைவர்களே. இவர்களில் கோநெடுமாறன் பெரியாழ்வாரின் சீடனாகி ஒரு நல்ல வைஷ்ணவனாகத் திகழ்ந்ததும், இவன் மகனான பராந்தகன் நெடுஞ்சடையன் பரம வைஷ்ணவனாக விளங்கியதும் வியப்பிற்குரிய நிகழ்ச்சிகளே. இத்தகைய நிகழ்ச்சிகளுக்குப் பெரியாழ்வாரே மூலகாரணமாவார் என்று கருதுவது பொருந்துவதே.

Koviloor Digital Library

பெரியாழ்வார் 85 வயது வாழ்ந்தார் என்று வரலாறுகள் தெரிவிக்கின்றன. இவரது சார்பால் நெடுமாறனின் மகனான நெடுஞ்சடையன் தந்தையைக் காட்டிலும் பரம வைஷ்ணவனாக விளங்கினானென்றும், தந்தை பெரியாழ்வாருக்குச் சீடனான காலத்தில் நெடுஞ்சடையன் இளைஞனாக இருந்தான் என்றும், மகாசாமந்தனாக இருந்த மாறங்காரியின் குடும்பத்தினரும் பெரியாழ்வாரின் சீடராயினர் என்றும் ஊகஞ் செய்யலாம்.

ஒரு சாஸனத்திலே நெடுஞ்சடையன், 'குரு சரிதம் கொண்டாடி' யவன் என்று குறிக்கப் பெறுகின்றான். 'பாண்டியன் கொண்டாட' என்ற தனியனின் பகுதியை நினைவில் வைத்துக் கொண்டால் நெடுஞ்சடையன் கொண்டாடிய ஞானகுருவும் பெரியாழ்வாரே என்பது உய்த்துணரப்படும்.

'உத்தேசம் 690 -இல் இவ்வாழ்வார் அவதரித்தவராயின், 775 - வரை இவர் வாழ்ந்த காலமாகக் கூறத்தகும்' என்பர். திரு.மு. இராகவையங்கார். அப்படியானால், கோநெடுமாறனின் தந்தை, கோநெடுமாறன், நெடுஞ்சடையன் ஆகிய மூவேந்தர்களின் ஆட்சிக் காலத்திலும் விளங்கியவர் இந்த ஆழ்வார் என்று கருதலாம்.

ஆழ்வார் சொல்லும் பாண்டியன் கதை

கோநெடுமாறனை, 'உலகுடை மன்னவன் தென்னவன்' என்று திருமங்கை மன்னனும் குறிப்பிடுகிறார்.

கூடல், வஞ்சி கோழியென்னும்
மாட மாமதில் புதுக்கியும்

(கூடல் - மதுரை. வஞ்சி - சேரர் தலைநகரம். கோழி - உறையூர். புதுக்கி - புதுப்பித்து.)

என்று சாஸனம் இவ்வரசனைக் குறிப்பிடுகிறது.

Koviloor Digital Library

எனவே, சேர சோழ ராஜ்யங்களிலும் தனது ஏகாதிபத்தியத்தைப் பரப்பியிருந்த இத்தென்னவனை, 'உலகுடை மன்னவன்' என்று திருமங்கை மன்னன் குறிப்பிடுவதும், சக்கரவர்த்தி என்று பொருள்படக் 'கோநெடுமாறன்' என்று பெரியாழ்வார் விசேஷித்துக் கூறுவதும் பொருத்தமே.

கோநெடுமாறன் பூசுந்தரியைப் பெற முயன்ற போது திரண்டுவந்து எதிர்த்த வட அரசர்கள் பலரையும் அமைச்சனான மாறங்காரி துரத்தியடித்தானல்லவா? அப்போது கங்கராஜன் மக்களும் பூசுந்தரியின் சகோதரர்களுமான அரசிளங்குமரர்கள் அந்த வட அரசர்களுடன் போரிட முனைந்து நின்றார்களென்று ஊகிக்க இடமுண்டு. அந்த மைத்துனர்களுக்கு உதவியாகிய வட அரசரைத் தோற்கடித்த கோநெடுமாறனின் செயலை ஆழ்வாரும் தமது பாசுரங்களில் குறிப்பிட்டிருக்கிறார் என்பது திரு.மு. இராகவையங்காரின் அபிப்பிராயம்.

'கோநெடுமாறன்' என்ற பெயர் வரும் பாசுரம் முழுவதையும் இப்போது பார்க்கலாம்:

மன்னர் மறுக
மைத்துனன் மார்க்(கு)ஒரு
தேரின்மேல்
முன்அங்குச் சென்று
மோழை எழுவித்
தவன்மலை,
கொன்னவில் கூர்வேல்
கோநெடு மாறன்
தென்கூடற்கோன்
தென்னன்கொண் டாடும்
தென்திரு மாலிருஞ்
சோலையே.

(மறுக - மனம் கலங்க. மோழை - குமிழி.)

Koviloor Digital Library

தன் மைத்துனற்காகத் தேரேறிச் சென்று பகையரசர்களைக் கலக்கிய திருமால் கோயில்கொண்ட அழகர் மலையைக் 'கோநெடுமாறன்' கொண்டாடினான் என்பது திரண்ட பொருள். இந்த நெடுமாறனும் தன் மைத்துணர்க் காகப் போராடிப் பகையரசர்களைக் கலக்கியவன் என்பதும், அதனால் இவன் இம்மலையைக் கொண்டாடுவதற்கு ஒரு விசேஷமான பொருத்தம் உண்டு என்பதும் குறிப்பு.

இந்நெடுமாறன் பல்லவ மன்னனைப் புறங்காட்டி ஓடச் செய்தவன் என்றும் வேள்விக்குடிச் சாஸனம் தெரிவிக்கிறது. இந்தப் பல்லவ மன்னன்தான் பல்லவ மல்லன் என்பவன். பல்லவ குலத்தைச் சேர்ந்த சித்திரமாயன் என்பவனைப் பட்டத்தில் நிறுத்துவதற்காகவே கோநெடுமாறன் என்ற மாறவர்மன் போர் செய்தான் என்பது சரித்திரச் செய்தி. சித்திரமாயன், நெடுமாறனுக்கு அம்மான் முறையிலிருந்தவன் என்பர் ஆராய்ச்சியாளரான தூப்ராயில் துரை.

சித்திரமாயன், பல்லவ மல்லனின் சேனாதிபதியால் போரில் கொல்லப்பட்ட போதிலும், கோநெடுமாறன் சித்திரமாயனுடைய மக்களுக்காகப் பல்லவமல்லனைப் பல இடங்களிலும் விடாமல் எதிர்த்துக்கொண்டிருந்தான் என்பது சாஸனச் செய்தி. சித்திரமாயனுடைய மக்கள் கோநெடு மாறனுக்கு மைத்துன முறையில் உள்ளவர்கள். என்வே, இந்தச் செய்தியையும் ஆழ்வார் குறிப்பாகத் தமது பாசுரத்தில் கூறியிருக்கக்கூடும் என்பது திரு.மு. இராகவையங்காரின் கருத்து.

இப்போர்களிலே பல்லவன் வெற்றி பெற்றதாகத் திருமங்கை மன்னனது பதிகம் ஒன்று தெரிவிக்கிறது. நெடுமாறனே பல இடங்களிலும் பல்லவனை வென்றதாக வேள்விக்குடிச் சாஸனம் தெரிவிக்கிறது. இருவரும் மாறி மாறி வெற்றி தோல்விகளைப் பெற்றிருக்கக்கூடும்.

Koviloor Digital Library

வேள்விக்குடிச் சாஸனத்தை ஆதரிக்கிறது பெரியாழ்வார் குறிப்பு. திருமால் தன்னுடைய பக்தனான நெடுமாறனுக்காகப் பகை வென்று அருள்புரிந்தான் என்ற பெரியாழ்வார் குறிப்பை,

குறுகாத மன்னரைக்
கூடு கலக்கிவெங்
கானிடைச்
சிறுகால் நெறியே
போக்குவிக் கும்செல்வன்
பொன்மலை

(குறுகாத மன்னரை - நெடுமாறனுக்குப் பகைவரான அரசர்களை. வெங்கானிடை - கொடிய கர்ட்டிலே. செல்வன் - திருமால்.)

என்ற பாசுரப்பகுதியிலும் காணலாம்.

கோநெடுமாறன் பெரியாழ்வாரின் சீடனான காலம் முதல், தன் இறுதிக்காலம் வரை இந்த ஆழ்வாரிடம் பரமபக்தி விசுவாசத்துடன் ஒழுகிவந்தானென்றும், தன் மகனான நெடுஞ்சடையனையும் இப்பெரியாரின் பேரருளுக்கு இலக்காக்கி வைத்தானென்றும் சொல்லலாம்.

★

Koviloor Digital Library

7

வாழ்க்கையும் வாழ்க்கைத் தத்துவமும்

பெரியாழ்வாரைப் பற்றிய செவிவழிச் செய்திகளையே குருபரம்பரைக் கதைகளில் காண்கிறோம். இக்கதையுலகில் உள்ளம் உலாவும்போது, பனிமூடிய காலைப் பொழுதிலோ மாலைப் பொழுதிலோ மங்கலான ஒளியில் நடந்துபோகிற உணர்ச்சிதான் கிடைக்கிறது. சில சமயங்களில் இக்கதைகளிடையே சஞ்சரிக்கும்போது,

மங்கியதோர் நிலவினிலே
கனவில்இது கண்டேன்! -(பாரதி)

என்ற உணர்ச்சியும் உண்டாகிறது.

இவர் பாசுரங்களாகிய நந்தவனத்தில் ஓடியாடித் திரியும் போதோ,

தனிமை கண்டதுண்டு; - அதிலே
ஸாரம் இருக்கு தம்மா!
பனிதொ லைக்கும்வெயில் - அதுதேம்
பாகு மதுரம் அன்றோ? -(பாரதி)

என்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம்.

வாழ்க்கையின் போக்கு

பனி மூடிய இத்தொண்டர் வாழ்விலே, நந்தவனக் கைங்கரியம் செய்வதும், பூக்கொய்து பகவானுக்கு அர்ப்பணம்

Koviloor Digital Library

செய்வதும், தோட்டத்தில் உழைப்பதும், இல்லறம் நடத்துவதும், இறைவன் அடிநிழலிலேயே இன்பமாக வாழ்நாளைக் கழிப்பதும் ஆகிய நிகழ்ச்சிகள் எவ்வளவு தெளிவாக, எவ்வளவு பிரகாசமாகக் காண்கின்றன!

தோட்டம் இல்லவள்,
ஆத்தொழு, ஓடை,
துடவையும், கிணறும்
இவையெல்லாம்
வாட்டம் இன்றிஉன்
பொன்னடிக் கீழே
வளைப்பகம் வகுத்துக்கொண்
டிருந்தேன்.

(இல்லவள் - மனைவி. ஆத்தொழு - பசுக்களின் தொழு; மாட்டுக் கொட்டில். துடவை - விளைநிலம். வளைப்பகம் - வளைத்திருக்கும் இடம்.)

என்ற வாக்கிலே இவர் வாழ்க்கையின் சாதாரணப் போக்கை ஒருவாறு கண்டுகொள்ளலாம்.

தம் ஊரிலுள்ள பெருமாள் கோயிலுக்குப் பலவகைப் பணிகளையும் புரிந்துகொண்டு இவர் அக்கோயிலில் எல்லா மரியாதைகளுக்கும் உரியராகிப் பரம ஞானியாகவும் பரமபாகவதராகவும் விளங்கினார் என்பதற்கு இவரது திருப்பல்லாண்டுப் பாசுரங்களிலேயே சான்று கிடைக்கிறது.

நெய்யிடை நல்லதோர் சோறும்
நியதமும் அத்தாணிச் சேவகமும்
கையடைக் காயும் கழுத்துக்குப்
பூணொடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும்
தந்(து)என்னை வெள்ளுயி ராக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடி
யானுக்குப் பல்லாண்டு கூறுவேன்.

Koviloor Digital Library

(நியதமும் அத்தாணிச் சேவகமும் - எப்போதும் பிரியாமல் கூடவேயிருந்து செய்கிற ஆஸ்தான சேவகமாகிய கைங்கரியமும். கை அடைக்காயும் - கையால் கொடுக்கும் தாம்பூலமும். பூணொடு - ஆபரணத்தோடு. மெய்இட - உடம்பில் பூசிக்கொள்ள. சாந்தமும் - சந்தனமும். வெள்உயிர் ஆக்க - சுத்தமான ஆத்மா ஆக்க. பைஉடை - படத்தை உடைய. நாகப் பகைக்கொடியான் - பாம்புக்குப் பகையான கருடனைக் கொடியாக உடையவன்.) என்ற, ஐசுவரியத்தை விரும்புகிற ஒருவன் பேசுவதுபோலப் பேசும் இப்பாசுரத்தைத்தான் பாருங்கள்.

நல்லறிவைத் தாரக - போஷக - போக்ய - வஸ்துக் களுடன் கொடுத்து, வாழ்வைப் பனிபோல் தூய வெள்ளு யிராக்க வல்லவன் எம்பெருமான். இப்பெருமான் நாகத்தைச் சயனமாகவும், நாகப்பகையான கருடனைக் கொடியாகவும் உடையவன் என்று கூறுவது நம் விசேஷ கவனத்திற்கு உரியது. முரண்பட்ட தத்துவங்களையும் சமரசப்படுத்துகிறான் தன் வசீகர சக்தியால் என்பது குறிப்பு.

பக்தியின் சக்தி ஒன்றையே நம்பி வாழ்ந்தவர் இப்பெரியார்:

வன்மை ஆவ(து)உன்
கோயில் வாழும்
வயிட்டண வன்எனும்
வன்மைகண் டாயே!

(வயிட்டணவன் - வைஷ்ணவன்.)

'எப்பொழுதும் இறைவனது சந்நிதியில் வாழ் கின்றோம்!' என்ற உணர்ச்சியுடன் வாழும் கோயில்வாழ்வு இவர் வாழ்வு.

உடுத்துக் களைந்தநின்
பீதக ஆடை

Koviloor Digital Library

உடுத்து, கலத்த(து)உண்டு
தொடுத்தது ழாய்மலர்
சூடிக் களைந்தன
சூடும்இத் தொண்டர்களோம்

(பீதக ஆடை - பீதாம்பரம். தொடுத்த துழாய் மலர் - மாலையாகத் தொடுத்த துளசி இலைகளும் பூக்களும்.)

என்பதும் இவரது கோயில் வாழ்க்கையின் ஒரு சித்திரம்.

குலமும் பெயர்களும்

இவர் பிறந்த குலம் 'வேயர் குலம்' எனப்படும். 'பிரமசரிய நிலையை நீங்கி இல்லற நிலை அடையும் அந்தணன் மூங்கிற்கோலை ஏற்றுக்கொள்வான்' என்ற தர்ம சூத்திரத்திற்கு இணங்க, மூங்கிற்கோலைத் தாங்கி வந்த பார்ப்பனரில் ஒரு பிரிவினர் 'மூங்கிற்குடியினர்' என்றும், 'வேயர் குலத்தினர்' என்றும் குறிக்கப் பெற்றனர். இந்த ஆழ்வார் 'வேயர் தங்கள் குலத்து உதித்த விட்டுசித்தன்' என்று தம்மைத் தாமே குறிப்பிடுவர்.

விஷ்ணுசித்தர் என்பது இவரது பிள்ளைப் பெயர். 'பட்டர் பிரான்' என்பது பட்டப்பெயர்.

பார்அணிந்த தொல்புகழான்
பட்டர்பிரான்

என்று ஒரு பதிகத்தின் இறுதியில் இவர் தம்மை அறிவித்துக் கொள்கிறார்.

வில்லிபுத்தூரராகிய இவர் 'வில்லிபுத்தூர்க்கோன்' என்றும் குறிக்கப்படுகிறார். வில்லிபுத்தூரைப் புத்தூர் என்றும் புதுவை என்றும் சொல்வதால், இவர் தம்மை,

பாரார் தொல்புகழான்
புதுவைமன்னன்

(பார்ஆர் - பூமி நிறைந்த.)

Koviloor Digital Library

என்றும் அறிவித்துக்கொள்கிறார். இப்படியெல்லாம் பதிகங்களின் இறுதியில் வருவது இந்த ஆழ்வாருக்குக் கிடைத்திருந்த பேரையும் புகழையும் நினைவூட்டுகிறது.

இவருக்குப் பக்த ஜனங்களால் அளிக்கப்பட்ட பெயரே பெரியாழ்வார் என்பது. இப்பட்டமே பாண்டிய சக்கரவர்த்தி அளித்த பட்டர்பிரான் என்ற பட்டத்தைக் காட்டிலும் பிரசித்தமாகிவிட்டது.

பொங்கும் பரிவால் பல்லாண்டு பாடியவர் என்ற பெருமையுடன், கண்ணனைத் தமிழகத்திலே, தம் தாய் மொழியிலே, வளர்த்துவிட்ட தாயுள்ளம் படைத்த பெரியார் என்ற குறிப்பையும் பெரியாழ்வார் என்ற பேரிலும் புகழிலும் புதைபொருளாகக் கண்டுகொள்கிறோம்.

அடிப்படைத் தத்துவம்

இத்தகைய பெரியாருக்கு வாழ்க்கைவேறு, வாழ்க்கைத் தத்துவம் வேறு என்பதில்லை. இறைவனுடன் பிரிவில்லாமல் வாழ்வதே தொண்டர்களின் உண்மை வாழ்வு, நித்திய வாழ்வு. எம பயமும் வேறு எவர் பயமும் இல்லாமல் வாழத் தக்க வாழ்வு என்ற தத்துவம் இவரது வாழ்க்கையில் ஊடுருவிக் கிடந்தது எனலாம்.

அம்மையப்பனாகிய இறைவனுடன் மக்களாகிய அடியார்களும் பிரிவில்லாமல் ஒரு குடும்பமாக என்றும் வாழவேண்டும் என்ற குறிப்பைத் திருப்பல்லாண்டின் முதற்செய்யுளே குறிப்பிடுகின்றது:

அடியோ மோடும் நின்னொடும் பிரி(வு)இன்றி
ஆயிரம் பல்லாண்டு;
வடிவாய் நின்வல மார்வினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு!

(மங்கை - (இங்கே) திருமங்கையாகிய மகாலட்சுமி.)

Koviloor Digital Library

'அடியார்கள் யார்?' என்பதை அடுத்துவரும் பாசுரத்தில் தெளிவுபடுத்துகிறார். பக்தி, கைங்கரியமாகக் கனிய வேண்டும். பக்தர், வாழ்க்கையைக் கைங்கரியத்திற்கு ஒரு வாய்ப்பாகவே கருதவேண்டும். இத்தகைய பக்தர்களே அடியவர்கள்.

இவர்கள் கைங்கரியத்தையே வாழ்க்கையின் லட்சிய மாகவும் புருஷார்த்தமாகவும் மதிப்பவர்களாதலால், 'சாப்பாடு புருஷார்த்தம்; வயிற்றுப்பெருமானை ஆராதிப்பதே வாழ்வின் லட்சியம்' என்று வாழ்க்கை நடத்துகிறவர்களை அடியவர்களாகவோ வைஷ்ணவர்களாவோ ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

மனித வர்க்கத்தை இப்பெரியார் இரண்டு சாதியாகப் பிரிக்கிறார். 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற பிற்கால ஔவையார், கொடுத்தவர்கள் பெரியவர்கள் என்றும் கொடாதவர்கள் இழிகுலத்தோர் என்றும் கூறியுள்ளார்.

ஆழ்வாரோ, வாழ்க்கை கைங்கரிய ரூபமானதென்று கருதி ஒழுகுகிறவர்களையே உயர்ந்தவர்கள் என்கிறார்.

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல்;
வந்து மண்ணும் மணமும் கொள்மின்;
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள்
குழுவினில் புகுதல் ஒட்டோம்!

(வாழ் ஆட்பட்டு - வாழ்வதற்கு உறுப்பான கைங்கரியத்தில் ஈடுபட்டு. கொள்மின் - கொள்ளுங்கள். கூழ் ஆட்பட்டு - கூழ் அல்லது சோற்றுக்கு அடிமைப்பட்டு.)

'மண்ணுக்கும் மணத்துக்கும் உரியேனாகக்கடவேன்' என்று அடிமைச் சீட்டு எழுதும் வழக்கத்தை நினைவூட்டுகிறது ஆழ்வார் வாக்கு. அத்தகைய அடிமைத்திறத்தை மனிதனுக்கு மனிதன் உரிமையாக்குவது இருவரையும் ஒருங்கே கெடுத்து விடும். ஆனால் அடிமைத் திறத்தை மெய்யன்பனாகிய

Koviloor Digital Library

ஆண்டவனுக்கே கைங்கரிய ரூபமாக உரிமையாக்க வேண்டுகிறார் பெரியாழ்வார்.

இதுவே பகவானுடன் பிரிவின்றி மனம் ஒன்றி வாழும் வாழ்வு என்பது குறிப்பு.

'பகவானுக்கும் உயர்ந்த லட்சியங்களுக்கும் உரிய ஆத்மாவைக் கூழுக்காக எழுதிக் கொடுக்கிறார்களே, ஐயோ! அவர்களை எங்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளமாட்டோம்!' என்று பெரியார் கூறுவதில் இவருடைய வாழ்க்கையின் ஒரு முக்கியமான அடிப்படைத் தத்துவம் நன்கு புலனாகிறது.

அடியார்கள் அனைவரும் ஒரு குலம்; இந்தத் தொண்டக்குலமே தொழுகுலம். பண்டைக் குலத்தைத் தவிர்ந்து, தொண்டக்குலத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமாம்.

தொண்டக்குலத்தில் உள்ளீர்! வந்(து)
அடிதொழு(து) ஆயிர நாமம்சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து, பல் லாண்டுபல்
ஆயிரத் தாண்(டு) என்மினே!

(பண்டைக்குலம் - பழைய ஜாதி. என்மின் - என்று வாழ்த்துங்கள்.)

தொண்டக்குலம் புகுவோர் எந்த வகுப்பிலிருந்தும் வரலாம்; எந்த நாட்டிலிருந்தும் வரலாம்; அவர்கள் எந்த நிறத்தினராகவும் இருக்கலாம். 'கூடிப் பணி செய்வோம்' என்ற மனந்தான் வேண்டும்.

கூடும் மனம்உடை யீர்கள்! வரம்(பு)ஒழி
வந்துஒல்லைக் கூடுமினோ!

(வரம்பு ஒழி - வரம்பு ஒழிய. ஒல்லை - விரைவாக. கூடுமின் - கூடுங்கள்.)

என்று இவர் கூறி முழக்குவதைக் கேளுங்கள்.

Koviloor Digital Library

'கூடும் மனமும் பாடும் மனமும்'

'கூடும் மனம் உள்ளவர்களே! எல்லையில்லாமல் வந்து கூடுங்கள்' என்று கூவுகிறவர், 'விரைந்து வாருங்கள்' என்று கூறுவதும் கவனிக்கத்தக்கது. 'தீ! தீ! தீ!' என்று கூவினாராம் ஒரு பக்தர். ஏழைமக்கள் குடிசையிலிருந்து ஓடிவந்தார்கள், 'எந்தக் குடிசையிலோ தீ!' என்று. பக்தரோ அவர்களை நோக்கி, 'இப்படி நீங்கள் ஓடிவரவேண்டும், உங்கள் பழைய வாழ்விலிருந்து பக்திமதத்திற்கு; தீப்பட்ட வீடுகளிலிருந்து தப்புகிறவர்களைப்போல விரைந்து வரவேண்டும்!' என்று சொன்னாராம்.

இது இப்பெரியாரின் நிலை. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர்ந்த சிறந்த பரந்த உத்தம மனநிலை. இந்த இதயம் இறைவனைத் தழுவிக்கொண்டு அருள்பெற ஆசைப்படுவதுபோல் எல்லாரையும் தழுவிக் கொண்டு அருள் செய்யவும் ஆசைப்படுகிறது:

நாடும் நகரமும் நன்(கு) 'அறியநமோ
நாராய ணாய' என்று
பாடும் மனமுடைப் பத்தருள் ளீர்வந்து
பல்லாண்டு கூறுமினே.

(மனம் உடைப் பத்தர் உள்ளீர் - மனம்உடைய பக்தர்களுக்குள் நீங்கள் சேர்ந்தவர்களாயிருந்து. கூறுமின் - கூறுங்கள்.)

'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாட்சரத்தை (திருவெட்டெழுத்தை) உச்சரிப்பதில் மட்டும் இவருக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. பிரீதிக்குப் போக்குவிட்டுப் பாடவும் ஆசைப்படுகிறது நெஞ்சு.

இத்தகைய நெஞ்சம் உள்ளவர்களெல்லாம் கூடிவந்து நாடும் நகரமும் எதிரொலி கொள்ள நாராயண நாமத்தை முழக்கிக்கொண்டு பல்லாண்டு பாடவேண்டுமாம். இப்படிப்

LIBRARY, KOVILOOR
26735
Koviloor Digital Library

பாடித் தாங்களும் திருந்திப் பிறரையும் திருத்தவேண்டியது பக்தர் கடன் என்கிறார்.

அஷ்டாட்சர மகா மந்திரத்தை அநுஸந்தித்துப் பகவானுடைய பல நாமங்களையும் சொல்லிப் பல்லாண்டு பாடுகிறவர்களை இறைவன் பரிசுத்தர்களாக்குகிறான் என்ற குறிப்பைப் பின்வரும் வாக்கில் காணலாம்:

நால்வகை யால் 'நமோ நாராய ணா'என்று
நாமம் பலபரவிப்
பல்வகை யாலும், பவித்திர னே!உன்னைப்
பல்லாண்டு கூறுவனே.

(பலபரவி - பல சொல்லிப் புகழ்ந்து. பல்வகையாலும் - எல்லா வகைகளாலும். பவித்திரனே - பரிசுத்தனான பகவானே; பரிசுத்தம் செய்கிற இறைவனே.)

பக்தர்கள் கூடிப் பல்லாண்டு பாடும் ஓசை திருமாலிருஞ் சோலையென்ற அழகர்மலை போன்ற தலங்களிலும் பரவியிருந்ததென்று தெரியவருகிறது.

எல்லா இடத்திலும் எங்கும்
பரந்துபல் லாண்டொலி
செல்லாநிற் கும்சீர்த் தென்திரு
மாலிருஞ் சோலையே.

(பரந்து - பரவி. செல்லா நிற்கும் - செல்லும். சீர் - சிறப்பு.)

என்று இவர் பாடுவதைக் கேளுங்கள்.

திருமாலிருஞ்சோலையும் திருவரங்கம் பெரிய கோயிலைப்போல் பாகவத தர்மத்தின் வளர்ப்புப் பண்ணைகளில் ஒன்றாக, நீண்ட காலமாகப் பேரும் புகழும் பெற்றிருந்தது எனக் கருதலாம். இத்திருப்பதிகளில், 'ஓம் நமோ நாராயணாய' என்ற கோஷமும் பல்லாண்டொலிகளும் பரவியிருந்தன என்றும், இவற்றை யுத்தகோஷங்களாகக்

Koviloor Digital Library

கொண்டு பகவானின் போர் வீரர்கள் அசுரநினைவுகளையும் ராட்சஸ விருப்பங்களையும் பேய்ச்செயல்களையும் தீய சக்திகளையும் வென்றொழித்தனர் என்றும் கருதலாம்.

இந்தத் தலங்களிலிருந்தும் ஞான வீரர்கள் படை யெடுத்துப்போய் நாடுநகரங்களைத் திருத்தினார்கள். இத்தகைய திருப்பதிகளில் செல்வநம்பியின் ஊராகிய திருக்கோட்டியூரும், பெரியாழ்வார் தோன்றிய ஸ்ரீவில்லி புத்தூரும் 8 -ஆம் நூற்றாண்டில் பாகவததர்மத்தைப் பிரசாரம் செய்வதில் பிரசித்தமாகப் பங்கெடுத்துக் கொண்டன எனலாம். இத்திருப்பதிகளின் ராஜதானி திருவரங்கந்தான்.

வில்லிபுத்தூர் தந்த பெருவாழ்வு

ஸ்ரீவில்லிபுத்தூரில் 'ஏழு தலைமுறையாகப் பழிப் பில்லாத பாகவதர்க'ளாக இவர் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தார்கள் என்று இவர் வாக்கிலிருந்து தெரியவருகிறது.

ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்.

(ஏழுஆள்காலும் - ஏழு தலைமுறையாக. பழிப்பு - குற்றம்.)

என்று இவர் கூறுவதைக் கேளுங்கள்.

திருப்பல்லாண்டுப் பதிகத்தின் இரண்டாவது பாட்டில் இப்படித் தம்மைக் குறிப்பிடுகிறவர், இதற்கு விரிவுரை போல் ஐந்தாம் பாசுரத்திலும்,

எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன்
ஏழ்படி கால்தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய் கின்றோம்!

(எந்தை - என் பிதா. மூத்தப்பன் - பாட்டன். ஏழ்படிகால் தொடங்கி - ஏழு தலைமுறையாக. வழி வழி - முறைதப்பாமல். ஆள் செய்கின்றோம் - கைங்கரியம் செய்கிறோம்.) என்று கூறியுள்ளார்.

Koviloor Digital Library

'என் தந்தையும், அவருடைய தந்தையும், அவருடைய தந்தையும், அவருடைய தந்தையும், அவருடைய பாட்டனு மாகிய ஏழு தலைமுறையாக நாங்கள் வாழையடி வாழை யாய்ப் பழிப்பில்லாத பணிபுரிகின்றோம்' என்ற வாக்கி லிருந்து இவரது பாகவத குலமுறையை நீள நினைந்து பார்க்கலாம். இத்தகைய குலமுறையுடன், வேதம் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தவர்களின் உறைவிடமாக விளங்கிய வில்லிபுத்தூரில் இவர் பெருவாழ்வு வாழ்ந்தார்.

இன்றும் ஸ்ரீவில்லிபுத்தூரின் ஊரமைப்பும் கோவிலின் அமைப்பும் அழகாயிருக்கின்றன. பெரியாழ்வார் காலத்தில் இவ்வூர் வசீகரமாகவும் ஞான ஒளி பொருந்தியதாகவும் இருந்ததென்று ஊகிக்கலாம்.

மணம் கமழ்கின்ற பூம்பொழில்களும், செங்கழுநீர்ப் பூக்களால் அழகு செய்யப் பெற்ற நீர் நிலைகளும், விண்ணளாவிய மதிலும் உள்ள ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர் என்று இவர் குறிப்பிடுகிறார்.

பூஞ்சோலைகளுக்கும் அழகான நீர்நிலைகளுக்கும் இடையே மதிலும் மாடமாளிகையுமாய்க் காட்சியளித்த 'புதுவை' என்ற ஸ்ரீவில்லிபுத்தூரில் அறிஞர்களும் பரமசாதுக்களுமான பாகவதர்கள் கூடி வாழ்ந்து வந்தார்கள்.

செற்ற மிலாதவர் வாழ்தரு
தென்புதுவை

(செற்றம் - பகைமை, பொறாமை முதலான அசுர உணர்ச்சிகள். வாழ்தரு - வாழும் இடமாகிய.)

என்பது பெரியாழ்வார் வாக்கு.

தங்கள் வாழ்க்கையைப் பிரசாரமாகச் செய்துகொண்ட நல்லறிஞர்களும் பக்தர்களும் வாழ்ந்த இத்தென்புதுவையில் 'புதுவையர் கோன்' என்றும், 'புதுவை மன்னன்' என்றும் போற்றத்தக்க நிலையில் அவர்களுக்கெல்லாம் முடிசூடா

Koviloor Digital Library

மன்னராகப் பெரியாழ்வார் வாழ்ந்துவந்தார். அழகும் செல்வமும் கல்வியும் பக்தியும் நிறைந்த ஊரிலே பகவானுக்கும் பாகவதர்களுக்கும் உலகத்தாருக்கும் பணிபுரிவதையே சிறந்த கல்வியாகவும் உயர்ந்த செல்வமாகவும், ஆத்மாவை அழகு செய்யும் ஆபரணமாகவும் மதித்து ஒழுகி வாழ்ந்தார் இப்பெரியார்.

'மெய்ந்நாவன்', 'மெய் அடியான்' என்றும் இவர் போற்றப் பெறுகின்றார். இவரது வாழ்க்கைத் தத்துவம் இவரது வாழ்க்கையைக் 'கலியுகத்திலேயே கிருதயுகம் கண்ட பெரு வாழ்க்கை' யாக்கிவிட்டது.

வெங்கலி நலியா
வில்லிபுத் தூர்க்கோன்

(வெங்கலி - கொடிய கலி. நலியா - உபத்திரவம் செய்யாத.)

என்றவாறு கலியை வென்றவர், மண்ணகத்திலே விண்ணக வாழ்வு வாழ்ந்து,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

என்ற குறளுக்கு ஒரு பேரிலக்கியமாக இவர் திகழ்ந்தார்.

★ ★ ★

வேதவேதாந்த வேதாங்கங்களையெல்லாம் நன்கு கற்றுணர்ந்த வேதாந்த தேசிகரே, பெரியாழ்வாரின் வாழ்க்கைத் தத்துவத்தை வெளியிடும் திருப்பல்லாண்டைப் பெரிதும் பாராட்டி,

நாவ ளரும்பெரு நான்மறை ஓதிய
கீதம் எல்லாம்
பாவ ளரும்தமிழ்ப் பல்லாண் டிசையுடன்
பாடுவதுமே!

Koviloor Digital Library

(நாவளரும் பெருநான்மறை - சுருதியாகிக் கேட்பவர்களின் நாவிலே வளரும் பெரிய நான்கு வேதங்கள். பா - பாட்டு.)

என்று பாடியிருக்கிறார்.

சிறப்பாக இந்தத் திருப்பல்லாண்டும், பொதுவாகப் பெரியாழ்வார் திருமொழியும் பொதுஜன ரம்யமான பக்திப் பிரபந்தங்களில் பிரசித்தமானவை. இவற்றிலே இவரது உண்மையான வாழ்க்கையைக் கண்டுகொள்ளலாம். இவற்றை இவரது 'மெய்ம்மைப் பெருவார்த்தை' என்று கூறலாம்.

இந்த மெய்ம்மைப் பெரு வார்த்தையிலேதான் இவரது வாழ்க்கைத் தத்துவம், எவ்வளவு நன்றாக, எவ்வளவு தெளிவாக, எவ்வளவு வசீகரமாக வெளிப்படுகிறது!

★

Koviloor Digital Library

8

பெரியாழ்வாரும் செல்வநம்பியும்

கோநெடுமாறவர்மன் என்ற பாண்டிய சக்கரவர்த்தியின் புரோகிதரும் பெரியாழ்வாரின் நண்பருமான செல்வநம்பியின் பிரஸ்தாபம் திருப்பல்லாண்டிலும் பெரியாழ்வார் திருமொழியிலும் வருகிறது. பாண்டியன் பெரியாழ்வாரின் சீடனானதற்கும், பெரியாழ்வார் கிழியறுத்துத் திருப்பல்லாண்டு பாடியதற்கும் செல்வநம்பி ஒரு முக்கிய காரணமாக உதவினார் என்று குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன.

இந்த ராஜபுரோகிதரை வடிவழகிய நம்பிதாசர்,

உற்றவனாய்த் தென்னவனுக்(கு)
உயிர்த்துணையாய், அறம்அன்றி
மற்றறியா நிலையானாய்,
மறைநாலும் கற்றவனாய்,
செற்றமிலா மனத்தினனாய்,
செல்வநம்பி எனும்நாமம்
பெற்றவனாய், எதுவரினும்
பேராத நிலையானாம்

(தென்னவனுக்கு - பாண்டியனுக்கு; அறம் அன்றி மற்று அறியா நிலையானாய் - தருமம் அன்றி அதற்கு மாறான தொன்றையும் அறியாத குழந்தையுள்ளத்தனாய். மறை - வேதம். செற்றம் இல்லா மனத்தினனாய் - பகைமை, வெறுப்பு முதலான உணர்ச்சிகளால் பாழடைந்து போகாத மனத்தை

Koviloor Digital Library

உடையவனாய். பேராத நிலையானாய் - நிலைகலங்களாத வனாய்.) என்று வருணித்துச் செல்லுகிறார்.

திருப்பல்லாண்டில் செல்வநம்பி

இந்தச் செல்வநம்பியைப் பெரியாழ்வார் தமது திருப்பல்லாண்டுப் பதிகத்தில் பத்தாவது பாசுரத்திலே பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அல்வழக்(கு) ஒன்றும் இல்லா
அணிகோட் டியர்கோன் அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! நானும்
உனக்குப் பழஅடியேன்.

(அல்வழக்கு - அநியாயமான விவகாரங்கள். அணி - அழகிய. கோட்டியர்கோன் - திருக்கோட்டியூரில் உள்ளவர் களுக்குத் தலைவன். அபிமானதுங்கன் - அபிமானத்தால் சிறந்தவன். செல்வன் - செல்வநம்பி. பழ அடியேன் - பழமையான அடியவனாக இருக்கிறேன்.)

நீதியின் நிலையமாகத் திகழ்ந்தவர் செல்வநம்பி என்கிறார். 'நீதில் நன்னெறி' என்று குலசேகராழ்வார் குறிப்பிடுகிற பரம ஸாத்விக தர்மத்தை நீதிதர்மமாக மேற்கொண்டு ஒழுகினார் செல்வநம்பி என்பது கருத்து.

இவர் திருக்கோட்டியூரைச் சேர்ந்தவர். திருக் கோட்டியூரில் உள்ள அன்பர்களுக்கும் அறிஞர்களுக்கும் தலைமைப் பதவி வகித்தவர் என்றே பெரியாழ்வார் குறிப்பிடுகிறார்.

ஏழு தலைமுறையாகத் தம்மைத் திருமாலின் அடியார் என்று அறிவிக்கும் பெரியாழ்வார், செல்வநம்பியைப் போலத் தம்மையும் திருமாலுக்குப் பழ அடியாராக அறிவித்துக் கொள்வது கவனிக்கத்தக்கது. இதனால் செல்வநம்பியும் பரம்பரை விஷ்ணு பக்தர் என்பது தெரியவருகிறது.

Koviloor Digital Library

செல்வநம்பியை 'அபிமானதுங்கன்' என்று குறிப்பிடுவதிலிருந்து, பெரியாழ்வாரும் செல்வநம்பியும் பாகவத அபிமானம் என்ற பாசபந்தத்தால் இணைக்கப்பெற்ற ஒரு கூட்டத்தைச் சார்ந்த ஆவிநேர் அன்பர்கள் என்று ஊகிப்பது பொருத்தமேயாகும்.

பெரியாழ்வார் திருமொழியில் செல்வநம்பி

திருக்கோட்டியூர்ப் பதிகத்திலும் செல்வநம்பியின் பிரதாபம் வருகிறது:

நளிர்ந்தசீலன் நயாச லன்அபி
மான துங்கனை நாள்தொறும்
தெளிந்த செல்வனைச் சேவகங் கொண்ட
செங்கண் மால்திருக் கோட்டியூர்

(நளிர்ந்த சீலன் - குளிர்ந்த சீலத்தை உடையவன். நயாசலன் - நய அசலன்; நீதிநெறியில் சலிப்பற்றவன். சேவகம் கொண்ட - அடிமைகொண்ட; ஆட்கொண்ட.)

திருப்பல்லாண்டுப் பதிகத்தில் சொன்னபடி 'அல்வழக்கு' (அநியாய வழக்கு) ஒன்றும் இல்லாத செல்வநம்பியை இங்கு 'நயாசலன்' என்று குறிப்பிட்டு, நீதிக்கு ஓர் இமயமாகக் காட்டுகிறார். 'அபிமானதுங்கன்' என்ற சொற்றொடர் அங்கும் இங்கும் வருவதிலிருந்து, இவ்விரண்டு பெரியார்களின் பெருநட்பும், இவர்களுடைய பொது நோக்கமும் உறுதிப்படுகின்றன.

செல்வநம்பியைத் 'தெளிந்த செல்வன்' என்றும் 'நளிர்ந்த சீலன்' என்றும் பெரியாழ்வாரே பாராட்டி, அந்தச் சீலத்தையும் ஞானசௌந்தரியத்தையும் பளிங்கில் வைத்துக் காட்டுவதுபோலக் காட்டுகிறாரென்றால், செல்வநம்பியின் குணாதிசயம் எவ்வளவு உயர்ந்ததாகவும் வசீகரமானதாகவும் இருக்கவேண்டும்!

Koviloor Digital Library

பக்திப் பெருஞ்செல்வரான செல்வநம்பி கைங்கரியப் பெருஞ்செல்வராகவும் திகழ்ந்தார் என்பதை,

தெளிந்த செல்வனைச் சேவகம் கொண்ட
செங்கண்மால்

என்ற வாக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

திருக்கோட்டியூர் நல்லறிஞர்கள் நிறைந்த ஊர். பொய் பேசுதல், பிறரைத் தூஷித்தல் முதலியவற்றை ஒருபோதும் சொல்லி அறியாத வாயால் வேதபாராயணம் செய்து, தூய வாழ்க்கை வாழ்ந்தவர்களின் இருப்பிடம். இவர்கள் தேவகாரியம் செய்வதையும் விருந்தோம்புவதையும் பெரியாழ்வார் பாடியிருக்கிறார், இவ்வூர்ப் பதிகத்தின் முதற் பாசுரத்திலே.

குற்றமின்றிக் குணம் பெருக்கிப் பொறாமை, பகையுணர்ச்சிகள் சிறிதும் இன்றி மெய்ம்மையாளர்களும் வண்மையாளர்களும் வாழ்ந்துவரும் திருக்கோட்டியூரை இதோபாருங்கள்:

நாஅ காரியம் சொல்இி லாதவர்
நாள்தொ றும்விருந் தோம்புவார்,
தேவ காரியம் செய்து வேதம்
பயின்று வாழ்திருக் கோட்டியூர்

(நாஅகாரியம் - நாவினால் சொல்லத் தகாதவை. சொல் இலாதவர் - ஒரு போதும் சொல்லி அறியாதவர்கள்.)

குற்றம் இன்றிக் குணம் பெருக்கிக்
குருக்க ளுக்(கு) அனுகூ லராய்ச்
செற்றம் ஒன்றும் இலாத வண்கையி
னார்கள் வாழ்திருக் கோட்டியூர்.

(செற்றம் - பகைமை முதலான கெட்ட உணர்ச்சிகள். வண்கையினார்கள் - வண்மையாளர்கள்.)

இத்தகைய குணாதிசயமுள்ளவர்கள் நிறைந்த திருக்கோட்டியூருக்கும், இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும்

Koviloor Digital Library

திருமாலுக்கும் ஞானபக்திச் செல்வரான செல்வநம்பியைச் சேவகங் கொண்ட சிறப்பு, ஒரு தனிப்பெருஞ் சிறப்பாகும் என்பதை உணர்த்துவதுபோல் அமைந்திருக்கிறது திருக் கோட்டியூர்ப் பதிகம்.

திருக்கோட்டியூரில் பெருமாளுடைய புகழை வாயாரப் பாடுவதுபோல் பெரியாழ்வார் பாகவதகுல திலகமாகிய செல்வ நம்பியின் திருக்குணங்களையும் வாயார நெஞ்சாரப் பாடுகிறாரென்றால், இந்த நம்பி பாகவத கல்யாணகுண மென்னும் குன்றேறி நின்ற பெரியார் என்பதில் சிறிதும் ஐயமில்லையல்லவா?

திருக்கோட்டியூரில் உள்ளம் குளிர்ந்து எழுந்தருளி யிருக்கும் திருமாலின் கல்யாணகுணங்களைப் பாடிப்பாடி இங்குள்ள பாகவதர்களும் கருந்தடமுகில் வண்ணனைப் போல் குளிர்ந்த சீலமும் தியாக சௌந்தரியமும் உள்ளவர் களாய் இருக்கிறார்கள்.

குளிர்ந்(து) உறைகின்ற கோவிந் தன்குணம்
பாடுவார் உள்ள

(உறைகின்ற - வசிக்கின்ற; எழுந்தருளியிருக்கின்ற.)

இந்தப் பிரதேசத்திலே குயில்களும் கோவிந்தன் குணம் பாடுகின்றனவாம்.

செல்வநம்பியின் ஊரிலே, குயில்கள் கூவுவதும் பெரியாழ்வார் காதில் கோவிந்தன் குணம் பாடுகிறது போலவே தோன்றுகிறது.

இங்குள்ள அடியார்களைப் பார்த்ததும்,

பாவகாரி களைப்ப டைத்தவன்
எங்ங னம்படைத் தான்கொலோ?

(பாவகாரி - பாவம் செய்கிறவன்.)

Koviloor Digital Library

என்று இவர் தம்மைத் தாமே கேட்டுக்கொள்கிறார். 'இவர்களைப் படைத்த கையால் அவர்களையும் படைத்தது எப்படியோ!' என்று அதிசயப்படுகிறார்.

செல்வநம்பியைப் போன்ற சீலர்கள், பக்தர்கள் குடியிருப்பதே தவம், பாக்கியம் என்கிறார்:

கருந் தடமுகில் வண்ண னைக்கடைக்
கொண்டு கைதொழும் பக்தர்கள்
இருந்த ஊரில் இருக்கும் மானிடர்
எத்த வங்கள்செய் தார்கொலோ?

(கருந்தடமுகில் வண்ணன் - கரிய பெரிய மேகம் போன்ற நிறத்தையுடைய அழகன்).

இத்தகைய செல்வநம்பியின் ஊருக்கு இவர் அடிக்கடி வந்திருக்கக்கூடும்.

★ ★ ★ ★

ஒரு சமயம் பெரியாழ்வார் தமது இருப்பிடமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து திருக்கோட்டியூருக்கு வந்திருந்தார்.

'கேச வா!புரு டோத்த மா!கிளர்
சோதி யாய்!குற ளா!'என்று
பேசு வார்அடி யார்கள் எம்தம்மை
விற்க வும்பெறு வார்களே!

(கிளர் சோதியாய் - மேன்மேலும் வளர்ந்து கொண்டேயிருக்கும் ஜோதியையுடையவனே. குறளா - குறள் அல்லது வாமனனாகத் தோன்றயவனே. பேசுவார் அடியார்கள் - பேசுவோரான அடியவர்கள்.)

என்று பாடிக்கொண்டே தமது பேரன்பரான செல்வநம்பியின் திருமாளிகைக்கு வந்து சேர்ந்தார், ஒரு ஸ்ரீஜயந்தி தினத்திலே.

Koviloor Digital Library

திருக்கோட்டியூரில் பெரியாழ்வார்

பெரியோர்களின் பிறந்தநாள் விழாவை, ஜயந்தி என்கிறோம். புத்த ஜயந்தி, காந்தி ஜயந்தி என்றெல்லாம் பேசுகிறோமல்லவா? கிறிஸ்து ஜயந்திதான் கிறிஸ்துமஸ் விழா. ஸ்ரீராம ஜயந்தியை ஸ்ரீராமநவமி என்கிறார்கள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணஜயந்தியை ஸ்ரீஜயந்தி என்றே சிறப்பித்துப் பேசுகிறோம்.

அந்த ஸ்ரீஜயந்தி தினத்தில் இந்த இரண்டு பக்தமணிகளும் கண்ணனைக் குறித்தே உரையாடிக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமா? பிறகு இவர்கள் இவ்வூர்க் கோயிலில் ஸௌம்ய நாராயணப் பெருமானைத் தரிசிக்கப் போனார்கள்.

திருக்கோட்டியூரின் சோலைகளும் வயல்களும் இன்று கண்ணன் பிறந்த ஆயப்பாடியின் இயற்கையழகுகளைப் பெரியாழ்வாருக்கு நினைவூட்டுகின்றன.

வண்ண மாடங்கள்
சூழ்திருக் கோட்டியூர்

(வண்ண மாடங்கள் - அழகான உப்பரிகையுள்ள வீடுகள்.) என்று இவர் வாய் பாடத் தொடங்கியபோதிலும், அந்த வண்ணமாடங்களும் ஆய்ப்பாடி வீடுகளையே ஞாபகப்படுத்துகின்றன.

கோயில், நந்தகோபர் மாளிகையை நினைவூட்டப் பெருமாளின் விக்கிரகம் கண்ணனை நினைவூட்டி, அந்த அவதார காலத்திற்கே கொண்டுபோய் விடுகிறது இவர் கவியுள்ளத்தை. ஆதி ஸ்ரீஜயந்தியாகிய அந்தக் கண்ணன் பிறப்பை அப்படியே பெரியாழ்வார் அநுபவிக்கத் தொடங்குகிறார்.

Koviloor Digital Library

இவர் கொண்டாடும் ஸ்ரீஜயந்தி

சிறையகத்திலிருந்து கோகுலத்திற்கு வந்துவிடுகிறது குழந்தை. நந்தகோபர் மாளிகையெங்கும் - ஏன், ஊர் எங்குமே - ஒரு மகிழ்ச்சிக் கடல்தான். இந்த மகிழ்ச்சியிலே எண்ணெயும் மஞ்சட்பொடியும் ஒருவர்மேல் ஒருவர் தூவிக்கொள்கிறார்கள்.

இவை ஒன்றாய்க் கலந்து முற்றமெங்கும் ஒரே சேறாகிவிட்டது கண்டு பெரியாழ்வார்,

எண்ணெய், சுண்ணம்
எதிர்எதிர் தூவிடக்
கண்ணன் முற்றம்
கலந்(து)அளறு ஆயிற்றே!

(சுண்ணம் - வாசனை கலந்த மஞ்சட்பொடி. அளறு - சேறு.)

என்று பாடுகிறார்.

ஆய்ப்பாடியின் குதூகலத்தைத்தான் என்னென்பது? குழந்தையைப் பார்க்க ஓடிவருகிறார்கள் ஆயர்களும் ஆய்ச்சிமார்களும். ஓடும்போதே சிலர் வழுக்கி விழுகிறார்கள். அவ்வளவு ஆத்திரம், அவ்வளவு மகிழ்ச்சி, அவ்வளவு சேறு!

ஓடுவார், விழுவார்

என்கிறார் பெரியாழ்வார்.

சிலர், 'இன்னது செய்கிறோம்' என்று தெரியாமலே ஆரவாரம் செய்கிறார்கள். அவ்வளவு உகப்பு; அவ்வளவு மகிழ்ச்சிவெறி.

உகந்(து) ஆலிப்பார்
(ஆலிப்பார் - ஆரவாரம் செய்வார்கள்.)

என்கிறார் பெரியாழ்வார்.

Koviloor Digital Library

'எங்கே நம் கண்ணன், நம் கண்மணி? எங்கே? எங்கே?' என்று நாடிக்கொண்டு வருகிறார்கள். 'எங்கே நமது ராசா? குட்டி மகாராசா!' என்று கூவிக்கொண்டே வருகிறார்கள்.

நாடுவார்; 'நம்பி
ரான்எங்குத் தான்?' என்பார்

(நம்பிரான் - நமது தலைவன். எங்குத்தான் - எங்கேதான்.) என்கிறார் பெரியாழ்வார்.

சில ஆயர்களுக்கும் ஆய்ச்சியர்களுக்கும் குதூகலம் வசனத்தில் அடங்காமல் பாட்டாகப் பொங்கிவருகிறது.

பாடு வார்களும்

என்கிறார் ஆழ்வார்.

வேறு சிலருக்குக் குதூகலம் வாய்ப்பாட்டிலும் அடங்கவில்லை. அவர்கள் நானாவித வாத்தியங்களைக் கொட்டி முழக்குகிறார்கள்.

பல்பறை கொட்ட நின்று

என்கிறார் ஆழ்வார்.

இன்னும் சிலர் கொட்டு முழக்கங்களாலும் பாடல்களாலும் ஆவேசம் கொண்டவர்கள்போல் ஆடத் தொடங்குகிறார்கள் என்கிறார் ஆழ்வார்:

இப்படியெல்லாம் ஆய்ப்பாடி படும்பாடு கண்டு பெரியாழ்வார்,

ஆடு வார்களும்
ஆயிற்(று)ஆய்ப் பாடியே!

என்று பாட்டை முடிக்கிறார். 'என்ன அழகான பாட்டு!' என்று அதிசயிக்கிறார் செல்வநம்பி.

இந்தப் பாட்டு முழுவதையும் கேளுங்கள்; இதன் முழு வடிவத்தையும் ஒரு சேரப் பாருங்கள்:

Koviloor Digital Library

ஓடுவார்; விழுவார், உகந்(து) ஆலிப்பார்;
நாடுவார்; 'நம்பிரான் எங்குத்தான்' என்பார்;
பாடு வார்களும், பல்பறை கொட்டநின்(று)
ஆடு வார்களும் ஆயிற்(று)ஆய்ப் பாடியே!

மேலும் மேலும் பொங்கி அலையெறிகின்றது குதூகலம். அறிவைச் சூறையாடுகிறது ஆனந்தம். இந்த வெள்ளத்திலே, இந்தச் சுழிகளில் சிக்கிக்கொண்டவர்கள் என்ன செய்கிறார்கள்?

நெய்யையும் பாலையும் தயிரையும் உறியோடு அறுத்துக் கொண்டு வருகிறார்கள்; வந்து முற்றத்திலே உருட்டிவிட்டுக் கூத்தாடுகிறார்கள் சிலர். சிலர் தயிர், பால் முதலியவற்றை வாரி வழங்குகிறார்கள், வருகிறவர் போகிறவர்க்கெல்லாம்.

தலைமுடி அவிழ்ந்து தொங்க, அதுவும் தெரியாமல் அசைந்தசைந்து ஆடி ஆடி வருகிறார்கள் சிலர்.

இந்த மகிழ்ச்சிப் பைத்தியத்தை, குதூகல உன்மத்தத்தைப் பாடுகிறார் பெரியாழ்வார்:

உறியை முற்றத்(து) உருட்டிநின்(று) ஆடுவார்.
நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்;
செறிமென் கூந்தல் அவிழத் திளைத்(து) எங்கும்
அறிவ ழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே!

(நறு நெய் - மணம் மிக்க நெய். செறிமென் கூந்தல் - அடர்ந்து மெத்தென்றிருக்கும் கூந்தல். திளைத்து - நெருங்கி; அசைந்து; மகிழ்ந்து பொருந்தி.)

ஆய்ப்பாடியின் தலைவரான நந்தகோபரின் மாளிகை வாசலில் ஒரே நெருக்கம். அவசர அவசரமாக உள்ளே குழந்தையைக் காணப் போய்க்கொண்டிருப்பவர்களையும் பார்க்கிறோம்.

Koviloor Digital Library

இந்த ஜனசமுத்திரம் இப்போது ஓசைப்படுத்தும் செய்திதான் என்ன?

'ஆண்ஒப் பார்இவன் நேர்இல்லை காண்,திரு
ஓணத் தான்உல(கு) ஆளும்!'என் பார்களே,

குழந்தையின் புருஷ லட்சணத்தை வேறு எங்கே பார்த்தோம்? எங்கேதான் பார்க்க முடியும்? லட்சணங்கள், ரேகைகள், நட்சத்திரம் எல்லாம் 'உலகாளப் பிறந்த குழந்தை, இந்த ஆயர்குலவிளக்கு!' என்பதைத்தான் மெய்ப்பிக்கின்றன.

இப்படியெல்லாம் வார்த்தை காதில் விழுகிறது. கூட்டத்தோடு கூட்டமாய் நாமும் நெருக்குண்டு தள்ளுண்டு உள்ளே போய் அந்தக் குழந்தையையே பார்த்துவிடுகிறோம், தாயுடன் அந்தப்புரத்திலே.

மருந்துகளும் வாசனைப் பொருள்களும் சேர்த்துக் காய்ச்சின வெந்நீரைக் குளிரப்பண்ணிக் கொப்பரையில் வைத்திருக்கிறார்கள். அம்மா குளிப்பாட்டுகிறாள். குழந்தை யின் கையையும் காலையும் மெள்ள நீட்டி நிமிர்த்து, 'நீண்டு நிமிர்ந்தான் என் அப்பன்!' என்று கொண்டாடுகிறாள். பசுமஞ்சள் உரைத்துப் பூசிப் பையக் குளிப்பாட்டுகிறாள்.

'நாக்கை நீட்டு!' என்று கொஞ்சிக்கொண்டே நாக்கு வழிக்கப் போகிறாள்; வாயைத் திறக்கிறது குழந்தை. 'ஐயோ, பாவம்! வாய்க்கும் நாவுக்கும் வேற்றுமை தெரியாத பச்சைக் குழந்தை' என்று சொல்லிக்கொண்டு பார்க்கும்போதே, 'அதில் என்ன! என்ன! கனவு தானா?' - அகில லோகங்களையும் பார்த்துவிடுகிறாள் அந்தப் பிள்ளை வாய்க்குள்ளே!

இந்த ஆச்சரியத்தைப் பாடுகிறார் பெரியாழ்வார்:

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்;
ஐய! நாவழித் தாளுக்(கு) அங்காந்திட
வையம் ஏழும்கண் டாள்பிள்ளை வாயுளே!

Koviloor Digital Library

(நிமிர்த்து - நிமிரச்செய்து. கடாரநீர் - கொப்பரையில் வைத்திருக்கும் வெந்நீர். ஐய - என்ன அதிசயம். நா வழித்தாளுக்கு - நாக்கு வழித்தவளான யசோதைக்கு. அங்காந்திட - வாயைத் திறக்க. வையம் ஏழும் - ஏழு உலகங்களையும். வாயுளே - வாய்க்குள்ளே.)

மற்றுமுள்ள பெண்களும் இந்த அற்புதத்தைப் பார்த்து,

ஆயர் புத்திரன்
அல்லன், அருந்தெய்வம்!

என்று கொண்டாடுகிறார்கள் குழந்தையை.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே!' ஒவ்வொரு தாய்க்கும் தன் அருமைக் குழந்தை தெய்வக் குழந்தைதான்! குழந்தைக் கண்ணனைக் குறித்துச் சொல்லவா வேண்டும்! மேலும், இங்கே தாயன்புடன் பக்தரின் தெய்வக் காதலும் சேர்ந்து பேசுகிறதல்லவா?

பிள்ளைக்குப் பெயரிட்ட நாளிலே ஆய்ப்பாடியில் எல்லாத் திசைகளிலும் ஜயஸ்தம்பங்கள், வெற்றித் தோரணங்கள் முதலான அலங்காரங்களைப் பார்த்துப் பாடுகிறார் பெரியாழ்வார். ஓர் அற்புதமான வெற்றியை அடைந்துவிட்டதுபோல் ஆய்ப்பாடி ஆனந்தமாயிருக்கிறது.

தாயின் குற்றப்பத்திரிகை

குழந்தையைத் தொட்டிலில் விடுகிறார்கள். தூளித் தொட்டிலில்தான். குழந்தை தூங்கவில்லை. தாயும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருக்கிறாள். ஒக்கலில் வைத்துப் பார்க்கிறாள்; அணைத்துக்கொண்டு பார்க்கிறாள். 'என்ன பாடுபடுத்துகிறது இந்தப் பிள்ளை!' என்கிறாள்.

பெண்கள் எல்லாரும் பார்க்கிறார்கள்; பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகிறார்கள். ஆனால் தாய் மட்டும், 'நான் மெலிந்து போயிருக்கிறேனம்மா!' என்று தோழியை நோக்கிச் சொல்லுகிறாள். ஏன் இப்படி?

Koviloor Digital Library

'தொட்டிலில் கிடக்கவிட்டால், இந்தத் தூளித் தொட்டிலைக் காலால் உதைத்து உதைத்துக் கிழித்து விடுகிறான்!' என்கிறாள். 'ஐயோ இந்தச் சின்னஞ்சிறு கால் வலிக்குமே!' என்று ஒக்கலில் எடுத்து வைத்துக்கொள்கிறாள். கண்ணனோ அங்கேயிருந்து நழுவி விடுகிறான். தாய், 'இடுப்பை முறித்துவிட்டான்!' என்கிறாள்.

'இந்தக் குழந்தைச் சேட்டையால் எனக்கே இப்படி வலிக்கிறதென்றால் குழந்தைக்கு இந்தச் சேட்டையால் எப்படி வலிக்குமோ?' என்று ஆசைதீர அணைத்துக்கொள்கிறாள். அணைத்துத் தழுவிக்கொண்டதும், துஷ்டப்பிள்ளை வயிற்றிலே பாய்ந்து உதைக்கிறான்!

'அம்மா தோழி! சக்தியில்லையடி எனக்கு. எப்படி மெலிந்து போனேன் பாரடி!' என்று தாய் குற்றம் சாட்டுகிறாள் குழந்தைமீது. பெரியாழ்வார் பாடுகிறார்:

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்:
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன்நங்காய்!

(கிடக்கில் - கிடந்தானானால். மருங்கை இறுத்திடும் - இடுப்பை முறித்துவிடுவான். புல்கில் - தழுவிக்கொண்டால். உதரத்தே - வயிற்றிலே. மிடுக்கு இலாமையால் - வலிமை இல்லாததால். நங்காய் - நங்கையே.)

யசோதை வேஷத்தில் பெரியாழ்வார்

இப்படியெல்லாம் குற்றப்பத்திரிகை படிக்கும் இந்தத் தாய் யார்? தேவகியல்ல, யசோதைதானே? 'யசோதையாக நடிக்கும் பெரியாழ்வார்' என்றே பதில் சொல்லிவிடலாம்.

திருக்கோட்டியூரில் நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் கூத்தாடியும் கோலம் காட்டும் ஸௌம்யநாராயணப் பெருமாள், குழந்தைக் கண்ணனாய்க் காட்சி வழங்க, ஆழ்வார்

Koviloor Digital Library

கண்ணன் பிறப்புக் காட்சிகளைக் கண்டு காட்டுவதோடு தாமே தாயாகவும் காட்சி வழங்குகிறார்.

தோழி அநுதாபப்படுகிறாளா, சேய்மீது குற்றம் சாட்டும் தாயுடன்? அருகே இருப்பது தோழிதானா? தோழரான செல்வ நம்பியல்லவா?

தோழர் பதில் சொல்லுகிறார்,

நான்மெலிந் தேன்நங்காய்!

என்று சொல்லிக்கொண்டே தம்மை நோக்கித் திரும்பிய பெரியாழ்வாருக்கு. 'என்ன ஸ்ரீஜயந்தி! ஆழ்வாரே! அற்புதமாய்க் கொண்டாடிவிட்டீர், அந்த முதலாவது ஸ்ரீஜயந்தியையே கொண்டாடி விட்டீர்!'

பழுத்த பக்தியும் தெளிந்த ஞானமும் உள்ள செல்வ நம்பியையே தமது நண்பரின் கிருஷ்ண பக்தியும் தாயன்பும் பிரமிக்கச் செய்திருக்கவேண்டும்.

இந்த ஸ்ரீஜயந்திப் பாடல்கள் பெரியாழ்வாரின் திருமொழியிலே முதற்பதிகமாகத் திருப்பல்லாண்டுப் பாசுரங்களை அடுத்து அமைந்திருக்கின்றன. இப்பாடல்களை ஓதி ஓதி நாமும் ஸ்ரீஜயந்தியை உண்மையாக அநுபவிக்கலாம்; பெரியாழ்வார் கொண்டாடிய அந்த ஆதி ஸ்ரீஜயந்தியையே அநுபவித்துவிடலாம்.

★

Koviloor Digital Library

9

தேச யாத்திரையும் ஜீவயாத்திரையும்

மதுரை

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மதுரைக்குப் பெரியாழ்வார் யாத்திரை செய்து, 'கண்ணனே தெய்வம்' என்ற தம் கொள்கையை வெளியிட்டாரென்று குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன. அந்த யாத்திரையின் விளைவாக இவருடைய வாழ்க்கைத் தத்துவத்தைப் புலப்படுத்தும் திருப்பல்லாண்டுப் பாசுரங்கள் தோன்றின. எனவே, மதுரை யாத்திரை பெரியாழ்வாரின் யாத்திரையில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

திருக்கோட்டியூர்

செல்வநம்பியின் உறைவிடமான திருக்கோட்டியூருக்கு இவர் அடிக்கடி போயிருக்கக்கூடும். செல்வநம்பி ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் போய் இவரைப் பன்முறையும் சந்தித்திருப்பார். அப்படியே இவரும் திருக்கோட்டியூருக்குப் போய்த் தம் பெருமதிப்பிற்குரிய நண்பரான செல்வநம்பியைச் சந்தித்திருப்பார்.

இவ்வூரிலே கண்ணன் திருவவதாரப் பாடல்களைப் பாடியிருப்பதால், திருக்கோட்டியூருக்குப் போய்வந்ததையும் இவரது ஜீவயாத்திரையில் வேறொரு முக்கிய மைல்கல்லாகச் சுட்டிக் காட்டலாம்.

திருமாலிருஞ்சோலை

தமது ராஜ சிஷ்யனாகிய கோநெடுமாறன் கொண்டாடிய மலையென்று திருமாலிருஞ்சோலையைக் குறிப்பிடு

Koviloor Digital Library

றொரல்லவா? இந்தத் திருமாலிருஞ் சோலையையும் இவரது ஜீவயாத்திரையில் ஒரு மைல்கல்லாக மதிக்கவேண்டும்.

திருமாலிருஞ்சோலையில் பல்லாண்டின் ஒலி எங்கும் பரவியிருந்ததாக இவர் கூறுவதும், இம்மலைக்கும் இவருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகிறது எனலாம். திருக்கோட்டியூரில் குயில்களும் கோவிந்தன் குணம் பாடுவதாகக் கூறியவர் திருமாலிருஞ்சோலையில் வண்டு களும் தமது ரீங்கார பாஷையில் நாமஸங்கீர்த்தனம் செய்வ தாய்ப் பாடியிருப்பதும் கவனிக்கத் தக்கது.

மனம் ஓங்க மலைகளை நோக்க வேண்டும் என்பர். மலைகள் மனக்கவலை போக்கும் என்றும், மனச்சுடரைத் தூண்டும் என்றும் சொல்வதுண்டு. இப்பெரியாரின் மனச்சுடரைத் திருமாலிருஞ்சோலை பெரிதும் தூண்டியிருக்க வேண்டும் என்பதற்கு இந்த அழகர் மலையை இவர் பாடியிருக்கும் பாடல்களிலேயே குறிப்பாகவும் வெளிப் படையாகவும் சான்றுகள் காணப்படுகின்றன.

'அழகன், அலங்காரன் மலை' என்றும் 'செல்வன் பொன்மலை' என்றும், 'அப்பன் மலை' என்றும், 'விமலன் மலை' என்றும், 'மணிவண்ணன் மலை' என்றும், 'அநந்தசயனன் ஆளும் மலை' என்றும் இவர் இந்த மலையைப் போற்றுகிறார். மேலும்,

குலமலை, கோலமலை
குளிர்மாமலை கொற்றமலை,
நிலமலை, நீண்டமலை
திருமாலிருஞ் சோலையதே.

(கோலமலை - அழகானமலை.)

என்று பலபடியாகப் பன்னிப் பாராட்டுவதிலிருந்தே இவருக்கு இம்மலையுடன் நெருங்கிய தொடர்பு உண்டென்று கருதலாம்.

'குலமலை' என்பதற்குப் பெரியவாச்சான் பிள்ளை 'தொண்டக் குலத்துக்குத் தலைநின்ற மலை' என்று வியாக்கி

Koviloor Digital Library

யானம் செய்திருக்கிறார். பெரியாழ்வாரைப் போன்ற தொண்டக்குலத்தினரைக் 'கடவுளின் போர்வீரர்கள்' என்றே கருதக்கூடும். இவர்கள் அழகர்மலையையும் ஒரு பாசறையாகக் கொண்டிருந்தார்கள் எனலாம். இவர்களுடைய வெற்றிதான் இம்மலையைக் 'கொற்றமலை' (வெற்றியுள்ள மலை) யாக்கியிருக்க வேண்டும்.

இம்மலைச் சோலையில் புன்னையும் செருந்தியும் வேங்கையும் கோங்கும் பந்தி பந்தியாகப் பொன்னிறமுள்ள பூக்களைப் பூத்துச் சொரியும் காட்சியை இவர்,

புன்னை செருந்தியோடு
புனவேங்கையும் கோங்கும்நின்று
பொன்அரி மாலைகள் சூழ்பொழில்
மாலிருஞ் சோலையதே.

(செருந்தி - சுரபு ர்னை போன்ற ஒரு மரவகை. புனம் - மலைச்சார்பான கொல்லை. புன வேங்கை - இக்கொல்லையில் உள்ள வேங்கை மரம். பொன் அரிமாலை - பொன்னால் செய்த ஒருவகையான கழுத்தணி.)

என்று பாடுகிறார்.

இது கடல் வண்ணனாகிய கண்ணனுக்கு இசைந்த மலையென்று கூறி அந்த அழகனுடைய மலைக்கு இயற்கையன்னை பொன் அரிமாலை அணிந்திருப்பதாக வருணிக்கிறார்.

இம்மலையிலே கண்ணன் இவருக்கு, 'ஆயிரம் தோள் பரப்பி, முடி ஆயிரம் மின் இலக' விசுவரூபக் காட்சியும் காட்டியருளினானாம். இத்தகைய திருமாலிருஞ் சோலைக்கு இவரது ஜீவயாத்திரையில் அதிமுக்கியமான ஒரு ஸ்தானம் உண்டு என்பது திண்ணம்.

ஸ்ரீரங்க யாத்திரை

திவ்யஸ்தலங்களுக்கெல்லாம் ராஜதானியான ஸ்ரீரங்கத்தை இப்பெரியார் பலதடவை நேரில் போய்ப் பார்த்து

Koviloor Digital Library

அங்குள்ள தொண்டர்களுடன் கலந்து பக்தி செய்திருக்க வேண்டும். இத்தொண்டர்களுக்கு உபலட்சணமான வண்டுகள், பக்தி ரஸத்தை அநுபவிப்பதில் அழகர்மலை வண்டுகளையும் வென்று விடுகின்றன:

எல்லியம் போ(து) இருஞ்சிறை வண்(டு)
எம்பெரு மான்குணம் பாடி
மல்லிகை வெண்சங்(கு) ஊதும்
மதிள்அரங் கம்என் பதுவே.

(எல்லி - அந்தி மயங்கும் இரவு. இருஞ்சிறை வண்டு - பெரிய சிறகுள்ள வண்டு.)

அந்தி மயங்கும் வேளையில் வண்டுகள் ரீங்காரம் செய்த வண்ணம் மாலையில் மலரும் மல்லிகைப்பூக்களின் மேலே யிருந்து தேனைப் பருகத் தொடங்குகின்றன. வண்டுகள் மிடுக்குடன் மேலே பறப்பதையும், பூக்களின் மேலே வருவதையும் கவனித்தவர், எம்பெருமான் குணம் பாடியபின் மௌனமாகத் தியானத்தில் இருந்து பேரின்பம் துய்க்கும் தொண்டர்களை நினைவூட்டிக் கொள்கிறார்.

பக்திரஸத்தை அநுபவித்தவர்கள், பிறரும் அந்த இன்பத்தைப் பருகவேண்டுமே என்று 'நாடும் நகரமும் நன்கறிய'த் தங்கள் அநுபவத்தை முழக்குவதுண்டு. இதையும் உள்ளத்தில் கொண்டுதான், 'எம்பெருமான் குணம் பாடி'ய வண்டுகள் அந்த மகிழ்ச்சியைச் சங்குகளில் வைத்து ஊத வேண்டுமென்று மல்லிகைப் பூக்களையே வெண்சங்குகளாக உபயோகிக்கப் பார்க்கின்றன என்கிறார்.

மல்லிகை மலர்வதற்கு முன்பு தலை குவித்து மேல்பருத்து வெளுத்த நிறமுள்ள சங்குபோலத் தோன்றுவதை இவர் நன்கு கவனித்திருக்கிறார். இத்தகைய இயற்கை வருணைனைகளை இப்பெரியார் பாடல்களில் பல இடங்களிலும் நாம் காணமுடியும்.

'தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்' என்கிறார். தென்னாடும் வடநாடுமான நமது இந்தியாவுக்குத்

Koviloor Digital Library

'திசை விளக்காய்' இருக்கிறது ஸ்ரீரங்கம் என்றும் பாடியிருக்கிறார்.

> திருவரங்கம் என்பதுவே
> என்திருமால் சேர்விடமே.

(சேர்விடம் - சேரும் இடம்.)

என்று பாடுகிறவர், 'காவிரி வந்து அடிதொழும் சீர் அரங்கத்து'ப் பெருமானை 'என்னுடைய திருவரங்கன்' என்று அபிமானித்துப் பேசுவதும் திருவரங்கம் இவரது ஜீவயாத்திரையில் எத்தகைய முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது என்பதை வற்புறுத்துவதாகும்.

இந்தப் பாகவத ராஜதானி நகரில் பக்தர்களும் பாகவத சந்நியாசிகளும் முனிவர், சித்தர்களோடு கூடியிருந்து பக்தி பண்ணுவதுண்டு என்கிறார்:

> பக்தர்களும் பகவர்களும், பழமொழிவாய்
> முனிவர்களும், பரந்த நாடும்
> சித்தர்களும் தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்
> நிற்கின்ற திருவ ரங்கமே.

(பக்தர்கள் - (இங்கே) இல்லறத்திலுள்ள பக்தர்கள். பகவர் - முக்கோல் பகவர்; மூன்று தண்டங்களை அறிகுறியாக உடைய பாகவத சந்நியாசிகள். பழமொழி - (இங்கே) பழைய மொழியாகிய வேதம். பரந்த நாடும் - பரந்த நாட்டினரும்; விசாலமான நாட்டிலுள்ள மற்றும் பலரும்.)

இவர்களெல்லாம் பக்திமத உண்மைகளைப் பிரகாசப் படுத்திக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பு. இவர்களது கூட்டுறவும் இவரது ஜீவயாத்திரைக்குத் துணைபுரிந்திருக்கக் கூடும்.

வடநாட்டுப் பயணம்

வடநாட்டிலுள்ள திருப்பதிகளையும் இவர் குறிப்பிடுகிறார். கோவர்த்தனம் என்ற திருப்பதியையும்,

Koviloor Digital Library

கங்கைக் கரையிலுள்ள 'கண்டங்கடிநகர்' என்ற திருப்பதியையும் ஈடுபட்டுப் பாடுகிறார்.

கங்கையின் வருகையையும் போக்கையும் சங்கமத்தையும் ஓர் அருமையான சப்த சித்திரமாக அமைத்துக் காட்டுகிறார் தம் கவிதையில்:

தடவரை அதிரத் தரணிவிண்(டு) இடியத்
தலைப்பற்றிக் கரைமரம் சாடி,
கடலினைக் கலங்கத் கடுத்திழி கங்கை.

(தடவரை - பெரிய மலை. தரணி - பூமி. விண்டு - பிளவு பட்டு. தலைப்பற்றி - தலையளவு கிளம்பி. சாடி - மோதி முறித்து. கடுத்துஇழி - வேகமாய் வந்து குதிக்கிற.)

மலை அதிர, மண்பிளந்து இடியக் குதித்துவரும் கங்கை தன் வெள்ளப் பெருக்கால் கரையில் நிற்கும் மரங்களைச் சாடி அடித்து முறித்துக் கொண்டுபோய், கலங்காத கடலும் கலங்கும்படி படுவேகமாகப் பாய்ந்து சங்கமம் ஆகிறதாம். இந்த வருணனையின் தோரணை திருமங்கையாரின் கம்பீரவாக்கை நினைவூட்டுகிறது.

எனினும், அவரைப்போல் இவரும் கங்காதீரத்திலும் தணியாத ஆத்மதாகத்தைக் காவேரி தீரத்தில், தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கத்தில் தணித்துக்கொண்டார் எனலாம்.

வடஇந்தியாவிலே கங்கைக் கரையிலும் யாத்திரை செய்திருக்கிறார்; வடமதுரை, கோவர்த்தனம், அயோத்தி, பதரிகாசிரமம் முதலான தலங்களையும் தரிசித்து வந்திருக்கிறார். எனினும் திருவரங்கம், திருமாலிருஞ்சோலை முதலான தென்னாட்டுத் திருப்பதிகளிலேயே இவர் உகந்த கண்ணன் இவருக்கு விசேஷமாகக் கருணை புரிந்தான் என்று சொல்ல வேண்டும்.

திருவரங்கத்தின் தனிச் சிறப்பு

இந்தக் கண்ணனது அழகுகளைத்தான் விண்ணிலும் மண்ணிலும் கண்டார்; மலையிலும் கடலிலும் கண்டார்;

Koviloor Digital Library

காட்டிலும் நாட்டிலும் கண்டார். பூவின் மென்மையிலும் பொலிவிலும் கண்டார்; மயிலின் சாயலிலும் ஆடலிலும் கண்டார். இந்த அழகனை இவர் வடநாட்டுத் திருப்பதி களிலும் வழிபட்டார். அத்திருப்பதிகளுக்கும் மேலாகத் திருவரங்கமே,

குன்றாடு கொழுமுகில்போல்,
குவளைகள்போல், குரைகடல்போல்,
நின்றாடு கணமயில்போல்,
நிறமுடைய திருமால்ஊர்

(கொழுமுகில் மேகம் - நீர் நிறைந்த மேகம். குவளை - நீலோற்பலம். குரைகடல் - ஒலிக்கின்ற கடல். கணமயில் - மயில் கூட்டம்.)

எனத் துணிந்தார்.

சௌந்தரியம் பூத்த சக்திப் பெருங்கனலாக இவர் கண்டு காட்டும் அழகிய மணவாளனின் அருளழகைத்தான் என்னென்பது?

தன்அடியார் திறத்தகத்துத்
தாமரையாள் ஆகிலும் சித(கு)உ ரைக்குமேல்,
'என்அடியார் அதுசெய்யார்; செய்தாரேல்
நன்றுசெய்தார்?' என்பர் போலும்.

(தாமரையாள் - மகாலட்சுமி. சிதகு - குற்றம்.)
என்று இவர் திருவரங்கப் பதிகம் ஒன்றில் பாடுவதைக் கேளுங்கள்.

தந்தையாகிய பகவானுடைய கருணையுள்ளத்தில் சீற்றம் பிறப்பதே தண்ணீரில் கனல் தோன்றுவதுபோலத்தான். ஒரு வேளை அடியார்மீது தந்தையே கோபித்தாலும் தாயாகிய பிராட்டி - கருணையின் வடிவமானவள் - 'மன்னிப்பதே அருளுக்கு அழகு' என்று பரிந்து பேசுவாள்' என்பது வைஷ்ணவ சித்தாந்தம்.

இங்கே பெரியாழ்வார் சொல்லுகிறார்: 'அத்தகைய பிராட்டியே குற்றம் சாட்டியபோதிலும், "என் அடியார் அது

Koviloor Digital Library

செய்யார்!'' என்று மறுத்துரைக்கிறான் ஸ்ரீரங்கநாதன், அதுமட்டுமா? ''அடியார்களே குற்றம் செய்வார்களானால், அதுவும் குற்றமாகுமா? அதுவே நன்மை'' என்கிறான்.

அடியார் செய்வதே நன்மை என்று கூறித் திருமாமகளுடன் அருள் விஷயத்திலேயே போட்டி போடும் அழகனை இவர் காண்பது தென்னரங்கத்தில் அல்லவா? இந்த அரங்கனை, 'என்னுடைய திருவரங்கன்' என்று எத்தகைய விசேஷ அபிமானத்துடன் பேசுகிறார் பாருங்கள்!

நித்திய யாத்திரிகர்

திருவரங்கம், திருமாலிருஞ் சோலை, திருக்கோட்டியூர் முதலான தலங்களிலுள்ள பாகவதர்கள் - செல்வநம்பியைப் போன்ற ஞானபக்திச் செல்வர்கள் - ஜீவயாத்தரை செய்வோருக் கெல்லாம் 'திசை விளக்காய்'த் திகழ்ந்தார்கள். இவர்களுடைய சீலமும் ஞானச் செல்வமும் விரும்பியவர்களுக்கெல்லாம் பொது உடைமையாக உதவின.

இத்தகைய பெரியோர்களில் பாடும் பக்தமணிகளாய், பகவானின் விசேஷ அருளுக்கு உரியவர்களாய், இந்த உலகின் இருள் தீர்க்கவல்ல உபதேசம் செய்வதற்கு இறைவனது ஆணையும் அதிகார முத்திரையும் பெற்றவர்களாய்த் தோன்றித் திகழ்ந்த மெய்யடியார்களை வைஷ்ணவர்கள் 'ஆழ்வார்கள்' என்று போற்றுகிறார்கள். இவர்களைப் 'பன்னிரண்டு நித்திய யாத்திரிகர்கள்' எனலாம்.

இவர்களில் ஒருவரான பெரியாழ்வார் தமது ஜீவ யாத்திரைக்குத் தேசயாத்திரைகளையும் பயன்படுத்திக் கொண்டார். தென்னாட்டுத் திருப்பதிகள் சில இவரது யாத்திரையில் முக்கியமான மைல்கற்களாக உதவியிருக்க வேண்டும்.

இத்திருப்பதிகளிலே இவரது சொந்த ஊரான ஸ்ரீவில்லி புத்தூரும் செல்வநம்பியின் ஊரான திருக்கோட்டியூரும், வடநாட்டில் எக்காலத்திலோ நிகழ்ந்த ஸ்ரீகிருஷ்ண லீலை களைக் கண்முன் காட்டி இவரது ஆத்மதாபத்தைப் போக்கின என்று சொல்லலாம்.

Koviloor Digital Library

10

கதையுலகில் இவர் செய்த யாத்திரை

பெரியாழ்வாரைப் பெரிதும் வசீகரித்தவை கண்ணன் கதைகளே. ஒரு காலத்தில் ராமகதைகளிலும் இவருள்ளம் ஈடுபட்டிருந்தது என்பதற்கு 'அனுமன் சீதைக்குக் கூறிய அடையாளம்' என்ற பதிகப் பாசுரங்கள் சான்றாகும். ராமாயணத்திலே சுந்தரகாண்டம் ஒருசமயம் இவரை வசீகரித்திருக்க வேண்டும்.

பெரியாழ்வாரும் ராமாயணமும்

ராமாயண கதா பாத்திரங்களில் காவிய நாயகனுக்கும் காவிய நாயகிக்கும் அடுத்தபடியாக ராமபக்தர்களில் சிறந்தவனான அனுமன்மீது இவருக்கு ஈடுபாடு உண்டு. அனுமனது வாக்குப் பிரவாகமாகத்தானே இவர் பாடிய ராமகதைப் பதிகம் முழுவதும் அமைந்திருக்கிறது.

முதற் பாட்டிலே பரசுராமன் தவம் சிதைந்து கர்வபங்கம் உற்றதை அனுமன் அடையாளமாக எடுத்துச் சொல்லுகிறார். இந்த அடையாள வார்த்தையிலேயே வில்லைமுறித்துச் சீதையை ராமன் மணந்துகொண்டதும் பிரஸ்தாபிக்கப் படுகிறது.

கைகேசி வரம் வேண்ட, ராமலட்சுமணர் கான் புகுந்ததைக் குறிப்பிட்டபின் குகனோடு தோழமை கொண்டதையும் ஓர் அடையாளமாகக் குறிப்பிடுகிறான் அநுமன்:

Koviloor Digital Library

கூரணிந்த வேல்வலவன்
குகனோடும் கங்கைதன்னில்
சீரணிந்த தோழமைகொண்
டதுவும்ஓர் அடையாளம்

(கூர் அணிந்த - கூர்மை பொருந்திய. வேல்வலவன் - வேலாயுதத்தில் வல்லவன். சீர்அணிந்த - சிறப்புப் பொருந்திய.)

குகன் 'ஏழை, ஏதலன், கீழ்மகன்.' இவனோடு ராமன் தோழமை பூண்ட நிகழ்ச்சியைத் திருமங்கைமன்னன் பெரியாழ்வாரைக் காட்டிலும் விவரமாகக் கூறியுள்ளார்; சகோதர தர்மத்தை வெளியிடும் ஒரு பெரு நிகழ்ச்சியாகப் பேசியிருக்கிறார். கம்பன் இந்நிகழ்ச்சியை ஒரு 'குட்டி இதிகாச' மாக்கி ராமாயணத்தை ஒரு சகோதர தர்ம இதிகாச மாக வளர்த்துக் கொண்டு போகிறான்.

கம்பனது குக சித்திரத்திற்குத் திருமங்கையாழ்வார் வாக்கும் பெரியாழ்வார் வாக்கும் வித்தாக உதவியிருக்கின்றன. பெரியாழ்வாரின் 'சீர்அணிந்த தோழமை' என்ற சொற்றொடரை உள்ளத்தில் கொண்டு 'தோழமை' என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?' என்று தன் குகனைக் கம்பன் பெருமையுடன் சொல்லவைத்திருக்கக்கூடும்.

ராமனுடன் காட்டுக்குத் தொடர்ந்த தம்பி, பாதுகைக்கு நாட்டில் சிங்காதனம் அளித்த தம்பி ஆகிய இரண்டு தம்பிகளோடு குகனும் தோழமையால் ஒரு தம்பியானான் என்ற கம்பனது கவிச்சித்திரத்திற்கு ஒரு காரணமாக உதவிய பெரியாழ்வாரின் கொள்கை, பாகவதப் பெரு நெறியில் வழிகாட்டத்தக்க ஒரு பெருங்கொள்கையாகும். பண்டைக் குலத்தைத் தவிர்ந்து 'தொண்டக்குலம்' சேர்ந்து

Koviloor Digital Library

பேறு பெறுவதற்கு நமக்கும் ஓர் அடையாளந்தான், வழிகாட்டிதான் ராமன் குகனோடு கொண்ட 'சீர் அணிந்த தோழமை.'

கண்ணன் பசுக்களோடும் கோபிகைகளோடும் கொண்ட தோழமையைத் தமது பக்திவாழ்க்கைக்கு ஒரு பெருந் தூண்டுகோலாகக் கொண்ட பெரியாழ்வாரின் உள்ளம், 'குகனோடும் கங்கை தன்னில் சீர் அணிந்த தோழமை கொண்ட'திலும் ஈடுபட்டதென்று கருதலாம்.

பரதன் பணிந்து பாதுகை பெற்றதையும் ஓர் அருமை யான அடையாளமாகக் குறிப்பிடுகிறான் அநுமன்:

மானமரும் மென்நோக்கி!
    வைதேவீ! விண்ணப்பம்
கானமரும் கல்அதர்போய்க்
    காடுறைந்த காலத்துத்
தேனமரும் பொழிற்சாரல்
    சித்திரகூ டத்(து)இருப்பப்
பால்மொழியாய்! பரதநம்பி
    பணிந்ததும்ஓர் அடையாளம்.

(மான் அமரும் மென்நோக்கி - மான்போல் மருண்ட அழகிய பார்வையுடைய சீதையே. வைதேவீ - விதேகராஜன் (ஜனகன்) மகளான வைதேகியே. கான் அமரும் கல்அதர் - காட்டிலே உள்ள மலைப்பாதை. தேன் அமரும் பொழில் சாரல் - தேன் மலிந்த பூஞ்சோலைகளையுடைய மலைச்சாரல். பரத நம்பி - உத்தமனான பரதன்.)

அயோத்தியா காண்டத்தின் இந்தச் சிகர நிகழ்ச்சியில் இவருக்குள்ள ஈடுபாட்டுக்கு இப்பாட்டின் சுவையே சான்று தருகின்றது.

கானமரும் கல்அதர் போய்

என்ற வாக்கிலே சீதை கால்நோக நடந்து சென்ற அந்தக் காட்டுவழியும்,

Koviloor Digital Library

தேனமரும் பொழிற் சாரல்

என்ற வாக்கிலே சித்திரகூடத்தில் ராமனோடு அவள் வாழ்ந்த இனிய வாழ்க்கையுங்கூட அடையாளமாய்க் குறிக்கப் படுகின்றன.

'பால்மொழியாய்!' என்றும், 'மான் அமரும் மென்நோக்கி!' என்றும் அனுமன் சீதையை அழைப்பது உண்மையில் ராமனுக்குச் சீதைமீதுள்ள பேரன்பைப் புலப் படுத்துவதே. தூரத்தைச் சமீபமாக்கி, ராமன் கொஞ்சியழைக் கும் காதல் வார்த்தைகளைச் சீதை காதில் விழச் செய்கிறான் ராமதூதன் என்பது ஆழ்வார் திருவுள்ளம்.

பிறகு பாவியான காகாசுரனுக்கும் எச்சரிக்கையுடன் ராமன் அருள் செய்ததை ஓர் அடையாளமாகக் காட்டுகிறான் அநுமன்:

'வித்தகனே! இராமாஓ!
நின்அபயம் என்(று) அழைப்ப

ராமன் அருள்செய்ததாகக் குறிப்பிடுவது சரணாகதி தர்மத்தை நினைப்பூட்டுகிறது.

பொன்மான் வேட்டையினால்தானே ராமனுக்கும் சீதைக்கும் பிரிவு நேர்ந்தது. அந்த அதிமுக்கிய நிகழ்ச்சியையும் அநுமன் அடையாளமாக வெளியிடுகின்றான்.

இதைத்தான் பெரியாழ்வார் எவ்வளவு புதை பொருளுடன் பாடியிருக்கிறார்!

மின்னொத்த நுண்ணிடையாய்!
மெய்யடியேன் விண்ணப்பம்;
பொன்னொத்த மான்ஒன்று
புகுந்(து)இனிது விளையாட,
நின்அன்பின் வழிநின்று
சிலைபிடித்(து)எம் பிரான் ஏகப்
பின்னே அங்(கு) இலக்குமணன்
பிரிந்ததும்ஓர் அடையாளம்.

Koviloor Digital Library

(மின் ஒத்த நுண் இடையாய் - மின்னல் போன்ற நுட்பமான இடையையுடையவளே. சிலை - வில். எம்பிரான் - ராமன்.)

என்று கூறுவதைக் கேளுங்கள்.

'பொன் ஒத்த மான்' என்று கூறுவதில், மின்னுவ தெல்லாம் பொன் என்று நம்புவதுபோல் சீதை விளையாட்டுப் புத்தியால் அந்த மான்மீது நம்பிக்கை கொண்டாள் என்ற பொருளும் தொனிக்கிறது. 'நின் அன்பின் வழி நின்று' என்று கூறுவதில் சீதைமீது ராமன் கொண்டிருந்த காதலே அச்சமயம் அவனுடைய அறிவுக்கண்ணை மறைத்துவிட்டது என்பது போன்ற ஒரு பொருளும் தொனிக்கிறது.

பின்னேஅங்(கு) இலக்குமணன்
பிரிந்ததும்

என்று கூறுவதில், அவனைப் பிரியச் செய்தது சீதையின் பிடிவாதமே என்ற ஒரு குறிப்பும் காணப்படுகிறது.

இவ்வளவும் சேர்ந்து ஓர் அடையாளமாகும்போது சீதையின் சந்தேகம் தீர்ந்து போகுமல்லவா? எனவே, இப்படிச் சீதையிடம் அடையாளம் தெரிவிக்க வேண்டும் என்பது ராமன் கட்டளை என்றும் ஊகிக்கலாம்.

இதனால்தான் இந்த அடையாள வார்த்தைக்குப் பீடிகையாக,

மெய்யடியேன் விண்ணப்பம்

என்று சொல்லிக் கொள்கிறான் அநுமன். 'அயோத்தியர்கோன் அடையாளம் இவை மொழிந்தான்' என்று அடுத்துவரும் பாட்டில் அநுமன் கூறி முடிப்பதையும் கேளுங்கள்.

இந்த அடையாள வார்த்தைகளுக்கெல்லாம் சிகரமான வார்த்தை இரண்டாவது பாட்டிலேயே,

Koviloor Digital Library

அல்லியம்பூ மலர்க்கோதாய்!

என்ற விளியுடன் வெளிப்படுகிறது. 'இந்த அடையாளத்தைச் சொல்லலாமா?' என்ற சந்தேகங்கூட ஏற்படுகிறது.

எனினும், 'இதைச் சொல்லத்தான் வேண்டும். அப்போதுதான் இவள் நம்மீது நம்பிக்கை கொண்டு மேலே சொல்வதைக் கவனத்துடன் கேட்பாள்' என்று துணிந்தவனைப் போல், 'அடிபணிந்தேன் விண்ணப்பம்; சொல்லுகேன் கேட்டருளாய்' என்ற பீடிகையோடு, லட்சுமணனுக்கும் தெரியாத அந்த அந்தப்புர ரகசியத்தை வெளியிடுகிறான். அயோத்தியில் காதலர்கள் வாழ்ந்துகொண்டிருந்த அந்த ஆனந்த வாழ்க்கையின் துணுக்குகளில் ஒன்றை மெள்ள ஜாக்கிரதையாக வெளிப்படுத்துகிறான் அநுமன்.

வெண்ணெய் திருடிய கண்ணனைத் தாய்கயிறு கொண்டு கட்டி வைத்த லீலை, பரமாத்மா அன்பிற்குக் கட்டுப்படுகிறான் என்பதைப் பெரியாழ்வாருக்கு அடிக்கடி நினைவூட்டுவதுண்டு. அதுபோல், தன் உள்ளம் திருடின கள்வனைச் சீதையும் பூமாலையால் கட்டி வைத்தாள் என்ற ஒரு கற்பனை இப்பெரியாரின் உள்ளத்தில் உதயமாயிற்று என்று கருதலாம்.

இப்படியெல்லாம் இவர் சுந்தர காண்டத்தின் இருதயப் பகுதியைப் பாடியிருப்பதிலிருந்தும், வேறு சில ராமாயண நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதிலிருந்தும் ஒரு காலத்தில் இவருள்ளம் ராமாயணம் என்ற பக்திவெள்ளத்திலும் மூழ்கியெழுந்தது என்று ஊகிப்பது தவறாகாது. ராமகதையும் இவரது ஆத்ம ஸஞ்சாரத்தில் ஒரு மைல் - கல்தான்.

எனினும் ராமனது வீரசௌந்தரியத்தைக் காட்டிலும் கண்ணனுடைய மோகன லீலைகளே இவர் உள்ளத்தை அதிகமாய்க் கவர்ந்தன என்பதில் ஐயமில்லை. துளஸிதாஸருக்குக் கண்ணனும் ராமனாகவே காணப்பட்டதுபோல் இவருக்கு ராமனும் கண்ணன்தான்!

Koviloor Digital Library

தாழ்ந்து வந்த அருள்

இறைவன் தாழ்ந்து பிறந்த அவதார லீலைகளையும் இவர் குறிப்பிடுகிறார். மீனாகவும் ஆமையாகவும் பன்றியாக வும் பிறந்தது இறைவனது எளிமை என்ற ஸௌலப்யத்திற்குச் சான்று தருகிறதல்லவா?

நரசிங்கமாகி அசுர சக்கரவர்த்தியான இரணியனை வதைத்த பயங்கரமான துஷ்டநிக்கிரகச் செயலையும், மகாபலி என்ற அசுர சக்கரவர்த்தியைக் குறள் வடிவமாகி வஞ்சித்து வென்றதையும் இவர் குதூகலமாய்க் குறிப்பிடுகிறார்.

மதுகைடவரை மடிவித்த பண்டைப் பழங்கதையையும் குறிப்பிடுகிறார். முதலையைக் கொன்று யானை காத்த பிரசித்தமான கதையையும் சொல்லுகிறார். எத்தனையோ பக்தியுள்ளங்களை வசீகரித்து வந்த அந்தப் பழங்கதையைத் தம் கண்முன்னே நடந்த ஒரு நிகழ்ச்சி போலப் பேசுகிறார்.

முதலை யானையைப் பிடித்துக்கொண்டதே அந்தத் தாமரைக் குளத்தை, கரையிலே தாழைகளும், உள்ளே குளிர்ந்த ஆம்பல் மலர்களும் உள்ள மிகவும் பெரிய பொய்கை என்று தாம் நேரில் பார்த்ததுபோலக் குறிப்பிடுகிறார். 'நம்முடைய நந்தவனத்துப் பொய்கையைப்போல் இப்படியே தாழைகளும் ஆம்பல்களுமாயிருக்கும்; ஆனால் இதைக் காட்டிலும் அது மிகவும் பெரியதுதான்!' என்கிறார்.

நந்தவனத்திலிருந்தவாறே இத்தகைய கதையுலகில் சஞ்சரித்தவர்தாமே!

ஒப்பிலேன் ஆகிலும் நின்அடைந்தேன்
ஆனைக்கு நீஅருள் செய்தமையால்!

(நின் அடைந்தேன் - உன்னைச் சரணமாக அடைந்தேன்.)

என்று இவர் முறையிட்டுக் கொள்வதிலிருந்தே இவருக்கும் இத்தகைய கதைகளுக்கும் உள்ள தொடர்பு இனிது புலனாகிறது.

Koviloor Digital Library

ஆலிலைமேல் ஒரு பாலன்

பகவான் மகாப் பிரளய காலத்திலே உலகங்களை யெல்லாம் உண்டு வயிற்றில் அழியாதபடி வைத்துப் பாதுகாக்கிறான் என்ற கதையையும் இவர் பயன்படுத்திக் கொள்கிறார்:

உய்ய உலகுபடைத்(து)
உண்ட மணிவயிறா!
ஊழிதொ றூழிபல்
ஆலின் இலையதன்மேல்
பையஉ யோகுதுயில்
கொண்ட பரம்பரனே!

(உய்ய - ஆத்மாக்கள் உய்வதற்காக. ஊழிதொறு ஊழிபல - பல யுகங்கள் தோறும். பைய - மெள்ள. உயோகு துயில் கொண்ட - யோகநித்திரை கொண்ட. பரம்பரனே - உயர்ந்தவர்களைக் காட்டிலும் மிக உயர்ந்தவனே.)

ஆலிலைமேல் ஒரு பாலனாகித் தன் சிறு வயிற்றுக்குள் உலகங்களையெல்லாம் அடக்கி வைத்துக்கொண்டு அந்த உலகங்களை ரட்சிப்பதற்கான உபாயங்களைச் சிந்தனை செய்து கொண்டே உறங்குவான்போல் யோகநித்திரை செய்கிறான், பிரளயவெள்ளத்தில் மிதந்துகொண்டே - என்ற புராணக் கதைதான் எவ்வளவு தத்துவத்தைத் தனக்குள்ளே அடக்கிவைத்துக்கொண்டிருக்கிறது!

ஆதிமூலம் என்ற மெய்ப்பொருளை ஒரு குழந்தையாகக் கற்பிக்கும் மனோபாவம் 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே!' என்பது போன்ற ஓர் அநுபவ வித்திலே முளைத்திருக்கலாம். ஆனால் ஆலின் வித்துக்குள் ஆலமரம் அடங்கியிருப்பதுபோல் எவ்வளவு மகத்தான தத்துவப் போக்கு இந்தச் சிந்தனை - வித்தில் அடங்கிக் கிடக்கிறது!

எப்போதும் உலக ரட்சைதான் அறிதுயில் என்ற யோகநித்திரை புரியும் இந்த மூர்த்தியின் யோகசிந்தனைக்கு

Koviloor Digital Library

இலக்காகியிருக்கிறதாம். அடியார்கள் இறைவனைச் சிந்திக்கவேண்டும் என்பது ஒரு சாதாரண உண்மை; இறைவன் உலக க்ஷேமத்தையே சிந்தித்துக்கொண்டிருக்கிறான் என்பது அநுபூதிக் கலைஞர்களான பரமபக்தர்கள் கண்ட ஒரு பேருண்மை.

'அறிந்துகொண்டே துயில்கின்றான்; உறங்குவான் போல் யோகு செய்கின்றான்!' என்று கூறுவதில்தான் எத்தகைய உண்மை மறைந்து கிடக்கிறது! இத்தகைய இறைவனை 'வாழும் சோம்பர்' களாகி ஆராதிக்கவேண்டும் என்பது தொண்டரடிப்பொடியாழ்வார் கருத்து.

சோம்பியிருப்பதுபோல் சுறுசுறுப்பாயிருக்கிறார்களாம் தொண்டர்கள். சொந்த நன்மையில் சோம்பி உலக நன்மையில் வெகு விழிப்பாக நின்று உழைக்கிறார்களாம். இந்த உழைப்பிலே, தொண்டிலே முனைந்து நிற்காமல் மறைந்து கிடக்கிறார்களாம். இத்தகைய தொண்டருள் தொண்டரான பெரியாழ்வார், 'ஆலிலைமேல் ஒரு பாலன்' கதையில் ஈடுபடுவதில் வியப்பில்லை.

எல்லாம் கண்ணன்தான்!

ஆலிலைமேல் பாலன்தான் கோகுல பாலகனாக வந்தான் என்பதிலும் பெரியாழ்வாருக்குச் சந்தேகமில்லை. பெரியாழ்வாரின் யசோதை, குழந்தைக் கண்ணனைக் கூத்தாட்டி விளையாட்டுக் காண விரும்பி, 'அந்த ஆலந்தளிர்க்குழந்தையே!' என்று கூவியழைக்கிறாள்.

மற்ற ஆய்ச்சிமாரையும் கூவியழைத்து, 'அந்தக் காதுக்கு இந்தக் குண்டலமா?' என்று கேட்கிறாள்:

மண்ணும் மலையும் கடலும் உலகேழும்
உண்ணும் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு,
வண்ணம் எழில்கொள் மகரக் குழைஇவை
திண்ணம் இருந்தவா காணீரே;
சேயிழை யீர்!வந்து காணீரே.

Koviloor Digital Library

(வண்ணம் - நிறம். எழில் - அழகு. மகரக்குழை - மகர குண்டலங்கள். திண்ணம் - இறுக்கம். சேயிழையீர் - பெண்களே.)

பெரியாழ்வார் மேற்கொண்டது யசோதை வேஷமான தால், வேஷத்தை மீறி, தாயுள்ளத்தை மீறி வெளிப்படுகிறது பக்தியுள்ளம். 'அண்டம் விழுங்கிய வயிற்றைப் பார், கழுத்தைப் பார்!' என்று குழந்தைக் கண்ணனுடைய வயிற்றையும் கழுத்தையும் பார்த்தே பூரித்துப் போகிறார், இந்த யசோதையார்!

உலகம் படைத்து உண்ட மணிவயிறு ஆய்ப்பாடியில் வெண்ணெயும் தயிரும் களவாடி உண்ட வயிறுதான்! முதலையைக் கொன்று யானையைக் காத்த ஆதிமூலம், அசுர முதலைகளான மூர்க்க சக்திகளைக் கொன்று கோபாலர்களைக் காப்பாற்றிய ஆயப்பிள்ளைதான்!

மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், குள்ளன், பரசுராமன் ஆகிய அவதாரங்களில் பழகிய ஸர்வசக்தி, வீரராமன் என்ற விஜய கோதண்டபாணியாகி, முடிவில் ஜகன்மோகன கோபாலன் என்னும் பரிபூர்ண அவதாரம் செய்யும் பேறு பெற்றது என்பது பெரியாழ்வாருள்ளம். இதிகாச புராணக் கதைகளெல்லாம் இவருக்குக் கிருஷ்ணபக்தியைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

விஷ்ணுபக்தி என்றாலே இவருக்குக் கிருஷ்ணபக்தி தான். இதிகாச புராணரூபமான கதையுலகிலே சஞ்சரித்து வந்த இந்த யாத்திரிகர் 'கண்ணன் கதைத் தோப்பு' என்ற நந்த வனத்திலேயே ஆனந்தமாகத் தங்கிவிடுகிறார். இங்கிருந்தே தம் வாழ்க்கையின் குறிக்கோளை அடைகிறார்; பக்தியநுபவங்களையெல்லாம் அநுபவித்துப் பெரும்பேறு பெறுகின்றார்.

★

Koviloor Digital Library

11

கண்ணன் கதைத் தோப்பிலே

கண்ணன் கதைகள் சங்க காலத்திலேயே பிரசித்தி பெற்றிருந்தன. தொல்காப்பியர் கண்ணனைக் காடுறையும் மக்களின் தெய்வமாகக் குறிப்பிடுகிறார்:

மாயோன் மேய
காடுறை உலகமும்.

(மாயோன் - கண்ணன். மேய - மேவிய.)

கண்ணனும் தமிழரும்

தமிழர்கள் நிலத்தை நானிலமாகக் கூறுவதுண்டு. 'நானிலம்' என்றால் நான்கு பிரிவுகளையுடைய நிலம்..மலை, காடு, நாடு, கடற்கரை என்பன நிலத்தின் நால்வகைப் பிரிவுகள். மலை, காடு, கடற்கரை என்ற மூன்றும் இயற்கைப் பிரிவுகள். காட்டை அழித்து நாடாக்கிக் கொண்டனர்.

இந்த நான்கு நிலங்களில் மலையும் மலைசார்ந்த நிலமும் குறிஞ்சி என்று பெயர் பெற்றன. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்று பெயர் பெற்றன. நாடு மருதநிலம்; கடற்கரை நெய்தல் நிலம். கண்ணனை முல்லைநிலக் கடவுளாகத் தமிழர்கள் வழிபட்டனர்.

குறிஞ்சிநில மக்கள் முருகனை வழிபட்டனரென்றும், முல்லை நில மக்கள் மாயோனை (கண்ணனை) வழிபட்டன ரென்றும், கடற்கரை மக்கள் வருணனை வழிபட்டன ரென்றும், நாட்டிலுள்ளவர்கள் இந்திரனை வழிபட்டன ரென்றும் தொல்காப்பியர் கூறுவதிலிருந்து, அந்தப் பழங்

Koviloor Digital Library

காலத்திலேயே வடக்கும் தெற்கும் தமிழகத்தில் சந்தித்து இந்தியாவின் ஒருமையை நிலைபெறச் செய்துவிட்டன என்று ஊகிப்பது பொருத்தமே.

கண்ணனை முதலில் வைத்துத் தொல்காப்பியர் கூறுவதும் கூர்ந்து நோக்கத்தக்கது. இதனால் கண்ணன் வழிபாட்டுக்குத் தொன்மையுடன் முதன்மையான ஸ்தானமும் இருந்திருக்கக்கூடும் என்று ஊகிப்பவருண்டு.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே கிருஷ்ணபக்தி நம் தமிழகத்தில் வேரூன்றிவிட்டது என்பது உறுதி. கண்ணன் கதைகளில் நம் தமிழ்நாட்டிற்கே உரிய சில வரலாறுகளும் உண்டு. சில கதைகளில் நிகழ்ச்சி வேற்றுமைகளும் உண்டு. தமிழர்களிடையே வழங்கிவந்த கதைகளில் சில, சில வேறுபாடுகளுடன் வடமொழிப் புராணங்களில் புகுந்துகொண்டதும் உண்டு.

குருந்தம் ஒசித்தது

மகாபாரதம், விஷ்ணுபுராணம், பாகவதம் முதலான இதிகாச புராணங்களில் ஆதாரம் பெறாமல் தமிழ் நாட்டிலே வழங்கி வந்த கண்ணன் கதைகளில் 'குருந்தம் ஒசித்தது' என்று ஒரு கதை உண்டு. கண்ணனுடைய பாலலீலைகளில் ஒன்றாகிய இக்கதை சங்க காலத்திலே பிரசித்தமாக நமது நாட்டில் வழங்கி வந்ததென்று தெரியவருகிறது.

அகநானூற்றில் 'நீர்வளம் நிறைந்த யமுனையாற்றில் மணலையுடைய அகன்ற துறையில் நீராடிய ஆயர்மகளிர் தழையை உடுத்துக்கொள்வதற்காகக் குருந்தமரம் வளைந்திட மிதித்துத் தந்த மால் (கண்ணன்) போல' என்று பொருள்படும் செய்யுட் பகுதியில் 'குருந்து ஒசித்த' கதை குறிக்கப்படுவதைக் காண்கிறோம்.

இச்செய்யுளின் பழைய உரையிலிருந்து, கண்ணன் யமுனையாற்றில் நீராடிக்கொண்டிருந்த கோபியர்களின் துகில்களை எடுத்துக்கொண்டு கரையிலுள்ள குருந்த

Koviloor Digital Library

மரத்தின்மேல் விளையாட்டாக ஏறிக்கொண்டான் என்றும், அப்போது தமையனாகிய பலராமன் (நம்பி மூத்தபிரான்) அங்கேவர, அப்பெண்கள் மறைந்துகொள்வதற்கும் வேறு வழியில்லாததால், கண்ணன் தான் ஏறிநின்ற குருந்தமரக் கிளையைத் தாழ்த்திக் கொடுத்தான் என்றும், இக்கதையின் சில விவரங்களை அறிந்து கொள்கிறோம்.

இக்கதை ஜைன காவியமாகிய 'சீவக சிந்தாமணி'யிலும் பிரஸ்தாபிக்கப்படுகிறது:

நீல்நிற வண்ணன் அன்று
நெடுந்துகில் கவர்ந்து, தம்முன்
பால்நிற வண்ணன் நோக்கின்,
பழியுடைத்(து) என்று கண்டாய்,
வேல்நிறத் தானை வேந்தே!
விரிபுனல் தொழுநை ஆற்றுள்
கோல்நிற வளைவி னார்க்குக்
குருந்(து)அவன் ஒசித்த(து) என்றான்.

(நீல்நிற வண்ணன் - நீலநிறமுள்ள அழகனாகிய கண்ணன். நெடுந்துகில் கவர்ந்து - பல துகில்களையும் ஒருங்கே வாரியெடுத்துக்கொண்டு. தம்முன் - தமையன். பால் நிறவண்ணன் - பால் நிறமாக இருந்த பலராமன். நோக்கின் - பார்த்துவிட்டால். தானைவேந்தே - சேனையை உடைய அரசனே. விரிபுனல் தொழுநை - அதிக நீரை உடைய யமுனை. கோல்நிற வளையினார் - (இங்கே) கோபியர்கள். ஒசித்து - முறித்து; ஒதுங்கி ஒளித்துக்கொண்டு; வளைத்துக் கொடுத்து.)

பலராமன் தன் செய்கையைக் கண்டுகொண்டால் தனக்குப் பழியுண்டாகுமென்று நினைத்துக் கண்ணன் அக்குருந்த மரத்தை முறித்து யமுனையாற்றில் தள்ளித் தான் கவர்ந்த துகில்களைக் கோபியர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்தான் என்பது, மேலே குறித்த செய்யுளுக்கு நச்சினார் கினியர் கூறும் உரை. பிறகு கண்ணன், தானும் தண்ணீரில் விழுந்து நீந்தி வேறிடத்திற்குப் போய்விட்டானாம்.

Koviloor Digital Library

பலராமனைக் கண்டதும் கண்ணன் வெட்கப்பட்டுத் தன் செயலைத் தமையன் அறிந்துகொள்ளாமல் மறைக்க வேண்டு மென்று குருந்தமரத்தில் ஒதுங்கி ஒளித்துக் கொண்டான் என்று சில ஜைனர்கள் சிந்தாமணிச் செய்யுளுக்குப் பொருள் கூறியதாக டாக்டர் உ.வே. சாமிநாதையர் தெரிவிக்கிறார். இக்கதையின் பழைய உருவத்தை அகநானூற்றுப் பாட்டிலும் அந்தப் பழைய உரையிலும் சரியாகக் கண்டுகொள்ளலா மென்பது திரு.மு. இராகவையங்காரின் அபிப்பிராயம்.

அந்தப் பழைய உரைக்கு இணங்குமாறு சிந்தாமணிச் செய்யுளுக்குப் பொருள் கொண்டால், நீராடி நின்ற கோபியர்கள் மானம் காத்துக்கொள்ளும் பொருட்டு அக்குருந்த மரத்தை அவன் வளைத்துக் கொடுத்தான் என்று பொருள் கூறவேண்டும்.

பெரியாழ்வாரும் 'குருந்தம் ஒசித்த' கதையைக் குறிப்பிடுகிறார். 'குருந்தம் ஒன்று ஒசித்தானொடும்' என்பது இவர் வாக்கு. இதற்கு, 'குருந்தமரம் ஒன்றின் கிளைகளிலே மறைந்து மானம் காத்துக்கொள்ளும்படி அதைக் கோபியர் களுக்காக வளைத்துக் கொடுத்த கண்ணனோடும்' என்று பொருள் கூறுவது அகநானூற்றிலும் சிந்தாமணியிலும் நாம் காணும் இலக்கிய மரபினோடு இசையும் பொருளாகும். ஒசிதல் - வளைதல். எனவே, ஒசித்தல் - வளைத்தல்.

'ஒரு குருந்த மரத்தை முறித்த கண்ணனோடும்' என்பது வைஷ்ணவ வியாக்கியானம். அது உண்மையில் குருந்தமரம் அன்று; கம்ஸனால் ஏவப்பட்ட அசுரன் ஒருவன் கண்ணனைக் கொல்வதற்காக ஆவேசித்திருந்த மரந்தான் என்பது வைஷ்ணவ உரையாசிரியர் கருத்து. பிற்காலத்தில் தோன்றிய ஒரு புராணக்கதையை ஒட்டி எழுந்தது இந்த வியாக்கியானம். உண்மையில், பெரியாழ்வார் கூறும், 'குருந்தம் ஒன்று ஒசித்த கதை' வடநூல் வழக்கைத் தழுவியதன்று; தமிழ்நாட்டு வழக்கைத் தழுவியது என்றே தோன்றுகிறது.

ஜீவாத்மாக்களைப் பற்றறச் செய்வது, துகில்களுடன் கண்ணன் குருந்தம் ஏறிக் கொண்டான் என்பதற்குத் தத்துவப்

Koviloor Digital Library

பொருள். ஜீவாத்மாக்கள் விரும்பும்போது பற்றையும் பற்றிக்கொள்ளச் செய்து, அத்தகைய நிலைகளிலும் கைவிடாமல் காப்பாற்றுகிறான் அன்புருவாகிய அழகன் என்பது குருந்தத்தைத் தாழச்செய்த லீலையின் உட்பொருள்.

குடக்கூத்து

'பூச்சூட்ட வாராய்' என்று யசோதை கண்ணனைக் கூவி அழைக்கும்போது,

குடங்கள் எடுத்(து) ஏறவிட்டுக்
கூத்தாட வல்ல எம்கோவே!

(ஏறவிட்டு - உயர எறிந்து. எம் கோவே - எம்முடைய தலைவனே.)

என்று கூப்பிடுவதாய்ப் பெரியாழ்வார் பாடியிருக்கிறார்.

குதூகலமான செருக்கிற்குப் போக்குவீடாக ஆயர்கள் ஆடும் ஒருவகைக் கூத்து இது. இரண்டு குடங்கள் ஏந்திக் கண்ணன் வீதியில் ஆடிய குடக்கூத்தைத் திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார். ஆனால் அதுவன்று பெரியாழ்வாரின் இந்தக் குடக்கூத்து.

பல குடங்களை மேலே வீசியேறிந்து பிடித்து அம்மானை போல் ஆடும் குடக்கூத்தைத்தான் 'குடங்களை எடுத்து ஏறவிட்டுக் கூத்தா'டுவது என்று பெரியாழ்வார் கூறியுள்ளார். இக்கருத்துக்கு இணங்கக் குடக்கூத்தைக் காட்டும் சிலாசிற்பம் ஒன்றைத் திருவாங்கூர்ச் சாஸன இலாகா கண்டு பிடித்திருப்பதாக ஸ்ரீ.மு. இராகவையங்கார் தெரிவிக்கிறார்.

பெரியாழ்வார் கூறும் குடக்கூத்து ஒரு வகை; திருமங்கை மன்னன் கூறும் குடக்கூத்து வேறொரு வகை. இந்த இருவகைக் குடக்கூத்துக்களும் தமிழ்நாட்டு வழக்கங்களே.

சிலப்பதிகாரத்திலும் குடக்கூத்தின் பிரஸ்தாபம் வருகிறது. கண்ணன் பேரனாகிய அநிருத்தன் பாணாசுரன் மகளான உஷா தேவியைக் காதலித்ததற்காக அவனை அந்த

Koviloor Digital Library

அசுரன் சிறைப்படுத்தினான் என்பதும், அவ்வசுரனுடன் போர்புரிந்து கண்ணன் அநிருத்தனை விடுவித்துக் கொண்டான் என்பதும் புராணப்பிரசித்தமான கதை. கண்ணன் பாணாசுரனது நகரமாகிய சோணிதபுரத்திலே போய்க் குடக்கூத்து ஆடினான் என்ற தமிழர்களின் அதிக கதையைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம்.

சீமாலிகன் கதை

மாலிகன் என்பவன் செருக்குமிகுதியால் உயிரிழந்த ஒரு கதையையும் பெரியாழ்வார் குறிப்பிடுகிறார்:

சீமாலிகன் அவனோடு தோழமை
கொள்ளவும் வல்லாய்,
சாமா(று) அவனைநீ எண்ணிச்
சக்கரத் தால்தலை கொண்டாய்!

(சீமாலிகன் அவனோடு - ஸ்ரீமாலிகன் என்று செருக்குடன் தன்னைத்தானே அழைத்துக்கொண்ட மாலிகன் என்பவனோடு. வல்லாய் - வல்லவனாய். சாமாறு - செத்துப்போகும் வழி.)

அசுரர் செருக்கிலும் செயல்களிலும் துணிந்து இறங்கி விட்ட தோழனும் தண்டனைக்கு உரியவன்தான் என்று சங்கல்பம் செய்துகொண்டானாம் கண்ணன். மாமனாகிய கம்ஸனே அசுரச் செயல்களுக்காக வதஞ் செய்யப் பட்டானல்லவா?

ஆனால் கண்ணன் தன் தோழனைத் தானே முடித்து விட்டான் என்னும் பழி ஏற்படாமல் அந்தச் சீமாலிகன் தன் செருக்காலேயேதான் முடிந்தான் என்று உலகம் சொல்லும்படி அவனை முடித்துவிட்டான் கண்ணன் என்பது பெரியாழ்வார் கருத்து.

'அவன் ஸ்ரீகிருஷ்ணன்; நான் ஸ்ரீமாலிகன்' என்று தன்னைச் சொல்லிக்கொண்டானாம் மாலிகன், அசுர அகங்காரத்துடன். தனக்கு நிகர் யாருமில்லை என்ற அந்தச் செருக்குடன் பலரையும் ஹிம்ஸிக்கத் தொடங்கிவிட்டான்.

Koviloor Digital Library

இந்த நிலையிலும், மாமனைக் கொன்றான் என்ற பழியையும் தாங்கிக்கொண்ட கண்ணன் தோழனைக் கொன்றான் என்ற பழிக்கு அஞ்சினானாம்.

எனினும் மாலிகன் செய்துவரும் குற்றங்களுக்குச் சாவுதான் பரிகாரம் என்று சங்கற்பித்துவிட்டான். பகவானுடைய சங்கற்பம் வீணாகுமா?

செருக்கின் சிகரத்தில் ஏறிநின்ற மாலிகன் கண்ணனுடைய சக்கராயுதத்தையும் சுழற்றிப் பார்த்தான். சுழற்றி எறிந்து கை நீட்டிப் பிடிப்பதற்குள் சக்கரம் அப்படியே சுழன்றுவந்து அவன் கழுத்தில் விழுந்து தலையை அரிந்து விட்டதாம்.

இந்தச் சீமாலிகன் கதைக்குப் புராண ஆதரவு ஒன்றும் காணப்படவில்லை. நம் தமிழகத்திலே கிளைத்து வளர்ந்த ஒரு கற்பனை என்றே ஊகிக்கலாம்.

தமிழ் நாட்டிலும் ஒரு ராதை

கண்ணன் மனைவியருள் நப்பின்னையைத் தமிழ் நூல்கள் சிறப்பித்துப் பேசுகின்றன. சிலப்பதிகாரத்திலும் நப்பின்னை யின் பிரஸ்தாபம் வருகிறது. ஜைனகாவியமாகிய சிந்தாமணி யும் பௌத்த காவியமாகிய மணிமேகலையும் நப்பின்னை யைக் குறிப்பிடுகின்றன. தேவாரத்திலும், மணிவாசகப் பெருமானின் திருக்கோவையாரிலும் நப்பின்னையைச் சந்திக்கிறோம்.

ஆழ்வார்களில் நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் சில இடங்களில்தான், கண்ணன் மிகவும் உகந்த தேவியென்று பாகவதம் கூறும் ருக்மிணி தேவியைக் குறிப்பிடுகிறார்கள். மற்ற இடங்களில் எல்லாம் நப்பின்னையின் பிரஸ்தாபந்தான்.

'நப்பின்னை' என்ற பெயரில் 'ந' என்பது பின்னை என்ற பெயருடையவளைச் சிறப்பிக்கிறது; கீரனை நக்கீரன் என்பது போல. பின்னையைப் 'பிஞ்ஞை' என்றும், சொல்வதுண்டு.

Koviloor Digital Library

வடநாடு ராதையைக் கண்ணன் காதலியருள் சிறந்தவளாகக் கொண்டாடுகிறது. தமிழ்நாடோ பண்டைக் காலந்தொட்டு நப்பின்னைப் பிராட்டியைச் சிறப்பித்து வந்திருக்கிறது. இவளை 'உபகேசி' என்றும் கூறுவதுண்டு; நீளை அல்லது நீளாதேவி என்றும் சொல்வதுண்டு.

நப்பின்னை திருமணத்தைப் பழைய தமிழ் நூல்கள் பிரஸ்தாபிக்கும்போது, சீதாகல்யாணத்திற்கு வில்லைக் கன்யாசுல்கமாக வைத்திருந்ததுபோல் நப்பின்னைக்கும் ஒரு கன்யாசுல்கம் வைக்கப்பட்டிருந்ததென்று தெரிவிக்கின்றன. கூர்மையான கொம்புகளையுடைய முரட்டுக் காளை மாடுகளைப் பறையறைந்து வெளியில்விட்டு, அவற்றைத் தழுவிப் பிடிப்பவனுக்கே நப்பின்னையை மணஞ் செய்து கொடுப்பது என்று ஆயர்கள் தீர்மானித்திருந்தார்களாம்.

அந்த மணவிதியை அநுசரித்துக் கண்ணன் ஏழு எருதுகளை வலியடக்கி வென்று நப்பின்னையை மணந்து கொண்டான் என்பதைப் பெரியாழ்வார் குறிப்பிடுகிறார்.

ஆயர் மடமகள் பின்னைக் காகி
அடல்விடை ஏழினையும்
வீயப் பொருது வியந்துநின் றானை.

(ஆயர் மடமகள் - ஆயர்களின் இளம்பெண். அடல்விடை - வலிய ரிஷபங்கள். வீய - முடியும்படி. பொருது - போர் செய்து.)

கண்ணனுடைய மேனியின் மென்மை வாய்ந்த அழகையும் மாடுகளின் முரட்டுத்தனத்தையும் நோக்காமல், இவன் அவற்றோடு போர்செய்யவேண்டுமென்று விதித்து விட்டார்களே, - அந்த ஆயர்களுக்குத்தான் என்ன கடினசித்தம்! இப்படி உருகுகிறது பெரியாழ்வாரின் பக்தி நிறைந்த நெஞ்சு. அந்த ஆயர்களை இவர் 'துப்புடை ஆயர்கள்' (கடின நெஞ்சுள்ள ஆயர்கள்) என்கிறார்.

நப்பின்னைப் பிராட்டியைப் பெரியாழ்வார், 'தூய கருங்குழல் நல்தோகைமயில் அனைய நப்பினை' என்பர். தூய

Koviloor Digital Library

அழகு வாயந்த கருங்கூந்தலும், அழகிய தோகையோடு கூடிய மயில் போன்ற சாயலும் உள்ளவள் நப்பின்னை என்பது பொருள்.

இந்த நப்பின்னைக்குப் பக்கத்திலே ஏழு முரட்டுக் காளைமாடுகளுடன் போர் செய்த ஆயாசத்தால் வேர்த்து நிற்கிறானாம் மாப்பிள்ளை, மணமாலையும் கையுமாக. இத்தகைய மாப்பிள்ளைக் கோலத்திலும் கண்ணபிரானைக் கண்டவர்கள் உண்டு என்கிறார்:

மெய்ம்மையே கண்டார் உளர்!

(மெய்ம்மையே - உண்மையாகவே.)

தாமே கண்டு காட்டுவது போலப் பேசுகிறார் பெரியாழ்வார். நப்பின்னை திருமணத்திற்குப் பின் அவளுடன் கண்ணன் நிகழ்த்திய சரிதைகளைப் பழைய தமிழர்கள் நாடகமாக நடித்து வந்தார்கள் என்பது சிலப்பதிகாரத்திலிருந்து தெரியவரும் செய்தி. அத்தகைய நாடகங்களைப் பெரியாழ் வார் நேரில் பார்த்திருக்கக்கூடும். இவரது பக்தியுள்ளமே நப்பின்னை திருமணம் போன்ற கிருஷ்ணலீலைகளை நாடகமாக அடிக்கடி நடித்துப் பார்த்திருக்குமல்லவா?

நப்பின்னை கதை தமிழ்நாட்டுக் கதையாக இருந்தும், சில வேறுபாடுகளுடன் ஸ்ரீபாகவத புராணத்திலும் காணப்படுகிறது. அயோத்தி அரசன் ஒருவனுடைய மகளான சத்தியவதியாகிவிடுகிறாள் நப்பின்னை இந்தக் கதையிலே!

இந்தப் பேரழகியைக் காதலித்த அரசர்கள் பலரும் தன்னைத் துன்புறுத்தியதால் அந்த அயோத்தியர்கோன் யசோதையின் தம்பியிடமிருந்த கொடிய காளைமாடுகள் ஏழையும் தழுவிப் பிடிப்பவனுக்கே தன் அருமை மகளை மணஞ் செய்விப்பதாக அறிவித்துவிட்டான். அந்த எருது களுக்குப் பயந்து அயோத்தி அரசனை மற்ற அரசர்கள்

Koviloor Digital Library

நெருங்க வில்லை. அந்த நிலையில் கண்ணன் எருதுகளை வென்று சத்தியவதியை மணந்து கொண்டான் என்பது பாகவதக் கதை.

ஆனால் இந்தப் பேரழகியைப் பாகவதம், நப் பின்னையைத் தமிழ்நூல்கள் பாராட்டுவதுபோல் அவ்வளவு சிறப்பாகப் பாராட்டவில்லை. ருக்மிணி, சத்தியபாமை என்ற இரண்டு தேவியரையுமே கண்ணன் உகந்த தேவியர் என்று கூறுகிறது. நப்பின்னையை யசோதையின் சகோதரரான கும்பர் மகள் என்பர் பிள்ளை லோகஞ்சியர்.

குரவைக் கூத்து

கைகோத்து ஆடும் கூத்தைக் குரவைக் கூத்து என்று கூறுவதுண்டு. நப்பின்னையுடனும் பலராமனுடனும் கண்ணன் குரவைக்கூத்து ஆடியதாகப் பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன. இந்தச் செய்தி விஷ்ணுபுராணம், பாகவதம் முதலிய வடநூல்களில் காணப்படவில்லை.

கண்ணன் கோபியர்களுடன் 'ராஸக்ரீடை' என்ற குரவைக் கூத்து நடத்தியதாக வடமொழிப் புராணங்கள் கூறுகின்றன. ஒவ்வோர் ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனாகத் தோன்றி நின்று கைகோத்து ஆடிய குரவைக் கூத்தே ராஸக்ரீடை. 'ராஸம்' என்பது கூட்டமாய் விளை யாடும் ஆயர்களின் உல்லாஸப் பொழுது போக்கு (விசுவ நிகண்டு.)

ஜயதேவரும் ராஸக்ரீடையை வருணித்திருக்கிறார். இத்தகைய ஆய்ச்சியர் குரவையைப் பெரியாழ்வாரும் நம்மாழ்வாரும் குறிப்பிடுகிறார்கள். ஒவ்வோர் அன்பனுக்கும் அன்பனாகித் தோன்றி அகத்தும் புறத்தும் ஆதரவாக நின்று ஆட்டிவைக்கும் மாயக்கூத்தனே கண்ணன் என்பது உட்பொருள்.

★

Koviloor Digital Library

12

இவர் கண்ட கண்ணன்

கண்ணனைப் பற்றிய தமிழ்நாட்டுக் கதைகளைப் பெரியாழ்வார் உபயோகித்துக் கொள்வதுபோல், பாரதக் கதைகள் முதலியவற்றையும் உபயோகப்படுத்திக் கொள் கிறார். இக்கதைகளையும் பெரியாழ்வார் தமிழர்களுக்குச் சொந்தமாக்கிப் பாடியிருக்கிறார்.

திருமாலிருஞ்சோலையில் கண்டது

கண்ணன் பிறப்பு இவருக்கு ஏதோ ஒரு காலத்தில் வட நாட்டிலே நிகழ்ந்த நிகழ்ச்சி அன்று. சோகத்தின் வயிற்றிலே தூய உண்மை பிறப்பதுபோல்,

மக்கள் அறுவரைக் கல்லிடை மோத
இழந்த வள்தன் வயிற்றில்
சிக்கென வந்து பிறந்து நின்றாய்,
திருமா லிருஞ்சோலை எந்தாய்!

(எந்தாய் - எம்பெருமானே.)

என்று பாடுவதைக் கேளுங்கள்.

திருமாலிருஞ்சோலையிலேயே அப்படி அவன் பிறக்கத் தாம் கண்டு கொண்டதுபோலப் பாடுகிறார் பெரியாழ்வார். அவதரிப்பதற்குமுன் 'ஆதியஞ்சோதியாகி ஆயிரம்தோள் பரப்பி, முடி ஆயிரம் மின் இலக'த் தோன்றிய அந்தப் பாற்கடல் வைபவக் காட்சியும் இவருக்குத் திருமாலிருஞ் சோலையில் கிடைத்ததுதானே?

Koviloor Digital Library

துக்கங்கள் சுழன்றுகொண்டிருந்தனவாம் இவரைச் சுற்றி. அந்தத் துக்கங்களைச் சூழ்ந்துகிடந்தது காலம் என்ற வலை. பக்தியால், பகவானுடைய அருளால் காலவலையை அறுத்தெறிந்து இவர் கண்ணனது அவதார காலத்திற்கே போய்ச் சேர்ந்து விடுகிறார்.

காலச் சிறையிலிருந்து விடுதலை பெற்றவருக்குக் கண்ணன் உடனே காட்சியளித்துவிட வில்லையாம். அவன் ஓட, இவர் ஓட, அவன் புகுந்த இடங்களில் இவரும் புகுந்து தேடக் கடைசியாகக் 'கண்டேன், கண்டுகொண்டேன்!' என்கிறார். வடமதுரையில் கம்ஸனுடைய சிறைக்கூடத்திலா கண்டு கொண்டார். அந்தக் கள்ளப் பிள்ளையை, அந்த மாயப்பிரானை?

தாம் தேடிக் காண இயலாத நிலையில், அந்தக் குழந்தை நம்மை நோக்கித் திருமாலிருஞ்சோலைக்கே ஓடிவந்துவிடுகிற தாம், தன்னைச் சூழ்ந்துகிடந்த சிறைச்சாலையுடன் இவர் கண்டு கொள்ளும்படி:

துக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த
வலையை அறப்பறித்து,
புக்கினில் புக்(கு); உன்னைக் கண்டுகொண்டேன்;
இனிப்போக விடுவ துண்டே?

(துக்கச்சுழலை - துக்கங்கள் சுழல்வதற்கு இடம். அறப்பறித்து - அறும்படியாகப் பறித்தெறிந்து. புக்கினில் புக்கு - நீ புகுமிடம் எல்லாம் நானும் புகுந்து. விடுவதுண்டே - விடுவதுண்டோ.)

திருக்கோட்டியூரிலும் ஸ்ரீவில்லிபுத்தூரிலும்

காலவலை அறுத்து அவதாரக் காட்சி கண்டதும், துக்கச் சுழலை பேரின்பச்சுழலையாகிவிடுகிறது. பெரியாழ்வாரின் அதிசயமான பக்தியநுபவங்களில் இதுவும் ஒன்று. இந்தக் 'கண்ணன் பிறப்பு'க் காட்சிகளைத் தொடர்ந்து கண்டார் திருக்கோட்டியூரிலே.

Koviloor Digital Library

கண்ணன் பிறப்பைத் திருமாலிருஞ்சோலையிலும், ஆய்ப்பாடிக் காட்சிகளைத் திருக்கோட்டியூரிலும் கண்டவர், பாலலீலைகளையெல்லாம் ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே கண்டு களித்தார் எனலாம்.

பாற்கடலில் சேஷசயனம் இழந்த பேரின்பம் வட மதுரைக்கு வந்ததென்றும், வடமதுரை இழந்த செல்வம் ஆய்ப்பாடிக்குப் 'பெருத்த' லாபம் ஆகிவிட்டதென்றும் சொல்வதுண்டு. அந்தப் பெருஞ் செல்வம் பெரியாழ்வாரின் பெரும் பக்தியாலும் பாடல்களாலும் தமிழ் நாட்டுக்கே வந்துவிடுகிறது. பெருப் பெருத்த வைபவமாக.

'பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி'யாகிய பூதனையின் வதத்தை இவரும் ஆஷாடபூதிகளுக்கு ஓர் அபாய எச்சரிக்கை யாகக் காட்டுகிறார். சகடாசுர வதமும் இத்தகைய எச்சரிக்கை தான்.

ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தூளித்தொட்டில் தொங்கவிட்டு, அதற்குள் குழந்தையைப் படுக்கவிட்டுத் தாய் வெளியே போய் வேலை செய்வதையும், பசியுடன் பாலுக்கு அழும் குழந்தை தன் 'பிஞ்சு'க் கால்களை மேலே தூக்கி உதைப்பதையும் இவர் ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஆய்ப் பாடியிலே பார்த்திருக்கக்கூடும். அத்தகைய நிலையில் 'தாளை நிமிர்த்து'ச் சகடத்தைச் சாடிய சகடாசுரவதக் கதையை நினைத்துப் பாடுவது எளிதாயிற்று எனலாம்.

வேஷக்காரர்களின் தந்திரங்களுக்கும் மோசக்காரர்களின் நாசவேலைகளுக்கும் அகப்படாதவன் மெய்யன்பர்களுக்குக் கட்டுப்படுகிறான் என்ற உண்மையைக் காட்டுவது யசோதை கண்ணனை உரலில் கட்டிய கதை. 'வெள்ளிமலை இருந்தால் ஒத்த வெண்ணெயை, உளங்குளிர அமுதுசெய்து, உரலோடு ஆய்ச்சி ஒண்கயிற்றால், கட்டக் கட்டுண்டு, விம்மி அழுது' கொண்டிருந்த சீலத்தை இவர் எப்படி மறக்க முடியும்?

Koviloor Digital Library

'பொத்த உரலைக் கவிழ்த்து, அதன்மேல் ஏறித் தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும் மெத்தத் திருவயிறு ஆரவிழுங்கி'யதும், யசோதை 'அன்புற்று நோக்கி அடித்தும் பிடித்தும் அனைவர்க்கும் காட்ட' அதை இவரும் காண்கிறார் தம் ஊரிலேயே. ஏன், இவரே யசோதையாகி, ஊரார் நாட்டார் அனைவருக்கும் காட்டுகிறார் என்றாலும் பொருத்தந்தானே!

'பெருமா உரலில் பிணிப்புண்டிருந்து விண்ணெலாம் கேட்க அழுது' கொண்டிருந்த குழந்தையே மண்ணுக்கும் விண்ணுக்கும் தெய்வம்! தான் கட்டுப்பட்ட நிலையிலும் இந்தக் குழந்தைக் கண்ணன் இரட்டை மருத மரங்களை முறித்து இருவரைச் சாபத்திலிருந்து விடுவித்து விடுகிறா னல்லவா?

கண்ணன் மாடு கன்றுகளை மேய்ப்பது, சர்ப்பசயனத் திற்கு ஓர் அறிகுறிதான். அங்கையில் கோல் கொண்டு காலில் சதங்கை ஆர்ப்ப மாடு கன்றுகளை மறித்துத் திரிந்தவனை ஆயர் மங்கைமார் - ஜீவாத்மாக்களின் அறிகுறி - எவ்வளவு அன்புடன், எவ்வளவு அதிசயமாகப் பார்க்கிறார்கள்!

குழல்களும் கீதமுமாகிக் கோவிந்தன் வருகின்ற அந்தக் கூட்டத்தை 'மழைகொலோ வருகின்றது!' என்று சொல்லி இப்பெரியாரும் அநுபவிக்கிறார்; ஆய்ச்சியரோடு ஆய்ச்சியாக நின்று, ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே அதிசயமாக அநுபவிக்கிறார்!

புராண சஞ்சாரம்

கொக்காகவும் குதிரையாகவும் பயங்கர ரிஷபமாகவும் மாயக்கன்றாகவும் விளாமரமாகவும் கழுதையாகவும் வந்த அசுரசக்திகளையெல்லாம் ஒழித்ததும், 'விடம்படு நாகத்தை வால்பற்றி ஈர்த்து'க் காளியமர்த்தனம் செய்ததும், பெரியாழ் வாருக்கு எக்காலத்திலும் இறையருளுக்குச் சான்றாக வேறு வேறு வகையில் நிகழக்கூடிய லீலைகளே! அன்புப் பழங் கயிற்றிலே கட்டுண்டவன் என்றைக்கும் அன்பிற்குக் கட்டுப்

Koviloor Digital Library

பட்டு அசுர சக்திகளைத் தொலைப்பதில் நிகரற்றிருப்பான் என்பதில் இவருக்குச் சந்தேகமே இல்லை.

கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த அற்புதம் லோகோபகாரமாகிய பேரருள்தான் இவரது பக்திக் கண்களில். கல்லைக்கொண்டு கல்மழை தடுத்த அற்புதம் நம்பினார் நலம் பெறுமாறு என்றும் ஏதாவது ஒருவகையில் நடக்கக்கூடியது தான் என்பது இவர் நம்பிக்கை. இந்தக் கதையை இவர் மிகவும் ரஸித்துப் பாடியிருக்கிறார்.

குவலயாபீட வதம், மல்லர் வதம், கம்ஸ வதம் ஆகிய நிகழ்ச்சிகளுடன் நரகாசுர, பாணாசுர நிக்கிரகத்தையும் கண்ணனது துஷ்டநிக்கிரக பரிபாலனத்திற்குச் சான்றுகளாய்ப் பிரஸ்தாபிக்கிறார். நப்பின்னை திருமணத்தைப் பிரஸ்தாபிப்பது போல் ருக்மிணி கல்யாணத்தையும் பிரஸ்தாபிக்கிறார் பெரியாழ்வார்.

இதிகாச சஞ்சாரம்

இத்தகைய புராண சஞ்சாரங்களுடன் இவரது பக்தி யுள்ளம் பாரதப் பேரிதிகாசத்திலும் கண்ணனது எளிமைக்கும் பெருமைக்கும் சான்று தேடித் திரிகிறது. துரியோதனனிடம் ஐவர்க்காகத் தூதுசென்று காதம் பல திரிந்த அடிமலர்களில் இவருள்ளம் ஈடுபடுகிறது. இந்தத் தூதில் இறைவனுடைய எளிமை நன்கு வெளிப்படுகிறதல்லவா?

இறைவனுடைய பரத்வ நிலையைக் காட்டிலும் எளிமை அல்லவா பெரியாழ்வாரைப் பெரிதும் வசீகரிக்கிறது? ராமாயணம் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறதென்றால், மகாபாரதம் 'கழுத்திலே ஓலை கட்டி'த் தூதுபோன எளிமையை வெளியிடுகிறது என்பர்.

கண்ணனுடைய தூது வைபவமும், உறிவெண்ணெய் உண்டு கட்டுண்ட எளிமைபோல், தமிழருள்ளங்களோடு

Koviloor Digital Library

நீண்ட காலமாகக் கட்டுண்டு கிடந்திருக்கிறது என்பதற்குச் சிலப்பதிகாரத்திலே,

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை, நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்(து)ஆ ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே;
நாராய ணாஎன்னா நாவென்ன நாவே!

(மடம் தாழும் நெஞ்சத்து - அறியாமை தங்கிய நெஞ்சத்தையுடைய. கஞ்சன் - கம்ஸன். நூற்றுவர் - துரியோதனாதியர். படர்ந்து ஆரணம் முழங்க - தன் பின்னே தொடர்ந்து வந்து வேதங்கள் முழங்க. ஏத்தாத - போற்றாத. நா - நாக்கு. என்னா - என்று சொல்லப்பெறாத.)

என்று வரும் 'ஆய்ச்சியர் குரவை'ப் பாட்டே சான்றாகும்.

பார்த்தசாரதியாக நின்று குதிரையோட்டிய ''வைபவத்திலும் பெரியாழ்வார் ஈடுபடுகிறார். இந்த வைபவத்தில் ஒரு ருசிகரமான விவரத்தையும் இவர் தம் அகக்கண்ணால் கண்டிருக்கிறார். அர்ச்சுனனுடைய தேர்க் குதிரைகள் தண்ணீருக்கு விடாய்த்து இளைத்து நின்றபோது, கண்ணன் ஓர் அஸ்திரம் போட்டுப் பூமிக்குக் கீழுள்ள தண்ணீரை வெளிக்கிளப்பிக் கொண்டுவந்து, குதிரைகளை நீருட்டித் தரையிலே புரட்டி எழுப்பித் தேரிலே மறுபடியும் பூட்டிக் கொண்டு வந்தானாம். இக்குறிப்பை நாம் திருமாலிருஞ் சோலைப் பாசுரம் ஒன்றில் காணலாம்.

'கடவுளுக்கும் பட்சபாதமா?' என்று பிரமிக்கும்படி அடியவர்களுக்கு உதவுகிறதாம் மாயனது மாமாயம். அடியார்கள் விஷயத்தில் அப்படிக் கருணை செய்கிறானாம் கள்வன். இதற்கு ஒரு சான்றாக ஜயத்திரதனை அர்ச்சுனன் கொல்வதற்கு உதவிய பாரதக் கதையைக் குறிப்பிடுகிறார் பெரியாழ்வார்.

Koviloor Digital Library

அர்ச்சுனன் மகனான அபிமன்யுவைக் கொன்று விட்டான் ஜயத்திரதன். 'நாளைச் சூரியாஸ்தமனத்திற்குள் ஜயத்திரதனைக் கொன்றுவிடுவேன்' என்று சபதம் செய்து விட்டான் அர்ச்சுனன். அந்த வாக்கைக் காப்பாற்று வதற்காகக் கண்ணன் சக்கரம் கொண்டு சூரியனை மறைத்துக் காட்டினான். அப்போது ஜயத்திரதனை எதிரிகள் வெளிப் படுத்தக் கண்ணன் உடனே சக்கரத்தை விலக்கிச் சூரியனை வெளிப்படுத்தி விட்டானாம். இப்படி ஜயத்திரதனைக் கொல்வித்த மாமாயத்திலே எல்லையற்ற கருணை காண்கிறது இப் பெரியாரின் பக்தியுள்ளம்.

நூற்றுவரை ஐவரால் ஒழித்த ஸ்ரீகிருஷ்ணலீலையில் இறைவனின் எளிமையையும் பெருமையையும் ஒருங்கே காண்கிறார் பெரியாழ்வார். அர்ச்சுன குமாரனாகிய அபிமன்யு வின் மகனை அசுவத்தாமா கருவிலே நீறாக்க, அந்தச் சிசுவை மீண்டும் உயிர்ப்பித்துப் பரீட்சித்து மகாராஜாவாக விளங்கச் செய்த கண்ணனது சிஷ்டபரிபாலனத் திறனையும் குறிப் பிடுகிறார்.

அவதாரத்தின் ஆழ்ந்த ரகசியம்

கண்ணன் பிறப்பிலும், கண்ணனுடைய தெய்விக லீலை களிலும் பெரியாழ்வாரைப்போல் ஈடுபட்டவர் வேறொரு வரும் இல்லை என்று சொல்லலாம். எனவே, ஸ்ரீகிருஷ்ணாவ தாரத்தின் உட்பொருளும் ஸ்ரீகிருஷ்ண லீலைகளின் ஆழ்ந்த ரகசியங்களும் இவருடைய பாடல்களை ஓதி ஓதி இன்புறு வோரால் இனிது உணரப்படும் என்பது உறுதி.

தர்மம் உள்ள இடத்தில் வெற்றி நிச்சயம். தர்மத்தை நோக்கிய லட்சியம் உள்ளத்தில் நிலைபெற்றிருந்தால், இறையருள் எப்படியாவது உதவிபுரிந்து அறத்தை வெற்றி பெறச் செய்து, அன்பனை இகத்திற்கும் பரத்திற்கும் நலம் விளைவிக்கின்ற வழியில் முன்னேறச் செய்கிறது. அவதாரமூர்த்தி வெளியிடும் உண்மைகளில் இதுவும் ஒன்று.

Koviloor Digital Library

ஆனால் தருமத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டே, பகவான் அவதாரமாகவோ உள்ளொளியாகவோ காட்டுகின்ற கைங்கரிய நெறியை அறநெறியாகக் கண்டுகொள்ளாதவனுக்கு இறையருள் துணைபுரிவதில்லை. பகவான் வேதசாஸ்திரங் களுக்கும் சகல தர்மங்களுக்கும் சமுதாய விதிவிலக்குகளுக்கும் அப்பாற்பட்டவன். அறத்தின் பெயரையோ சாஸ்திரத்தின் பெயரையோ சொல்லிக்கொண்டு இறைவனுடைய சித்தத்திற்கு விரோதமாக நடந்துகொள்வது அறவழியில் நடப்பதாகாது. மனிதனை உய்விக்கும் அறவழி, இறையருள் பெற்ற பக்தியுள்ளம் உணர்ந்துகொள்வதுதான்: உணர்த்துவது தான்.

துரியோதனன், சிசுபாலன் முதலான துஷ்டர்களை வதம் செய்வதற்காகத்தான் பகவான் மானிட சரீரத்தைத் தரித்துக் கொண்டு வந்தான் என்று கருதுவது சரியன்று. ஸர்வசக்தி, மனிதனாகப் பிறக்காமலே துஷ்டநிக்கிரகம் செய்யமுடியும். ஆகவே, பகவான் மனிதர்களிடையே மனிதனாக இறங்கு வதற்கு வேறோர் ஆழ்ந்த பொருள் இருக்கவேண்டும்.

மனித உள்ளம், மனித உயிர், மனித உடம்பு ஆகிய இவற்றுள் ஒரு தெய்விக உயிரை மலர்ச்சிபெறச் செய்து காட்டி, மானுடதர்மம் எப்படித் தெய்விக நிலை பெறமுடியும் என்பதை அன்பர்களுக்கு, அடியவர்களுக்கு உணர்த்துவதே அவதாரத்தின் ஆழ்ந்த ரகசியமாக இருக்கவேண்டும். அப்போதுதான் தெய்வம் அவதரிப்பது அல்லது இறங்கி வருவது என்பது மானுடத்தின் வெற்றியாகும். மானுட ஏற்றத்திற்கு வழிகாட்டுவதாகும்.

மானுட உடம்பிலேயே ஒருவன் இறைவனுடன் இசைந்து திவ்யஞானம், திவ்யசக்தி பெறமுடியும், தெய்விக மனோபாவம் தெய்விக ஆனந்தம் அடையமுடியும் என்பதற்கு ஆழ்வார்களின் வாழ்வும் பக்தியநுபவங்களும் சான்றாகும். மனிதனை இறைவனிடத்திலிருந்து பிரிக்க முடியாது என்ற கருத்தைத் திருப்பல்லாண்டிலேயே தெளிவுபடுத்துகிறார் பெரியாழ்வார்.

Koviloor Digital Library

எதற்காகக் கண்ணன் மானுட உடம்பில் அவதரிக்க வேண்டியிருக்கிறது என்ற ரகசியத்தின் ஆழத்தை உணர்ந்து அந்த மெய்யுணர்வைத் தமது வாழ்க்கைத் தத்துவமாக்கிக் கொண்டவர் பெரியாழ்வார். இந்தத் தத்துவத்தை, இந்த ரகசியத்தை இவர் திருமொழியிலும், இதன் முகப்பில் அமைந்திருக்கும் திருப்பல்லாண்டிலும் கண்டுகொள்ளலாம்.

இவர் இறைவனை நோக்கிக் கூறுவதைக் கேளுங்கள்:

உன்னுடைய விக்கிரமம்
ஒன்றொழியா மல்எல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால்
சுவர்வழி எழுதிக்கொண்டேன்!

(விக்கிரகம் - வீரச் செயல்கள். நெஞ்சகம்பால் - நெஞ்சினுள்ளே. சுவர் வழி - சுவரில் சித்திரம் எழுதுவது போல்.)

கண்ணனது அதிவீரசரித்திரத்தையும் லீலைகளையும் இப்படித் தமது சித்தத்திலே சித்திரித்துக் கொண்டவர் ஸ்ரீகிருஷ்ணாவதார ரகசியத்தை நன்கு உணர்ந்துகொண்டார் என்பதில் ஐயமில்லை. பாற்கடலை விட்டுப்பேராயன் ஆய்ப்பாடிக் கண்ணனாக வந்ததுபோல், இவர் உள்ளத் திற்குள்ளும் ஓடிவந்துவிடுகிறானாம், லட்சுமியும் தானுமாக.

இந்த நிலையில், அஞ்ஞானத்தையும் தீவினைகளையும் நோய்களையும் யமகிங்கரர்களையும் நோக்கி, 'என் உள்ளமும் உடம்பும், பழைய உள்ளமும் உடம்பும் என்று நினைக்க வேண்டாம். நோய்களே! தீவினைகளே! போய்விடுங்கள். இனி அவனுடைய ராஜதானி என் உள்ளமும் உடம்பும்; இங்கே வரவேண்டாம்' என்று கண்டிப்பாக எச்சரிக்கை செய்வதைக் கேளுங்கள்.

கண்ணனை அகத்தும் புறத்தும் கண்டு கொண்டவர் நிலை இது.

★

Koviloor Digital Library

13

இவர் வளர்க்கும் கண்ணன்

கண்ணனைப் பாரதசக்தியாகிய இந்து தேசத்திற்குக் கண் என்றும் ஆத்மா என்றும் சொல்லலாம். இக்கண்ணன் மீது தாயன்பைச் சொரிந்து அவனைக் குழந்தையாகக் கண்டு விளையாடல்களை ஆசைதீர அநுபவிக்கிறார் பெரியாழ்வார்.

ஒரே இரவில் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளரும் கண்ணனைப் பெரியாழ்வார் காண்கிறார். தேவகி வருந்தத் தாமே யசோதையாகிக் குதூகலமடைகிறார். 'கடவுளின் பேரழகிற்கு இவ்வுலகிலே என்ன தீங்கு நேர்ந்து விடுமோ?' என்று பொங்கிய பரிவுடன் காப்பிட்டுப் பல்லாண்டு பாடியவர், அந்தத் தெய்வ அழகைக் குழந்தை யாக்கித் தாயின் பேரின்பத்தை அநுபவிக்கிறார். இவர் திருமொழியிலுள்ள பாசுரங்களில் பாதிக்குமேல் கிருஷ்ண லீலைகளைக் கூறுவனவேயாகும்.

வந்து பாருங்கள்!

சோலைமலையிலும் திருக்கோட்டியூரிலும் தாம் கண்ட குழந்தைக் கண்ணனை நெஞ்சிலே அணைத்துக்கொண்டு வந்துவிட்டார், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு, தமது நந்தவனத்திற்கு. இவ்வூரும் தமது தோட்டமும் ஆய்ப்பாடியாகத் தாம் யசோதையாகி வளர்த்துவரும் குழந்தையின் மேனியழகை, 'கண்ணெச்சில் பட்டுவிடுமோ?' என்ற அச்சமின்றி அயலகத்துப் பெண்களைக் கூவியழைத்துக் காட்டுகிறார்.

Koviloor Digital Library

பாதாதி கேசமாகக் குழந்தையின் அழகைத் தனித் தனியே பாராட்டிக் காட்டுகிறார். 'பத்துக் கால்விரல்களும் ஒன்றுக் கொன்று பொருத்தமாய் அமைந்து அடிமலர்களை அழகு செய்கின்றன' என்று சொல்லி, ஒன்பது விரல்களுக்கு நவரத்தின வர்ணங்களும், மற்றொரு விரலுக்குப் பொன்னிற முமாக 'மருதாணி' இடுவதுபோல் செம்பஞ்சை இட்டுக் காட்டுகிறார்.

'வாருங்கள் பெண்களே! என் மணி வண்ணனுடைய பாதவிரல்கள் நவரத்தினங்களையும் மாற்றுயர்ந்த பொன்னை யும் தத்திப் பதித்துவைத்தாற்போலச் சேர்ந்து எவ்வளவு அழகாயிருக்கின்றன, பாருங்கள்!' என்கிறார்.

கணைக்கால், முழந்தாள், தொடை, வயிறு, மார்பு முதலான அவயவங்களையும் காட்டுகிறாள் யசோதை.

தந்தக் களிறுபோல்
தானே விளையாடும்
நந்தன் மதலைக்கு
நன்றும் அழகிய
உந்தி இருந்தவா
காணீரே
ஒளிஇழை யீர்!வந்து
காணீரே

(தந்தக்களிறு - கொம்புமுளைத்த யானைக்குட்டி. நந்தன் மதலை - நந்தகோபர் குழந்தை. ஒளி இழையீர் - ஒளியுள்ள ஆபரணங்களை அணிந்த பெண்களே.)

என்று காட்டுவதைப் பாருங்கள்.

ஊர்ச்சிறுவர்களைக் காட்டிலும் தன் குழந்தை அழகு வாய்ந்ததென்று பெருமைப்படுகிறது பெரியாழ்வாரின் தாயுள்ளம். இந்தக் குழந்தையின் அழகிய மார்பிலே விலையுயர்ந்த ரத்தின ஆபரணம் பூட்டிப் பார்க்கிறார். இந்த அழகை ஊர்ப் பெண்களுக்கும் காட்டுகிறார்.

Koviloor Digital Library

குருமா மணிப்பூண்
குலாவித் திகழும்
திருமார்(வு) இருந்தவா
காணீரே
சேயிழை யீர்!வந்து
காணீரே!

(குருமா - மிகவும் சிறந்த. மணிப்பூண் - ரத்தின ஆபரணம். குலாவி - உலாவி மகிழ்ந்து, கொஞ்சி மகிழ்ந்து. மார்வு - மார்பு. சேயிழையீர் - செம்மையான ஆபரணங்களை அணிந்த பெண்களே.)

இவர் காட்டுகிற திருமார்பிற்கு அந்த ரத்தின ஆபரணம் தான் அழகு செய்கிறதா? அல்லது திருமார்புதான் ஆபரணத் திற்கே அழகு தருகிறதா? ஆபரணத்திற்கு ஆபரணமான திருமேனியல்லவா இந்த 'நீலநிறத்துச் சிறு பிள்ளை!'

'மைத்தடங்கண்ணி யசோதை வளர்க்கின்ற' பிள்ளை யைத்தான் இவரும் வளர்க்கிறார். தாமே மடியில் வைத்துக் கொண்டு,

கைத்தலங் கள்வந்து
காணீரே!

என்றும்,

கண்டம் இருந்தவா
காணீரே

(கண்டம் இருந்தவா - கழுத்து இருந்த விதத்தை.)

என்றும் காட்டுகிறார்.

'பிள்ளையின் வாக்கும் நயனமும் வாயும் முறுவலும் மூக்கும்' எல்லாம் யசோதையை மகிழ்விப்பதுபோல் இவரை யும் மகிழ்விக்கின்றன.

Koviloor Digital Library

தாலாட்டுகிறார்

ஒரு சமயம் இக்குழந்தையைத் தூளித் தொட்டிலில் வைத்து ஆட்டுகிறார். ஒருசமயம்,

மாணிக்கம் கட்டி
வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னால்செய்த
வண்ணச் சிறுத்தொட்டில்

(இடை - இடையே. ஆணிப்பொன்னால் - மாற்று உயர்ந்த பொன்னால்.)

இட்டுக் குழந்தையைத் தாலாட்டுகிறார்.

குழந்தை அழத் தொடங்குகிறது.

உடையாய் அழேல், அழேல்,
தாலேலோ!

(உடையாய் - சுவாமியே. அழேல் - அழாதே.)

என்று தாலாட்டுகிறாள் தாய்.

'இது சாதாரணக் குழந்தையல்ல; சுவாமியே இப்படி வந்து பிறந்திருக்கிறார்!' என்பதும் தாய்க்குத் தெரிந்து விடுகிறது. எனினும் அழுகிற குழந்தையைத் தாலாட்டித் தானே ஆகவேண்டும். எனவே,

சோதிச் சுடர்முடியாய்!
தாலேலோ!
சுந்தரத் தோளனே
தாலேலோ!

என்றும்,

நாரா யணா! அழேல்,
தாலேலோ!

என்றும் தாலாட்ட வேண்டியிருக்கிறது.

Koviloor Digital Library

அதிகமாய் அழும்போது, 'அழேல், அழேல், தாலேலோ!' என்று தாலாட்டுகிறாள் தாய்.

நந்தகோபனின் குழந்தையை ஆயர்களும் ஆய்ச்சிமாரும் வந்து பார்த்து, இயன்ற அளவு பரிசளித்துப் பணிபுரிந்து போயிருப்பார்கள். ஆனால் பெரியாழ்வார் வளர்க்கும் குழந்தைப் பெருமாளுக்கு அந்த ஆயர்களும் ஆய்ச்சிமார்களும் பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் ஆகிவிடுகிறார்கள்!

அம்புலி காட்டுகிறார்

அந்தி மயங்குகிறது. குழந்தை நெற்றியிலே சுட்டி அசையத் தவழ்ந்துபோகிறது. அரையிலே சதங்கை கிண் கிண் என்று ஒலிக்கிறது. இப்படித் தவழ்ந்து போய்ப் புழுதி அளைகிறது. தாய் வருகிறாள், குழந்தைகளின் சேஷ்டைகளில் குதூகலம் அடைந்தவளாய்.

புழுதியளைந்த கையைத் துடைத்துக் குழந்தையைத் தூக்கிவைத்துக்கொண்டு அம்புலி காட்டுகிறாள். குழந்தைக் கண்ணனும் தன் சிறு கைகளைக் காட்டிக் காட்டி. 'அம்புலீ! வா வா' என்று அழைக்கிறான். அதே சமயத்தில் சந்திரன் மேகத்திலே மறைந்து போகிறது.

'மேகத்தில் மறைந்து போகாதே, வெண்ணிலாவே! ஓடிவா' என்று குழந்தைக்காகப் பரிந்து சந்திரனை வேண்டிக் கொள்ளும் தாயைப் பாருங்கள்.

என்சிறுக் குட்டன்,
எனக்கோர் இன்னமு(து),
எம்பிரான்,
தன்சிறுக் கைகளால்
காட்டிக் காட்டி
அழைக்கின்றான்.
அஞ்சன வண்ணனோடு
ஆடல் ஆட

Koviloor Digital Library

உறுதியேல்,
மஞ்சில் மறையாதே,
மாமதீ! மகிழ்ந்(து)
ஓடிவா.

(சிறுக்குட்டன் - சிறுபிள்ளை. மஞ்சில் - அந்த மேகத்திரைக்குள்ளே. மாமதீ - அழகிய சந்திரனே.)

இப்படி இவள் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கும்போதே மேகத்திலிருந்து வெளிப்படுகிறது பூர்ணசந்திரன் முன்னிலும் அழகாக. அந்தச் சந்திரவட்டத்தை யும் குழந்தையின் முகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறாள் தாய்.

சுற்றும் ஒளிவட்டம்
சூழ்ந்து சோதி
பரந்தெங்கும்
எத்தனை செய்யிலும்,
என்மகன் முகம்
நேர்ஒவ்வாய்

(நேர் ஒவ்வாய் - பூர்ணமாய் ஒப்பாக மாட்டாய்.)

என்று தீர்ப்புச் சொல்லுகிறது தாயின் இதயம்.

கண்ணன் கைநீட்டிக் கூப்பிட்டுக்கொண்டேயிருக்கிறான்.

கைத்தலம் நோவாமே,
அம்புலீ! கடி(து)
ஓடிவா!

(கைத்தலம் நோவாமே - கைகள் வலியெடுக்காதபடி. கடிது - விரைவாக.)

என்கிறாள் தாய்.

நயமும் பயமுமாய்ப் பேசுகிறாள் சந்திரனை நோக்கி. 'குழந்தை பெறாத மலடனா நீ? வா' என்கிறாள். 'சிறியவன் என்று என் இளஞ்சிங்கத்தை இகழாதே. மகாபலியிடம்

Koviloor Digital Library

போய்ச் சிறுவனுடைய செய்தியைக் கேட்டுத் தெரிந்துகொள்' என்கிறாள். இப்பதிகத்தின் இறுதியில் தாயுணர்வைக் காட்டிலும் பக்தியுணர்வு அதிகரித்துவிடுகிறது.

ஆடுக, ஆடுகவே!

இரண்டு கைகளையும் முழங்கால்களையும் ஊன்றித் தலையைத் தூக்கிக்கொண்டு அசைந்தசைந்து ஆடுகிறது குழந்தை. பாடுகிறது தாயுள்ளம்:

ஆயர்கள் போரேறே!
ஆடுக ஆடுகவே!

(போர் ஏறே - போர் செய்ய எழுகின்ற ராஜசிம்மம் போன்றவனே.)

'சிங்கம் போலத் தலையை நிமிர்த்திக்கொண்டு ஆடுகிறாயே; ஆடு, ஆடு. நீ ஆயர்குலத்து ஆண் சிங்கமல்லவா?' என்கிறாள்.

'எனக்காக ஆடவேணும் ஒரு தரம்' என்று அடிக்கடி சொல்லி இந்த விளையாட்டிலே ஈடுபட்டு,

ஐய! எனக்கொருகால்
ஆடுக செங்கீரை

(செங்கீரை - குழந்தைப் பருவத்து விளையாட்டுகளில் ஒன்று.)

என்றும்,

அம்ம! எனக்கொருகால்
ஆடுக செங்கீரை

என்றும்,

அப்ப! எனக்கொருகால்
ஆடுக செங்கீரை

என்றும்,

Koviloor Digital Library

எங்கள் குடிக்கரசே!
ஆடுக செங்கீரை

என்றும் கொஞ்சியவண்ணமாக இருக்கிறார்.

'ஆனை! ஆனை! அழகர் ஆனை' என்று குழந்தையை மடியில் வைத்துத் தாய் ஆட்டி மகிழ்வதை இன்றும் பார்க்கிறோமல்லவா? கண்ணன் தாயும்,

ஆனை! எனக்கொருகால்
ஆடுக செங்கீரை

என்று கொஞ்சிக் கொஞ்சிக் குழந்தையை ஆட்டிக் கொண்டிருப்பதும் உண்டு.

தாய் ஆட்டும்போது குழந்தைக்கும் குதூகலந்தான். தலையின் முன்புறத்திலே நெருங்கிச் சுருண்டு தொங்கும் ரோமம் அசையக் குழந்தை புன்னகை புரியும்போது, தாய் பூரித்துப் போகிறாள். 'இன்னும் இளநகை முற்றவில்லை; சிரிக்கத் தெரியவில்லை' என்று சொல்லிக்கொண்டே மகிழ்ந்துபோகிறாள்.

குழந்தைக்கு அதிகரிக்கும் மகிழ்ச்சியிலே, இளநகை அதிசயமாக முற்றி வளர்ந்து கொஞ்சம் பெருநகையாகவும் தோன்றுகிறது. அப்போதுதான் முளைத்த சில பற்கள் தோன்றச் சிறிது வாய் திறந்து கண்ணன் சிரித்ததும், தாய் அந்தப் பற்களையா காண்கிறாள்? - பேரின்பத்தைப் பூலோகத்திலேயே கண்டவளாய்,

ஏலும் மறைப்பொருளே!
ஆடுக செங்கீரை;
ஏழுல கும்உடையாய்
ஆடுக ஆடுகவே

(ஏலும் - தகுதியான.)

என்று பாடுகிறார்.

Koviloor Digital Library

நகைப் பெட்டியைத் திறந்து ஆபரணங்களையெல்லாம் எடுத்துக் குழந்தைக்குப் பூட்டிப் பார்க்கிறாள். உலகங்களுக் கெல்லாம் பொதுவுடைமையான பேரழகை, வேதப் பொருளான 'அழியா அழகு' என்ற தத்துவத்தை, 'ஆபரண' விலங்கிட்டுத் தங்கள் குடிக்கே சொந்தமாகக் கருதும் தாயைப் பாருங்கள்.

எங்கள் குடிக்கரசே!
ஆடுக செங்கீரை
ஏழுல கும்உடையாய்
ஆடுக செங்கீரை

இந்தத் தாயுள்ளம் பெரியாழ்வாரின் பக்தி உள்ளந்தான். உலகங்களையெல்லாம் ஆட்டிவைக்கும் அழகனைக் குழந்தையாக ஆட்டிவைக்க ஆசைப்படும் பக்தியை என்னென்பது!

கண்ணன் கைகொட்டி விளையாடுகிறான்

இப்போது இந்த விளையாட்டையே பார்த்துக் கொண்டிருக்கலாமென்று தோன்றுகிறது தாய்க்கு. தானும் அவனைப்போல் ஒரு கையோடு மற்றொரு கையைச் சேர்த்துக் கொட்டியவண்ணம், 'இன்னும் விளையாடு, குழந்தாய்' என்று சொல்லிக்கொண்டே நிற்கிறாள்.

கண்ணன் சிரித்துக் கைகொட்டும்போது, அந்தப் பவள வாயையும் முத்துக்கள் போன்ற பற்களையும் பார்த்துக் கொண்டிருப்பதே போதும் என்று தோன்றுகிறது தாய்க்கு. இந்த விளையாட்டைச் சப்பாணி கொட்டுதல் என்று சொல்வதுண்டு.

தந்தையான நந்தகோபரும் வந்து உட்கார்ந்துகொண்டு கண்ணன் விளையாட்டைப் பார்க்க ஆசைப்படுகிறார். தாய் தன் மடியிலிருந்து கைகொட்டும் குழந்தையைப் பார்த்து, 'அவர் மடியில் போய் உட்கார்ந்துகொண்டு கைகொட்டு பார்க்கலாம்' என்று கொஞ்சி வேண்டுகிறாள்.

Koviloor Digital Library

தங்க அரைநாணொடு மாணிக்கக் கிண்கிணியும் அரையிலே ஆடி ஒலிக்க, நெற்றிச் சுட்டி 'தாழ்ந்து ஆட'க் குழந்தை தாயின் மடியிலிருந்து இறங்கிப் போய்த் தந்தை மடியிலிருந்து சப்பாணிகொட்டுகிறான். குழந்தை நடந்து போகும் அழகையும், தன் கணவன் மடியிலிருந்து கை கொட்டும் அழகையும் அநுபவித்தவள், குழந்தையை மறுபடியும் தன் மடியிலே வந்து சிரித்து விளையாட வேண்டுமென்று கொஞ்சியழைக்கிறாள்.

பிறகு தாய் சிரித்துக்கொண்டே குழந்தையை நிலா முற்றத்தில் போய் நின்று விளையாடச் சொல்லுகிறாள். 'நிலா! நிலா! வா, வா; அம்புலீ! வா; சந்திரா! வா' என்று நிலாவையும் அழைத்துக்கொண்டு விளையாடச் சொல்லுகிறாள். 'அப்பா பூரித்துப் போகும்படி நீ கைகொட்டி விளையாடு' என்கிறாள்.

'துஷ்டப்பயலே! இப்போது ஒன்றும் தெரியாத பிள்ளைபோல் கைகொட்டி விளையாடுகிறாயே! திருட்டு வெண்ணெய் செரிக்க வேணுமே, விளையாடு, விளையாடு' என்கிறாள்.

அறம் மெலிந்து அதர்மம் ஓங்கும்போதெல்லாம் அவதரிக்கும் ஸர்வ சக்தியே கண்ணனாகி விளையாடுகிறது என்று பாடுகிறது பெரியாழ்வாரின் தாயுள்ளம். தாய்போல் வந்த பேயை வதஞ்செய்த கதையையும் உள்ளத்தில் கொண்டு, அசுர சக்திகளையும், வேஷம் போட்டு மோசம் செய்யும் பொய்ம்மையையும் பிளந்தெறியும் கைகள் சப்பாணிகொட்டி அருளுகின்றன என்று பாடுவதிலேதான் பெரியாழ்வாருக்கு எவ்வளவு ஆசை!

தளர் நடை நடக்கிறான்

பூமியில் காலைப் பதியவைத்து நடக்கத் தெரியாமல் குழந்தை தடுமாறி நடக்கிறதைப் பார்ப்பதில் தாய்க்கும் பிறர்க்குமுள்ள ஆசையை நாம் நன்கறிவோம். ஒரடி வைத்து, கொஞ்சம் தளர்வுற்று, இன்னும் ஒரடி வைத்து மறுபடியும்

Koviloor Digital Library

கொஞ்சம் தளர்ந்து சில விநாடிகள் கழிய, இன்னும் காலை மெள்ளத் தூக்கி வைத்துக் குழந்தை நடை பயில்வதைத்தான் தளர் நடை நடப்பது என்கிறோம்.

தாயின் இந்த ஆசையைப் பாசுரமிட்டுப் பேசும் பெரியாழ்வார்,

> தடந்தாள் இணைகொண்டு
> சார்ங்க பாணி
> தளர்நடை நடவானோ!

(தடந்தாள் இணைகொண்டு - பெரிய இரண்டு பாதங்களையும் கொண்டு.)

> தக்கமா மணிவண்ணன்
> வாசு தேவன்
> தளர்நடை நடவானோ!

என்றெல்லாம் பாடுகிறார்.

கண்ணன் தளர்நடை நடக்கும்போது அரைச் சதங்கை நழுவி விழுந்து அடிகளில் இழுப்புண்டு ஒலிக்க, கட்டுத் தறியை முறித்துக் காலிலிட்ட இருப்புச் சங்கிலியை இழுத்து வரும் மதயானைபோல் வருகிறானாம், வெண்ணெய் உண்டு 'மத மத' வென்று வளர்ந்துவரும் கண்ணன். 'அந்த மதயானை மெள்ள நடந்துவந்தால் எப்படியிருக்குமோ அப்படி யிருக்கிறது கண்ணன் தளர்நடை' என்கிறார் பெரியாழ்வார்.

தளர் நடை நடந்து புன்னகையுடனோ சிரித்துக் கொண்டோ வந்து தாய்க்கு முத்தம் கொடுக்கிறான். இந்த ஒவ்வொரு முத்தத்திலும் தழைக்கிறது, தளிர்க்கிறது. மலர்கிறது தாயுள்ளம்.

குட்டி வெள்ளிமலை ஒன்றும் குட்டிக் கருமலை ஒன்றும் கால் முளைத்து வருவதுபோல் வருகிறார்கள் அண்ணனாகிய பலராமனும் கண்ணனும். முடுமுடுவென்று விரைந்தோடுகிறது குட்டி வெள்ளிமலை. ஒவ்வோர் அடியாக

Koviloor Digital Library

எடுத்தெடுத்து வைத்துக்கொண்டே அந்த வெள்ளிமலையைப் பிடிக்கப் பின் தொடர்கிறது குட்டிக் கருமலை.

இந்தத் தளர்நடை யழகுதான் எப்படி வசீகரிக்கிறது பெரியாழ்வாரை. 'தளர்நடை நடவானோ! இன்னும் தளர்நடை நடவானோ!' என்றெல்லாம் பாடிப் பாடி, முடிவில்லாத ஒரு கால அரங்கிலே கண்ணன் தளர்நடை முடிவில்லாமல் நடந்துகொண்டிருப்பது போன்ற ஒரு காட்சியை நமது உள்ளத்திலும் தோற்றுவிக்கிறார் இப்பெரியார்.

அச்சோ! அச்சோ!

தாயின் இடுப்பில் ஏற ஆசைப்பட்டுக் குழந்தை ஓடிவந்து தாயைக் கட்டிக்கொள்வதைப் பார்த்திருக்கிறோம். இது தாய்க்கு, தானே போய்க் குழந்தையைத் தழுவித் தூக்கி இடுப்பில் வைத்துக்கொள்வதைக் காட்டிலும் அதிக இன்பமானது. இந்த இன்பத்தையும் அநுபவிக்க ஆசைப் படுகிறது பெரியாழ்வாரின் தாயுள்ளம்.

அரைச் சதங்கை, கால் சலங்கை, நெற்றிச்சுட்டி முதலிய நகைகளை அணிந்து தாய் கண்ணனை அழகு பார்த்துக் கொண்டிருக்கிறாள். குழந்தை ஓடிப்போய்ச் சற்றுத் தூரத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறான். அந்த அழகையும் தாய் பார்த்து அநுபவித்துக்கொண்டிருக்கிறாள். குழந்தையை அப்படியே விளையாட விட்டுவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடுவதும் உண்டு.

விளையாடிக்கொண்டிருக்கும்போதே தாயை நினைத்துக்கொண்டு ஓடிவருகிறான் கண்ணன். 'சலன் சலன்' என்று சதங்கைகள் ஒலி செய்யக் கேட்டுத் தாய் திரும்பிப் பார்க்கிறாள். நீலமேகம் மின்னலோடு ஓடிவருவதுபோல் வருகிறான்.

திரும்பி எதிர்நோக்கி வரும் தாயை எதிர்நோக்கி வந்து அணைத்துக்கொள்கிறான். அவள் தன்னை இடுப்பில்

Koviloor Digital Library

எடுத்துக்கொள்ள வேணுமென்று சைகை காட்டுகிறான், வற்புறுத்துகிறான். கொஞ்சுகிறான், தொந்தரவு செய்கிறான், 'என்ன ஹிம்ஸை!' என்றுகூடத் தாய் சொல்லிவிடுகிறாள், தன் வேலைத் தொந்தரவுகளுக்கிடையே.

ஆனால் இந்த 'ஹிம்ஸை'யை அநுபவிக்க ஆசைப் படுகிறது தாயின் உள்ளம். குழந்தைக்கு இஷ்டமான சமயத்தில் மட்டுமல்ல, தனக்கு இஷ்டமான வேறு சமயங்களிலும், 'அவன் விளையாட்டையும் விட்டுவிட்டு, மின்னலோடு தோன்றும் மேகத்திலே சின்னஞ்சிறு இடிகள் இடிப்பதுபோல் சதங்கை சப்திக்க வந்து, கட்டிக்கொண்டு, இடுப்பில் வைத்துக்கொள்ளும்படி ஹிம்ஸிப்பானே!' என்பதை நினைக்கும்போதே தாயுள்ளம் உருகிப்போகிறது.

இந்த நிலையில் சொல் இடிந்து வாய்விட்டு நன்றாக வெளிப்படாமலும் நின்றுவிடும்! இந்த ஆச்சரியத்தை, 'அச்சோ!' என்று குறிப்பிடத் தொடங்கும் தாய், தான் சொல்ல விரும்புவதையெல்லாம் சொல்ல மறந்து ஒரு தரத்திற்கு இரண்டு தரம் 'அச்சோ! அச்சோ!' என்று சொல்லிவிட்டு அப்படியே நின்றுவிடுகிறாள்.

எம்பெருமான் வாராய்!
அச்சோ! அச்சோ!

என்று சொல்வதைக் கேளுங்கள்.

தலையை வாரிவிட்டிருந்தாள் தாய். விளையாட்டிலே ரோமங்கள் கலைந்து பிரிந்துவிட்டன. ஓடி வரும்போது அந்த ரோமங்கள் பவளம் போன்ற வாய்வரை தொங்கிக் கொண்டிருக்குமாம், செந்தாமரைப் பூவில் வண்டுகள் மொய்த்துக் கிடப்பதுபோல. அப்படி ஓடிவந்து கண்ணன் தன்னைத் தழுவிக்கொள்ளவேணும் என்கிறாள்.

அப்படி ஓடிவந்து சங்குசக்கரம் ஏந்திய கைகளால் தம்மை நன்றாய்த் தழுவிக்கொள்ளவேண்டும், திருப்தி உண்டாகும்படி தழுவிக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்

Koviloor Digital Library

படுகிற தாயுள்ளத்தைப் பாருங்கள். சக்தியாவது மகிமையாவது வெளிப்படையாகத் தெரியாமல், விதையில் அடங்கிய மகாவிருட்சம்போல் அடங்கிக் கிடக்க, யசோதைக்கு முன்வந்த குழந்தைக் கண்ணனாகவே வந்து தம்மைத் தழுவிக்கொள்ளவேணும், இடுப்பில் தூக்கிக் கொள்ளும் குழந்தைபோல் தெய்வத்தைத் தம் உள்ளத்தில் கொண்டு திரியவேணும் என்று ஆசைப்படும் பக்தியை எந்தத் தத்துவ முழக்கோல் கொண்டு, எந்த வேதாந்த கஜக்கோல் கொண்டு அளந்து பார்க்க முடியும்!

வேறு பால லீலைகள்

குழந்தை தாயை முதுகுப்புறமாக வந்து அணைத்துக் கொள்வதுண்டல்லவா? இவள் பராக்காயிருக்கும்போது பளிச்சென்று கண்ணன் கட்டிக்கொள்கிறானே. இவள் பார்த்தும் பாராததுபோல் இருந்துவிடுவதும் உண்டு. கழுத்துச் சங்கிலியோடும், கையில் கங்கணத்தோடும், அரைச்சதங்கை முதலான அணிகளோடும் அவன் நடந்து வருகின்ற அந்த அழகைப் பாராததுபோல் கடைக்கண்ணால் பார்த்துவிடுவாள்.

அவன் வெண்ணெய்திருடி உண்ட லீலைகளில் ஒன்று நினைவிற்கு வரும். எட்டாத உறியில் வைத்திருந்த பாலையும் வெண்ணெயையும் விழுங்க ஆசைப்பட்டு மரஉரல் ஒன்றை உருட்டிக்கொண்டு வந்து கவிழ்த்துப் போட்டுக் கொண்டானாம். அப்படி வெண்ணெயும் பாலும் விழுங்கிய அந்த வயிற்றோடு அந்தக் கள்ளக் கிருஷ்ணன் தாயை முதுகில் கட்டிக் கொள்கிறானாம்.

பிள்ளை உரலை உருட்டிக்கொண்டு வந்ததுகூடத் தாய்க்குப் பெரியதாகத் தோன்றவில்லை. 'பொத்தலான (அடியிலே ஓட்டையாகிவிட்ட) உரலைத் தேடிக்கண்டு பிடித்துக்கொண்டு வந்தானே!' என்று அந்த முன்யோசனையைப் பாராட்டுகிறாள். நல்ல உரலானால் உபயோகப்படுத்த விரும்புகிறவர்கள் தேடிக் காணாத நிலையில் பிள்ளையைக் கையுங்களவுமாய்ப் பிடித்துக் கொள்ளக் கூடுமல்லவா?

Koviloor Digital Library

தம்மைத் தாயாகப் பாவித்துக் கொண்டவரின் பாவனா சக்தி, குழந்தையைத் தாய்ப்பால் உண்ணுவதற்கும் கொஞ்சி யழைக்கிறது! 'ஆயர்பாடிக்கு அணிவிளக்கே!' என்று கொஞ்சி, ஓடி விளையாடிக் களைத்துப் போய் உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தையை, 'அம்மம் உண்ணத் துயில் எழாயே' என்று எழுப்பிப் பாலூட்டுகிறாள் தாய்.

பாலூட்ட அழைப்பதுபோல் நீராட்ட அழைக்கிறாள், பூச்சூட்ட அழைக்கிறாள். 'குழல் வாரக் காக்கை வா' என்கிறாள். 'கோல் கொண்டு வா' என்கிறாள். 'காக்காய்! கண்ணுக்கு மை கொண்டு வா; பின்னிக்கப் பூக் கொண்டு வா,' என்றெல்லாம் பராக்குக் காட்டிக் குழந்தைக்குத் தலைவாரும் தாய்மாரை இன்றும் பார்க்கிறோமல்லவா?

கண்ணனுக்கு வயது அதிகரிக்க அதிகரிக்க, துஷ்டத் தனமும் அதிகரிப்பதுபோலத் தோன்றுகிறது. ஊரிலுள்ள பிள்ளைகள் தாயிடம் வந்து, 'கண்ணன் என்னை அப்படிச் செய்தான், இப்படிச் செய்தான்!' என்று முறையிட்டுக் கொள்கிறார்கள். தாய்க்குக்கோபம் வருகிறது. ஆனால் அந்தக் கோபம் பறந்துபோகிறது கண்ணனைக் கண்டதும்.

'என் அப்பனே! இனி நீ அங்கே போகாதே; குற்றம் சுமத்தும் அவர்களை விட்டுவிடு. பரிவுடன் இருக்கும் எங்களிடம் வா' என்று கொஞ்சிக் கூப்பிடுகிறாள் தாய். 'என் செல்லப் பிள்ளைமேல் அநாவசியமாகக் குற்றப்பத்திரிகை படிக்கிறார்கள்!' என்றே நினைக்கிறாள் தாய்.

தாயின் இத்தகைய கள்ளங்கபடமற்ற பட்சபாதத்தையும் பெரியாழ்வாரின் தாயுள்ளத்திலே காண்கிறோம். 'குழந்தாய்! நீ நல்லவன்; என் பிள்ளை ஞானச்சுடரல்லவா? திருஷ்டி தோஷம் வந்துவிடுமோ?' என்று நட்சகமூர்த்திக்கே அந்தி வேளையில் காப்பிட்டு, இரவிலே தன் பக்கத்தில் படுக்க வைத்துக்கொள்ளும் தாயன்பையும் காண்கிறோம், பெரியாழ் வாரின் பெரும் பக்தியுள்ளத்திலே.

★

Koviloor Digital Library

14

கைவரிசையும் கண்ணாம்பூச்சியும்

(கண்ணன் கல்வி)

என்ன கைவரிசை!

'அம்மா, உன் மகன் எங்கள் வீட்டுக்கு வந்தான்; வெண்ணெயை விழுங்கினான்; வெறுங்கலத்தைக் கீழே போட்டான். தரையிலே போடவில்லை, கல்லிலே!' என்கிறாள் ஆய்ச்சி ஒருத்தி. அந்த ஓசையில் ஒரு மகிழ்ச்சி. 'இது கண்ணன் கற்ற கல்வி!' என்கிறாள்.

வேறொரு ஆய்ச்சி வருகிறாள்; 'உருக்க வைத்திருந்த வெண்ணெயைத் தாழியோடு எடுத்துச் சாப்பிட்டுவிட்டுத் தாழியையும் உடைத்துவிட்டான்! பிறகு ஒன்றும் அறியாதவன் போல் என் பக்கத்திலே வந்து நிற்கிறான் அம்மா!' என்கிறாள்.

இன்னொரு ஆய்ச்சி ஓடி வருகிறாள். 'பாலைக் காய்ச்சி அடுப்பில் ஏற்றிவைத்தேன்; என் மகளைக் காவலாக வைத்து விட்டு மேலண்டை வீட்டுக்கு நெருப்பு எடுத்துவரப் போனேன். அங்கே கொஞ்சம் பேசிக்கொண்டு நின்று விட்டேன். அம்மா! அதற்குள்ளே உன் மகன் அந்தப் பாலைச் சாய்த்துப் பருகிவிட்டான். நான் இங்கே வரும்போதுகூட அங்கேதான் நின்று கொண்டிருந்தான். யசோதைப் பிராட்டியே! உன் மகனைக் கூப்பிடு' என்கிறாள்.

இன்னும் ஒருத்தி வந்து, நோன்புக்குச் சித்தம் செய்து வைத்திருந்த பட்சணங்களைத் தேவபூஜைக்கு முன்னமே கண்ணன் விழுங்கிவிட்டதாகப் புகார் செய்கிறாள்.

Koviloor Digital Library

'பட்சணங்களை என் வீட்டில் கவர்ந்துண்டு ஒன்றும் அறியாதவன்போல் இங்கே வந்து நிற்கிறானே இவன்!' என்று முறையிட்டுப் போனவள் மறுபடியும் வருகிறாள். 'அம்மா! உன் மகனைக் கூப்பிடு, கூப்பிடு' என்று சொல்லிக்கொண்டே. அதே வீட்டுக்கு மறுபடியும் போய்க் கண்ணன் உறியை வெண்ணெய்க்காகச் சோதனை போடுகிறானாம்.

ஒரு சிறுமியின் கைவளையைக் கழற்றி நாவற்பழம் விற்பவளிடம் கொடுத்து, நல்ல நாவற்பழங்களாகப் பொறுக்கத் தொடங்கினான் கண்ணன். சத்தம் கேட்டு அங்கே போன ஆய்ச்சி, நாவற்பழக்காரியிடம் தன் பெண்ணின் வளையைக் கண்டாள். உடனே கண்ணன், 'இந்த வளையை நான் திருடவில்லை!' என்று தானாகவே சொன்னானாம். சொல்லித் தன் கள்ளத்தனம் வெளியானதைத் தானே அறிந்து கொண்டு சிரித்தானாம். இப்படி ஆய்ச்சி ஒருத்தி சொல்ல, யசோதைக்கும் சிரிப்பு வந்துவிடுகிறது. குற்றம் சாட்டிக் கொண்டிருந்த ஆய்ச்சியும் சிரிக்கிறாள்.

அப்போது அவர்களுக்குத் தெரியாமல் அந்தப் பக்கத்திலே வந்து நின்றுகொண்டிருந்த கண்ணனும் சேர்ந்து சிரிக்கிறான். உடனே ஆய்ச்சி, 'இப்படித்தான் அப்போதும் சிரித்தான்' என்கிறாள். 'இப்போது நீ ஏன் சிரித்தாய்?' என்று தாய் கேட்க, 'என் கதையை இவள் ரஸமாக அநுபவித்துச் சொல்லுகிறாள்!' என்று பதில் சொல்லிக் கண்ணன் மறுபடியும் சிரிக்கிறான்.

ஆம்; கண்ணன் கைவரிசைகளைக் கிருஷ்ண லீலை களில் கோபிகைகள் பிரேமையோடு ரஸித்து அநுபவித்துப் பேறுபெற்றார்கள். அந்த லீலா சுகத்தைப் பெரியாழ்வாரும் கண்ணனின் தாயாகி அநுயவித்துப் பெரும்பேறு பெறுகின்றார். கண்ணனுடைய விளையாட்டுக் களந்தானே ஆய்ப்பாடியும் உலகமும் பெரியாழ்வார் உள்ளமும்!

Koviloor Digital Library

தாயுள்ளமும் காதலுள்ளமும்!

கண்ணன் மாடு மேய்க்கப் போகிறான். ஆத்மாக்களாகிய பசுக்களையும் கன்றுகளையும் மேய்க்கவேண்டியது அவன் கடமைதானே! இது யசோதைத் தாய்க்குத் தெரியாமல் இருக்கலாம்; பெரியாழ்வாரின் தாயுள்ளத்திற்குத் தெரிந்தது தானே. எனினும் அன்பு கண்ணைப் பொத்தக் கலங்குகிறது, தாயுள்ளம். 'கல்லும் முள்ளுமான காட்டில் போகவிட்டேனே கண்ணுக்கினியானை!' என்று புலம்புகிறாள்.

மாலைப்பொழுது. கன்றுகள் முன்னாக வந்து கண்ணன் முகம் காட்டுகிறான். 'ஐயோ! கன்றின் பின் போன காலும் வெதும்பிக் கண்ணும் சிவந்து போச்சே! கண்ணா, கண்ணே!' என்கிறாள் தாய். 'இனியாவது குடையும் செருப்பும் புல்லாங் குழலும் கொண்டுபோக வேணும்' என்று கொஞ்சுகிறாள்.

'இனி நீ கன்றின் பின் போக வேண்டாம், கண்ணா! கோலம் செய்துகொண்டு இங்கேயே இருந்துவிடு' என்று கூடக் கெஞ்சுகிறாள் தாய்.

கண்ணன் வழக்கம்போல் மேய்ச்சல் காட்டுக்குப் போய்த் திரும்பி வருகிறான் தோழன்மார்களுடன். அலங் காரமாய் வருகிறான். மயில் தோகையால் குடைகள், வாத்தியங்கள், இலைக்குழல், புல்லாங்குழல், கீதங்கள் - இப்படியெல்லாம் என்னவேஷம்! என்ன வேஷம்! பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். ஆம்; அந்தக் கண்க ளெல்லாம் மொய்த்துக்கொண்டிருக்கின்றனவே, சாளர வாசல்கள் எல்லாம்! கோபிகைகளின் நிலை இது.

வேறொரு மாலைப்பொழுது. தெருவில் குழலிசை கேட்கிறது.

என்றும் இவனை ஒப்பாரை நங்காய்!
கண்டறியேன் ஏடி! வந்துகாணாய்

என்று கோபிகை ஒருத்தி வீட்டுக்குள்ளேயே இருக்கும் தன் தோழியைக் கூவியழைக்கும் வீணாகானம் போன்ற குரலும்

Koviloor Digital Library

காதில் விழுகிறது. நேற்று இவள் பார்த்த கண்ணனே இன்று பார்க்கும் கண்ணனுக்கு ஒப்பாகமாட்டானாம்! நாளுக்கு நாள் அப்படிப் புதுமை புதுமையாக வளர்வதுபோல் தோன்றுகிறது அந்த அழியா அழகு இந்தக் கட்டழகிக்கு!

ஒரு சதியாலோசனை

இந்த அழகனது வாயில் இளஞ்சிரிப்பை, குறும்புச் சிரிப்பை மறுபடியும் எப்படிக் காணலாம்?' என்று சில கோபியர் ஆலோசித்துப் பார்க்கிறார்கள். இவர்கள் வயதில் முதிர்ந்தவர்கள் அல்லர்; ஆனால் தைரியத்தில் முதிர்ந்தவர்கள்.

இவர்களின் தலைவி. தான் உகந்த ஒரு தோழியை நோக்கி,

அந்தம்ஒன் றில்லாத ஆயப்பிள்ளை
அறிந்தறிந்(து) இவ்வீதி போதுமாகில்,
'பந்துகொண்டான்!' என்று வளைத்துவைத்துப்
பவளவாய் முறுவலும் காண்போம் தோழீ!

(அந்தம் - முடிவு. போதுமாகில் - போவானாகில். முறுவல் - புன்சிரிப்பு.)

என்று ஆலோசனை சொல்லுகிறாள்.

ஆயப்பிள்ளையின் அழகுக்கும் முடிவே இல்லை, குறும்புத் தனத்திற்கும் முடிவே இல்லையாம். தங்கள் உள்ளங்களை அந்த முகம் என்ன பாடு படுத்துகிறது என்பதை அறிந்திருந்தும் இப்படியா சோதித்துச் சோதித்துப் பார்க்க வேணும்? ஆகவே அவனுக்கு ஒருபாடம் கற்பிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறாள்.

'இன்னம் ஒரு தடவை இந்தத் தெருவில் வருவானாகில் நாம் அவனை எப்படியாவது வளைத்துக்கொள்ள வேணும்!' என்று சொல்லி, அதற்கு ஒரு தந்திரமும் சொல்லுகிறாள். 'நாங்கள் பந்து விளையாடிக் கொண்டிருக்கும்போது எங்கள்

Koviloor Digital Library

பந்தை நீ பறித்துக்கொண்டு போனாயே! கள்ளப்பிள்ளாய்!' என்று குற்றஞ்சாட்டியவண்ணம் வளைத்துக்கொள்ள வேண்டுமாம்.

இந்தத் தந்திரத்தை அவனால் கண்டுபிடிக்க முடியாதா? 'அவன் கண்டுபிடித்து இளநகை அரும்புவான்; பவளம் போன்ற அதரத்திலே முத்துச் சுடர்போலத் தவழும் அந்த மோகனக் குறும்புப் புன்னகையைக் காண்போம்!' என்கிறாள். அந்தப் புன்னகையைக் கண்ணாரக் கண்டு அநுபவிப்பதே பாக்கியம் என்பது குறிப்பு.

★ ★ ★ ★

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்துகொண்டே பெரியாழ்வார் கண்ணனுடைய கைவரிசைகளைக் காண்கிறார்; கபட நாடகங்களைக் காண்கிறார்; இளநகையை அநுபவிக்கிறார்; காதலை அநுபவிக்கிறார். தீராத விளையாட்டுப் பிள்ளை சிரிப்பும் விளையாட்டுமாக அவதார நோக்கம் நிறைவேறச் செய்வதைக் கண்டு காட்டுகிறார்.

கல்யாண குணங்களால் ஆட்கொள்வதுபோல் கண்ணன் விளையாட்டாகக் களியாட்டங்களாலும் ஆட்கொள்வதையும், உள்ளங்களைத் தூய்மை செய்து பக்திமயமாக்குவதையும் பெரியாழ்வார் காண்கிறார், காட்டுகிறார். தவநெறியால் உத்தம முனிவர்களும் காணமுடியாத பக்தியைக் கோபியர் - காதலில் காட்டிவிடுகிறார்.

ஜீவாத்மாக்களுடன் பரமாத்மாவின் விளையாட்டே ஸ்ரீகிருஷ்ணலீலைகள். பரமாத்மா ஜீவாத்மாவுடன் விளை யாடும் கண்ணாம்பூச்சி விளையாட்டே, புராண மனோ பாவத்தில், கவிஞர் கற்பனையில், கண்ணனது பல்வேறு திருவிளையாடல்களாக வெளிப்படுகிறது என்பதற்கும் பெரியாழ்வாரின் திருமொழி சான்று தருகிறது.

★

Koviloor Digital Library

15

இவர் காட்டும் வேணுகோபாலன்

(வேய்ங்குழல் இன்பம்)

'ஏழ் இசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய்' என்று தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்பிரானைக் குறிப்பிடுகிறார். பெரியாழ்வாருக்கோ கண்ணன் குழந்தையின்பமாகவும் வேய்ங்குழலின்பமாகவும் இருக்கிறான்.

மணிவாசகப் பெருமான் தம் இஷ்டமூர்த்தியை,

இன்னிசை வீணையில்
இசைந்தோன் காண்க

என்பர்; பெரியாழ்வாருக்கோ புல்லாங்குழலின் அமுதகீத வலையில் விண்ணும் மண்ணும் இசைகின்றன; ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இசைந்து காண்கின்றன.

வேய்ங்குழலின் விசித்திரம்

புல்லாங்குழலை இயற்கையோடு இசைந்த ஓர் எளிய இசைக்கருவி எனலாம். காட்டில் வளர்ந்திருக்கும் மூங்கிலில் வண்டுகள் செய்த துளைகளினூடே காற்று வீசும்போது இயற்கையாக எழுந்த இனிய ஒலியை அநுபவித்த மக்கள் புல்லாங்குழலை அமைத்துக்கொண்டனர் என்று ஊகிக்கலாம். இசைக் கருவிகளில் குழல் முதல் முதல் தோன்றியிருக்கக் கூடும்.

Koviloor Digital Library

குழந்தைகளின் மழலைச்சொல் இன்பத்தைக் கூறவந்த திருவள்ளுவர், 'குழல் இனிது, யாழ் இனிது' என்று குழலை முன்வைத்துக் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. கொன்றைப் பழத்தைத் துருவித் துளைத்துச் செய்த கொன்றைக்குழல் முதலியவற்றைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதும் இத்தகைய இசைக் கருவியின் தொன்மைக்குச் சான்றுதான்.

எளிய இசைக் கருவியாக இருந்தும் உயர்ந்த இசையை அளிக்கவல்ல குழல் பேரருள் சுரக்கும் கண்ணனது எளிமைக்கும் பரத்வத்திற்கும் சீலத்திற்கும் கோலத்திற்கும் ஒருங்கே பொருத்தமானதுதான்.

இந்தக் குழலோசை வழியே கண்ணன் புரிந்த அற்புதத்தைப் பெரியாழ்வார், தாமும் கோபிகையாகிக் கேட்டு அநுபவித்து, அந்த அநுபவத்தை நம் பரதகண்டத்தைத் தன்னகத்தே கொண்ட பெருநிலப் பகுதியிலுள்ள நங்கைமார்க்கெல்லாம் இன்சொல் அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்புகிறார். 'இமய வெற்பில் மோத - இசைகள் பாடி வாழ்வோம்!' என்று தம் தமிழிசைகள் குறித்துக் கனவு கண்டார் பாரதியார். பெரியாழ்வாரின் பொற்கனவு ஜம்புத்வீபம் (நாவலம் பெரியதீவு) முழுமையும் தழுவி அருள்புரிய விரும்புகிறது.

குழலோசை வழிகாட்டியழைக்க, கோவலர் சிறுமியர் கட்டுப்பாடுகளை மீறி வந்து இசைவடிவம்போல் இருக்கும் கோபாலனைப் பூமாலைகள் சூழ்வதுபோல் வரிசை வரிசையாகச் சூழ்ந்துகொண்டு, நாணித் தலைகவிழ்ந்து நிற்கிறார்களாம்.

இடது மேல்வாய்ப்புறத்தை இடது தோளோடு சாய்த்து இருகையும் குழலோடு சேரப் புருவம் நெரிந்து மேல் ஏற, வேணுகானம் செய்கிறான் கண்ணன். மேய்ந்து கொண்டிருக்கும் பசுக்கள் வெகுதூரம் விலகிக் காட்டிலே

Koviloor Digital Library

போய்விடாமல் திரும்பி வந்து சேரக் குழல் ஊதும்போது, அந்தப் பசுக்களுக்கு முன் வந்து சேருகிறார்கள்,

மடமயில்களொடு மான்பிணை போலே
மங்கைமார்கள் மலர்க்கூந்தல் அவிழ.

(மடமயில்களோடு - அழகிய மயில்களோடு - மான்பிணை - பெண் மான்கள்.)

'அமுத கீத வலை'

ஆய்ப்பாடிக்கும் பரமபதத்திற்கும் இளவரசு என்கிறார் குழலூதும் கோபாலனை. கோபிகைகளுடன் தெய்வப் பெண்களும் குழலோசை வழியே வந்து சூழ்ந்து நெருங்கிக் கூந்தல் அவிழ நின்று ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்களாம்.

நாரதரும் தும்புருவும் வீணாகானத்தில் நிபுணர் களல்லவா? அவர்களும் தங்கள் வீணைகளை மறந்து நிற்கிறார்கள். கந்தர்வர்கள் என்ன பாடுகிறார்கள்!

அம்பரம் திரியும் காந்தப்ப ரெல்லாம்
அமுத கீத வலையால் சுருக்குண்டு,
'நம்பரம் அன்(று)'என்று நாணி மயங்கி
நைந்து சோர்ந்து கைம்மறித்து நின்றனரே!

(அம்பரம் - ஆகாசம். காந்தப்பர் - கந்தர்வர். நம்பரம் அன்று - இனி நமது பாரமன்று, பாட்டுத் தொழில். கைம்மறித்து - கையை மடக்கிக்கொண்டு.)

இப்படியெல்லாம் அந்த இசை யுலகத்திலே தாம் கண்ட புதுமைகளை, அற்புதங்களைக் காட்டி நம்மையும் கண்டு கொள்ளச் செய்கிறார். மண்ணும் விண்ணும் கடந்து பொங்கி அமரலோகத்திலும் (சொர்க்கத்திலும்) அலைவீசும் அமுத கீதத்தைக் கண்டதும் தேவர்களும் தேவாமிர்தத்தை மறந்து இந்த இசையமுதம் பருகிய வண்ணம் ஆய்ப்பாடி நிறையப் புகுந்துவிடுகிறார்களாம்.

Koviloor Digital Library

இப்படிப் புகுந்து திரண்டு கண்ணனை மொய்த்துக் கொண்டு எத்தகைய ரஸிகசிகாமணிகள் ஆகிவிடுகிறார்கள், பாருங்கள்.

செவிஉணாவின் சுவைகொண்டு மகிழ்ந்து
கோவிந்தனைத் தொடர்ந்துஎன்றும் விடாரே!

(செவிஉணா - செவியால் உண்ணப்படுவது.)

உயிர்க்குலம் ஒன்றே

அழகிய விரல்கள் குழலின் துளைகளைப் புதைத்துப் புதைத்துத் திறக்கின்றன. அந்தத் துளைகள்தோறும் ஓடுகின்றன கண்கள். உலாவி உலாவி ஊதியபின் ஒரு மரத்தடியில் நின்று குழலூதுகிறான் கோபாலன். இப்போது வந்து சேரும் விநோத ரஸிகர்களைத்தான் பாருங்கள்:

சிறுவி ரல்கள் தடவிப் பரிமாறச்,
செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிக்க,
குறுவெ யர்ப்புரு வம்குடி லிப்பக்,
கோவிந்தன் குழல்கொ(டு) ஊதின போது;
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து, படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்(து) இரங்கிச் செவிஆட்ட கில்லாவே.

(கோட - கோண. வளைய; (இங்கே) ஒருவகையாக மேல் நோக்கி வளைய. செய்ய - சிவந்த. கொப்பளிப்ப - குமிழியிட. குறுவெயர்ப் புருவம் - சிறு வேர்வைத் துளிகள் அரும்பின புருவம். குடிலிப்ப - வளைய. கொடு -கொண்டு. கணம் - கூட்டம். படுகாடு கிடப்ப - வெட்டி வீழ்த்திய காட்டு மரங்கள் ஒருசேர விழுந்து கிடப்பதுபோலச் செயலற்றுக் கிடக்க. கறவை - கறக்கும் பசுக்கள். ஆட்டகில்லாவே - அசைக்கவும் மாட்டாதே நின்றன.)

Koviloor Digital Library

என்ன ரஸிகர்கள்! என்ன கீதம்! பகுத்தறிவில்லாத பிராணிகளையும் வசீகரித்து உயிர்க்குலமெல்லாம் சகோதர தர்மம் என்ற ஒரு தெய்விக பாசத்தால் கட்டுண்டு கிடக்கச் செய்துவிடுகிறது இந்தக் குழலோசை!

கீதமழை பொழிகின்றது கண்ணன் என்ற மேகம். இன்னும் எத்தகைய விசேஷமான ரஸிகர்களை, விருந்தாளி களை வரவழைக்கிறது, பாருங்கள்:

திரண்டெழு தழைம ழைமுகில் வண்ணன்,
செங்கமல மலர்சூழ் வண்டினம் போலே
சுருண்(டு) இருண்ட குழல்தாழ்ந்த முகத்தான்
ஊது கின்ற குழலோசை வழியே.
மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து,
மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர,
இரண்டு பாடும் துலுங்காப் புடைபெயரா,
எழுதுசித் திரங்கள் போலநின் றனவே!

(திரண்டு எழு தழை - திரண்டு மேலெழுந்து தழைக்கும். மழைமுகில் - நீருண்ட காளமேகம். சோர - நழுவி விழ. இரண்டு பாடும் - (இங்கே) முன்னும் பின்னும். துலுங்கா - அசையாமல். புடைபெயரா - பக்கத்திலும் இடம் பெயராமல்.)

இந்த 'முகில் வண்ணன்' இசை வண்ணன்தானா? இவன் பெயரும் இசைதானா? வடிவமும் இசைதானா? வயிற்றுக்கு இரைதேடும் முயற்சிகளெல்லாம் சுகதுக்கங்களெல்லாம் இந்த இசை வெள்ளத்திற்கு முன் நிற்க முடியுமா?

இயற்கை மோகித்துப் போகிறது!

மயிலின் தோகையால் தன் முடியை அலங்கரித்துக் கொண்டு நிற்கும் இசைவடிவை, ஆயர் பெருமானைக் கடைசியாக ஒருமுறை காட்டுகிறார் பெரியாழ்வார்.

Koviloor Digital Library

அரையிலே பொன்னிற ஆடை; நகைகளும் அணிந்திருக்கிறான். ஆனால் புல்லாங்குழலும் வாயுமாகத் தோன்றும் அந்த நீலரத்தின மேனிதானே ஆபரணங்களுக்கும் ஆபரணம்!

அன்புருவாகிய அந்த அழகே உருகி வருவதுபோல வருகிறது மோகன இசை. இயற்கை மோகினியே மோகித்துப் போகிறாள்;

கருங்கண் தோகை மயிற்பீலி அணிந்து,
கட்டிநன்(கு) உடுத்த பீதக ஆடை
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவன்ஒரு வன்குழல் ஊதின போது,
மரங்கள் நின்று மதுதாரை கள்பாயும்!
மலர்கள் வீழும், வளர்கொம்பு கள்தாழும்;
இரங்கும், கூம்பும்; திருமால் நின்றநின்ற
பக்கம் நோக்கி அவைசெய் யும்குணமே!

(பீலி - இறகு. பீதகம் - பொன்னிறம். அருங்கலம் - ஆபரணம். மது - தேன். கொம்பு - கிளை. கூம்பும் - குவியும்.)

குழலை வென்ற குளிர் வாயினர்

இந்தக் காட்சியைப் பார்க்கப் பார்க்க, நினைக்க நினைக்க இந்திரியங்களெல்லாம் கண்களாகின்றன. சிந்தையாகின்றன. குணங்கள் பரமஸாத்விகமாகிவிடுகின்றன. இவரது வேணுகானப் பாடல்களைப் பாடிப்பாடி அநுபவிக்கிறவர்களும்,

குழலை வென்ற குளிர்வா யினராகிச்
சாது கோட்டியுள் கொள்ளப் படுவாரே!

(சாது கோட்டி - சாதுக்களின் கோஷ்டி அல்லது திருக்கூட்டம்.)

என்று உறுதி கூறுகிறது பதிகத்தின் இறுதிச் செய்யுள்.

Koviloor Digital Library

குழலின் கீதை

இந்தப் பதிகத்திலே பெரியாழ்வாரின் வாழ்க்கைத் தத்துவத்தை, வாழ்க்கைக் காட்சியைக் குழலிசையின் உபதேசமாகக் காண்கிறோம். இங்கே சோகம் நிறைந்த உலகத்திற்குக் குதூகலமான நற்செய்தியைக் கேட்கிறோம்.

இந்தக் குழலோசை வழியே, 'பொருளற்ற பந்தங் களையும் கட்டுப்பாடுகளையும் விட்டு அன்பு வழியே வந்துவிடுங்கள்' என்ற செய்தி வந்து காதில் விழுகிறது. 'முரண்டுகளையும் முரண்பாடுகளையும் கடந்து உங்கள் வாழ்வு இசைமயமாகவேண்டும்' என்று இசைக்கிறது கண்ணன் குழல்.

'வாழ்க்கை என்றும் புதிதாக, என்றும் இனிதாக, என்றும் அழகாகத் திகழவேண்டும்' என்று இசைக்கிறது குழலிசை. 'பிரிவோ வெறுப்போ பகையோ பலக்குறைவோ வேண்டிய தில்லை, அவசியமில்லை' என்று இசைக்கிறது.

'உலகத்தை விட்டு ஓடவேண்டாம்; ஆணவத்தை விட்டு ஓடி வாருங்கள். தன்னலமான செயல்களை விட்டுத் தொண்டு நெறிக்கு வந்து சேருங்கள்' என்று பாடுகிறது வேணுகானம். 'கைங்கரியமாகக் கனிந்துவிடாத பக்தி, மலடு!' என்று பாடுகிறது.

'பண்டைப் பிரிவுகளைவிட்டுத் தொண்டக்குலம் புகுந்து ஒன்றுபடுவீர்! தொண்டக்குலமே ஈசுவர குடும்பம்' என்று பாடுகிறது. 'கூடும் மனமுடையவர்களும் பாடும் மனமுடையவர்களும் இசைந்து சரணாகதி செய்து, சகோதர தர்மத்தை நிலைநிறுத்த வேண்டும்' என்று பாடுகிறது.

'இறையருள் என்ற அமுதகீத வலையால் சுருக்குண்டு ஒத்து வாழ்வீர்' என்கிறது. இந்த வலையில் விண்ணும் மண்ணும் ஒன்றுபடும் என்று உணர்த்துகிறது.

'இயற்கையோடு இசைந்து, இறைவனோடு இசைந்து வாழ்வதே வாழ்வு' என்று பாடி, மண்ணகத்திலே விண்ணகம்

Noolaham Digital Library

காட்டுகிறது கண்ணன் குழலிசை. 'நீங்களா கடவுளைத் தேடுகிறீர்கள்? அன்புக் கடவுளல்லவா உங்களைத் தேடித் தவிக்கிறான்?' என்று இசைக்கிறது.

அண்ட கோடிகளை அருள் வெளியிலே கூத்தாடச் செய்யும் அருட்கீதமே கண்ணனின் வேணுகானம். தன் அருள் வெளியிலே அருளாளர் உள்ளங்களையும் கவிவாணர் உள்ளங்களையும் தூய அறிவாளர் உள்ளங்களையும் பரம ரஸிகர்களின் உள்ளங்களையும் ஆனந்தக் கூத்தாடச் செய்வதும் கண்ணனின் வேய்ங்குழலின்பமே.

இந்தக் குழலின்பத்தின் வாயிலாகக் கண்ணன் கீதை பேசுகிறது; பெரியாழ்வாரின் வாழ்க்கையும் பேசுகிறது.

குழல் ஒரு நினைவுக் குறி

கண்ணனின் புல்லாங்குழல் பக்திமதத்தின் ஒரு தனிப்பெருங்குறி. உலகப் பெருஞ்சமயங்களில் அந்த அந்தச் சமய மேதைக்கு இசைவான நினைவுக் குறிகளைக் காணலாம்.

கிறிஸ்துமதத்தின் தனிக்குறி சிலுவை. இது தியாகத்தின் அறிகுறி. இரக்கம் என்ற பண்பு நீண்டகாலமாகத் தவம் கிடந்ததாம் ஓர் உருவம் பெறுவதற்கு. கடைசியாகக் கிறிஸ்து பெருமானாக அவதரித்ததாம். அந்த இரக்கம், அந்த அன்பு தன்னை மகத்தான தியாகத்தால் மெய்ப்பித்துக்கொள்ளச் சிலுவையை நாடியது.

பார்ஸிகளின் மதக்கொள்கைக்கு நெருப்பு அறிகுறி. வாழ்வின் தூய்மைக்குச் சிறந்த நினைவுக்குறி. பாவங்களைச் சுட்டெரித்து வாழ்க்கையை மாற்றுயர்ந்த தங்கமாக்குவது ஸொராஸ்டர் என்ற மதகுருவின் நெருப்பு.

கிறிஸ்தவர்களுக்குச் சிலுவை போலவும், பார்ஸிகளுக்கு நெருப்பைப் போலவும், பக்தர்களுக்குக் கண்ணன் புல்லாங்குழல் சிறந்ததொரு நினைவுக்குறியாக உதவக்கூடும். பெரியாழ்வார் தமது திருமொழிப் பாசுரங்களில் எல்லாம்

Koviloor Digital Library

வெளியிட்டு வரும் கருத்துக்களையும் கொள்கை களையும் ஒரு வசீகரமான இசைச் சித்திரமாகத் தமது வேணுகானப் பதிகத்தில் வெளியிட்டிருக்கிறார் எனலாம். இப்பெரியாரின் வாழ்க்கைத் தத்துவத்திற்கே கண்ணனது வேய்ங்குழலை ஓர் அறிகுறியாகக் கொள்ளலாம்.

இவரது திருமொழியின் முற்பகுதியில் கண்ணனைப்பற்றிய பிள்ளைத் தமிழ்ப் பாடல்களைப் பார்க்கிறோம். இப்பகுதியின் இறுதியில் ஒரு சிகரமாக அமைந்திருக்கிறது வேணுகாணப் பதிகம்.

பிள்ளைத் தமிழ்ப் பாடல்களிலும், இவர் திரு மொழியின் மற்றப் பகுதியிலும் இவரது சிகரஜோதியாகிய கவிதை, வேய்ங்குழல்போல் இசைப்பதைக் கேட்கிறோம். இக்கவிதைக்கும் இவரது சொற்சித்திரங்களுக்கும் உயிராக ஊடுருவிக் கிடக்கிறது.

பொன்னைக் கொண்(டு) உரைகல் மீதே
நிறம்எழ உரைத்தாற் போல
உன்னைக் கொண்(டு) என்நா அகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்;
உன்னைக் கொண்(டு) என்னுள் வைத்தேன்,
என்னையும் உன்னில் இட்டேன்!
என்அப் பா!என் இருடீ கேசா!
என்உ யிர்கா வலனே!

(நாஅகம்பால் - நாவினுள். மாற்றுஇன்றி - மாற்று அழியும்படி. இருடீகேசா - என் இந்திரியங்களை (வசப்பட்டு ஒழுகும்படி) நியமிக்க வல்லவனே. உயிர் காவலனே - உயிரைக் காக்க வல்லவனே.)

என்ற தனிப்பெருங் கொள்கை. இது வேணுகானப் பாடல்களின் ஜீவநாதமாகவும் அமைந்திருக்கிறது எனலாம்.

★

26135

Koviloor Digital Library

Koviloor Digital Library